விலை ரூபா 20 | பக்கங்கள் 28

காஸ் நிலையம் வெடித்து 100 பேர் சாவு



பக். 15

# உதயன்

26c - 29c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 030 | வள்ளுவர் ஆண்டு 2046 | மார்கழி 10, சனிக்கிழமை 26.12.2015

# இலங்கையின் நீதிக்கட்டமைப்பு பலவீனமானது

## இதனாலேயே குற்றங்கள் நிரூபிக்கப்படாமல் கைதிகள் தடுப்பில் உள்ளனர் என்கிறார் கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, டிசெம்பர் 26
இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்பு பலவீனமாகவுள்ளமையால் பெரும்பாலான குற்றச்சாட்டுக்கள் சரியாக நிரூபிக்கப்படாமல் சிறைக் கைதிகள் தடுத்துவைக்கப்படுகின்றனர்.
இவ்வாறு கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.
அத்துடன் சட்டத்தரணிகள் வழக்குகளைப் பிற்போடுவதனால், உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளை வருடக்கணக்கில் தாமதப்படுத்துகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நத்தார் தினத்தை முன்னிட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்று இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதில் கர்தினால் மல்கம் ரஞ்சித் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
பெரும்பான்மையான நேரங்களில் எமது நாட்டிலுள்ள நீதிக் கட்டமைப்புக்கமைய குற்றச்சாட்டுக்கள் சரியாக நிரூபிக்கப்படாமல் சிறைக்கைதிகள் இருக்கின்றனர். இல்லாவிட்டால் பல்வேறு காரணங்களால் சிறைக்குச் சென்றவர்கள், தண்டப்பணம் செலுத்த முடியாதவர்கள், நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் சரியாக முன்னெடுக்கச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் இருக்கின்றனர்.
இதனூடாக நான் நீதித்துறையை அவமரியாதைக்கு உட்படுத்தவில்லை. எமது நீதித்துறைக் கட்டமைப்பு மிகவும் பலவீனமாகவுள்ளது என்றே பக். 24



"வழக்கு விசாரணைகளை மேற்கொண்டு அவற்றை முடிக்கவேண்டும். இல்லா விட்டால், தண்டனை வழங்க வேண்டும். இவை எதையும் செய்யாமல் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. இதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்."

# சம்பந்தன் - விக்கி நேற்று கொழும்பில் சந்திப்பு


## இணைந்து செயற்படுவது குறித்துப் பேச்சு

கொழும்பு, டிசெ. 26
தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க இணைந்து செயற்படுவது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் கொழும்பில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
தமிழ் மக்கள் பேரவையின் இணைத் பக். 22

# ஜனவரி 4 இல் கொழும்பு வருகின்றார் பாக். பிரதமர்

## 10 உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவார்

கொழும்பு, டிசெ.26
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அடுத்த மாதம் 4ஆம் திகதி கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
இந்தப் பயணத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையில் 10 புரிந்துணர்வு உடன்பாடுகளும் கையெழுத்திடப்படவுள்ளன என இலங்கை வெளிவிவகார



அமைச்சு தெரிவித்துள்ளது. பக். 04

# காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்கு கால அவகாசம்

## ஜனாதிபதியிடம் கோரவுள்ளாராம் பரணகம

கொழும்பு, டிசெ.26
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் எதிர்வரும் பெப்ரவரி 12ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகிறது.
எனினும் தமது ஆணைக் குழுவின் விசாரணைப் பணிகளை முன்னெடுப்பதற்கு மேலும் கால அவகாசம் வழங்குமாறு தாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக மக்ஸ் வெல் பரணகம நேற்று உதய னுக்குத் தெரிவித்தார்.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் எதிர்வரும் பெப்ரவரி 12ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. அதன்பின்னர் மேற்படி ஆணைக் குழுவின் பதவிக் காலத்தை நீடிப்பதா அல்லது கலைப் பக். 22

# ஆளுநருக்கான ஒதுக்கீட்டில் 35 மில். ரூபா நிதி திரும்பியது

யாழ்ப்பாணம், டிசெ. 26
வட மாகாண ஆளுநருக்கு 2015 ஆம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் 35 மில்லியன் ரூபாவினை ஆளுநர் மீளவும் வடக்கு மாகாணசபையிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கான நிதியாக இந்த வருடத்துக்கென 87 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.
குறித்த நிதியில் கடந்த நவம்பர் மாதம் வரை செலவு செய்யப்பட்ட நிதி போக, எஞ்சிய நிதியில் இந்த மாதத்துக்கு செய்யக்கூடிய வேலைத் திட்டங்களுக்கான நிதியையும் தவிர்த்து பக். 24

முச்சந்தி முரளி



இப்பவாவது ஒத்துக்கிறியளோ உங்கட நிலையை..

# ஆழிப் பேரலை இடரில் சிக்கி உயிரிழந்தோருக்கு அஞ்சலி

## இன்று மு.ப. 9.25 மணிக்கு நாடு பூராகவும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26
சுனாமிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தேசிய பாதுகாப்பு தினமான இன்று மு.ப 9.25 மணி முதல் மு.ப 9.27 மணிவரையான இரண்டுநிமிட மௌன அஞ்சலிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இந்த இரண்டு நிமிடங்கள் அனைவரும் மௌனமாகவிருந்து அனர்த்தங்களின்போது உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்களை முன்னெடுப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு யாழ்.மாவட்ட அரசஅதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். பக். 22



(கோப்புப் படம்)

# ஜனவரி ஆரம்பத்தில் அமைச்சரவை மாற்றம்

## முக்கிய அமைச்சரொருவர் பதவியிழப்பாரெனத் தகவல்

கொழும்பு, டிசெ.26
அடுத்த மாத ஆரம்பத்தில் அமைச்சரவையைப் பெரியளவில் மாற்றியமைக்க ஜனாதிபதியும் பிரதமரும் திட்டமிட்டுள்ளதாக, அரச தரப்புத் தகவல்களைச் சுட்டிக்காட்டி கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
குறித்த மறுசீரமைப்பு தற்போது அமைச்சர்களாக உள்ளவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்த பக். 24

### உள்ளூராட்சி தேர்தல் ஓகஸ்ட் வரை தள்ளிப்போகும்

கொழும்பு, டிசெ.26
ஏப்ரல் நடுப்பகுதிக்குள் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பக். 22

### பரந்தன் விபத்தில் குடும்பஸ்தர் சாவு

கிளிநொச்சி, டிசெ.26
பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் கரைச்சிப் பிரதேச சபையின் பணியாளர் ஒருவர் பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 360 கிலோ கஞ்சா இவ்வருடம் மீட்பு

*வடமராட்சிப் பகுதியில்*

யாழ்ப்பாணம், டிசெ.26
வடமராட்சியில் இந்த வருடம் மட்டும் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் 15 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதன் மூலமாக 360 கிலோகிராமுக்கும் அதிகமான கேரளா கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

கடந்த ஜனவரியிலிருந்து இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பொலிஸாரின் அதிரடிச் செயற்பாடுகளால் குறித்த 15 சம்பவங்களும் முறியடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டும் உள்ளனர். ஒரு சிலர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்கு பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கடற்கரையோரங்களில் பொலிஸார் இந்த வருடம் பல்வேறு சுற்றி வளைப்புச் செயற்பாடுகளையும் சோதனைகளையும் நடத்தியிருந்தனர்.

பொலிஸாரின் இந்தத் திடீர் நடவடிக்கைகள் மூலம் ஆள்களற்ற வீடுகளில் இருந்தும் கஞ்சாப் பொதிகளை சந்தேக நபர்கள் கைவிட்டுத் தப்பியோடிய சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அவர்களில் சிலர் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் வடமராட்சியிலும் ஏனைய இடங்களிலும் கஞ்சாப் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

(ற-ஐ-4,109)

# சமைக்கச் சென்றவர் படுக்கையில் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.26
அந்தியயேட்டி வீட்டுக்குச் சமைக்கச் சென்றவர் படுக்கையில் மயக்கமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குளப்பிட்டி கொக்குவில் மேற்கில் நேற்று அதிகாலை நடந்துள்ளது. ஆனைக்கோட்டை புளியங்கண்டியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான துரைராசா வரதராசா (வயது-59) என்பவரே உயிரிழந்தவராவார்.

அந்தி யேட்டிக்குச் சமைக்கவென அங்குள்ள வீடு ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு அவர் சென்றுள்ளார். அங்கு சில பணிகளை மேற்கொண்டு விட்டு இரவு நித்திரைக்குச் சென்றுள்ளார்.

அதிகாலையில் சமையலைத் தொடங்கும் முகமாக ஏனையவர்கள் 5 மணியளவில் குறிப்பிட்ட நபரை நித்திரையில் இருந்து எழுப்ப முற்பட்ட வேளையில் அவர் மூச்சுப்பேச்சற்ற நிலையில் காணப்பட்டுள்ளார்.

அதனால் அவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு, நீதிமன்றப் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணையை மேற்கொண்ட பின், சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-4,86)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.26
புலோலி வடமேற்கு வில்லிபாதி முருகன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் நிகழ்வு காலை 7 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். (ற)



யாழ். புனித மரியன்னை தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு யாழ்.மறை மாவட்ட ஆயர் தலைமையில் நத்தார் திருப்பலி நடைபெற்றது.

## வீதியில் குவிக்கப்பட்ட கற்களால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.26
வலி.வடக்குப் பகுதியில் தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள வீதியைப் புனரமைப்பதற்காக பல இடங்களில் குவிக்கப்பட்ட கற்கள், இரு வருடங்களுக்கு மேலாகியும் பயன்படுத்தப்படாமலுள்ளது. அதனால் அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்களுக்கு மட்டுமல்ல, வாகனப் போக்குவரத்துக்கு இடையூறும் ஏற்படுகின்றது என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வலி.வடக்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்துக்கும், தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயத்துக்கும் அருகிலுள்ள வீதி பல வருடங்களாகப் புனரமைக்கப்படாதுள்ளது. மழைக் காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியின் நிலை குறித்து மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, வீதியைப் புனரமைப்பதற்காகப் பல இடங்களில் குவிக்கப்பட்ட கற்கள் இரு வருடங்களுக்கு மேலாகியும் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

இதனால் போக்குவரத்து செய்வதில் மக்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு வீதியை விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-115)

## மண்டல பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், டிசெ. 26
நயினாதீவு ஐயப்பன் ஆலய மண்டல பூர்த்தி விழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

அத்துடன் அன்று காலை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள ஐயப்பன் ஆலயத்திலிருந்து இரு முடிதரித்த ஐயப்பன் அடியவர்களின் வீதி உலாவும் நடைபெறவுள்ளது.

இந்த வீதி உலாவில் உள்ளூர், வெளியூர் ஐயப்பன் அடியவர்கள், பக்தர்கள் அனைவரையும் கலந்துகொண்டு, தொடர்ந்து ஆலயத்தில் நடைபெறவுள்ள பூசைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

## நிலா முற்றம் 30

2015 இல் சுயதொழிலாளர்கள் எதிர்கொண்ட சவால்கள் என்னும் தொனிப்பொருளிலான நிலா முற்றம் 30 என்னும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறைப் பேராசிரியர் வி.பி.சிவநாதன் தலைமையில் இன்று சனிக்கிழமை மு.ப 10மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ். நேசன் பொபாலா ரவல்ஸ் அன் றுவர்ஸ் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில், ஆய்வாளர்கள், சமூகவியலாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

## ஆழிப்பேரலையின் 11 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

வலி.வடக்கு,டிசெ.26
ஆழிப்பேரலையின் 11 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு மல்லாகம் துர்க்காபுரத்தில் அமைந்துள்ள சிற்பி எ.வி. ஆனந்தனின் சிற்பக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுச் சிற்பத்தின் முன் நடைபெறவுள்ளன.

இதன் போது மெழுகுவர்த்தி தாங்கிய வழிபாடுகள் நடத்தப்பட்டு தொடர்ந்து ஆழிப் பேரலை, பூமி அதிர்வுகள், வெள்ளப் பெருக்கு, எரிமலைகளின் சீற்றம், காலநிலை மாற்றம் போன்ற இயற்கை அழிவுகள், எதிர்வு கூறப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் துறை சார்ந்தவர்களின் ஆய்வரங்குகளும் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-10,86)

## அடுத்த வருடம் வறிய மாணவர்களுக்கு இலவசமாக பாதணிகள்

கொழும்பு, டிசெ.26
கஷ்டப்பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு தொடக்கம் ஒரு சோடி பாதணிகளை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கஷ்டப் பிரதேச, அதி கஷ்டப் பிரதேச மற்றும் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படும் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு சோடிப் பாதணிகள் வீதம் பெற்றுக் கொடுக்கப்படும் என்று கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அந்தத் திட்டத்துக்கு அமைய அடுத்த ஆண்டில் 6 லட்சத்து 40 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு அந்தப் பாதணிகள் வழங்கப்படவுள்ளதோடு, அதற்கு 64 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-22)

## எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்க சவூதியிடம் கோரிக்கை

இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைப்பதற்கு முன்வருமாறு இலங்கை அரசு சவூதி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ள இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் நிதி நிறுவன பிரதானியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்டிய பகுதியில் குறித்த ஆலையை அமைக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுடன் மேலும் அரச மற்றும் தனியார் வங்கிகளின் பிரதிநிதிகளும் இந்தவிஜயத்தில் கலந்துகொண்டுள்ளதுடன் இலங்கையைப் பாதிக்கும் காரணிகள் குறித்து அந்த நாட்டின் அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர். (ற-ஐ-10)

# நத்தார் தினமான நேற்று 550 கைதிகள் விடுதலை

*யாழ்.சிறையிலிருந்தும் 8 பேர் விடுதலை*

கொழும்பு,டிசெ.26
நத்தார் பண்டிகையை முன்னிட்டு சிறைக் கைதிகளை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். நத்தார் தினத்தன்று கைதிகள் விடுவிக்கப்படுவது இதுமுதன்முறையாகும்.

இதற்கமைவாக சிறு குற்றங்கள் புரிந்த சிறைக்கைதிகளை விடுதலை செய்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டதில் நாடளாவிய ரீதியில் 550 சிறைக் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 சிறைக்கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குறித்த கைதிகளை, யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.பி. பெரேராவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக யாழ். சிறைச்சாலை பிரதான அதிகாரி சீனிவாசகம் இந்திரகுமார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் விடுதலை செய்தனர்.

அத்துடன் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 சிறைக் கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்கள் புரிந்து, நீதிமன்றினால் தண்டப் பணம் அறவிடப்பட்டு, அந்தத் தண்டப்பணத்தைச் செலுத்த முடியாமல் சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற-ஐ-10,101,106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் எழுச்சித் திட்டங்களுக்கு 2 ,142.98 மில்லியன் ரூபா தேவை

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.மாவட்டத்துக்கான வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தால் செய்து முடிக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்களுக்காக மதிப்பீட்டுச் செலவினமாக 2 ஆயிரத்து 142.98 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய நகரத் திட்டமிடல் தொடர்பாக, நகரத்திட்டமிடல் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட உத்தேச செலவின மதிப்பீட்டு அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தால் மாவட்டத்தின் பல பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலேயே அவை மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்தப் பகுதிகளின் தேவை கருதி புதிதாக அமைக்கப்பட வேண்டிய மற்றும் சீர்செய்யப்பட வேண்டிய அரச அலுவலகங்கள், பாடசாலைக் கட்டடங்கள், ஆய்வுகூடங்கள், நூலகங்கள், தங்குமிடங்கள், கழிவகற்றல் பகுதிகள் என்பவற்றுக்காகவே 2 ஆயிரத்து 142.98 ரூபா நிதி தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட வெற்றிடங்களாக உள்ள 288 பதவிகளுக்கும், 27 திவிநெகும முகாமையாளர்களும், 250 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், திவிநெகும வங்கிப்பகுதிக்கு 11 உத்தியோகத்தர்களும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றுக்கு நிதிகோரும் திட்டம் வரையப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி5)

# காணிகள் விடுவிப்புத் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பே முடிவெடுக்கும்

*கூறுகிறார் அமைச்சர் சுவாமிநாதன்*

கொழும்பு, டிசெ.26

வடக்கு, கிழக்கில் அடுத்த வருடம் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்க அரசு தீர்மானித்துள்ள நிலையில், எந்தெந்தக் காணிகளைவிடுவிப்பது என்பது குறித்து பாதுகாப்புத் தரப்பினர் ஆராய்ந்து வருவதாக புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்ததன் பின்னரே எந்தெந்தக் காணிகள் விடுவிக்கப்படும் என்பது தொடர்பாகத் தெளிவாகக் குறிப் பிட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுக்க அரசு விடுத்த அறிவிப்பு குறித்து வினவியபோதே மேற்கண்டவாறு அவர் . கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் அடுத்த வருடம் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பது தொடர்பாக கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப் பத்திரம்சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இதில் 6 ஆயிரம் ஏக்கர் காணிகள் என்று குறிப்பிடுவதைவிட பெருந்தொகையான காணிகள் . விடுவிக்கப்படும் என்று குறிப்பிடலாம்.

இருப்பினும், அந்தக் காணிகள் எவை என இதுவரை இனங்காணப்படவில்லை. எந்தெந்த காணிகளை விடுவிப்பது என்பது குறித்துப் பாதுகாப்புத் தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர். விடுவிக் கப்படவேண்டிய காணிகள் எவை என்பதை அவர்கள் குறிப்பிட்ட பின்னரே அது தொடர்பாக தெளிவாகக் குறிப்பிட முடியும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளும் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் யாழ்ப்பாணத்துக்கு அதிகளவான வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

மேலும், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குளங்களைப் புனரமைத்து, விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. – என்றார். (வ-சி)

# ஜகத் டயஸுக்கு சுவிஸில் பிடியாணை

பேர்ன், டிசெ. 26

வன்னிப் போரில் கடமையாற்றி போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு எதிராக சுவிற்சர்லாந்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளது. இதற்கான பின்னணி உதவிகளை சுவிஸ் ஈழத் தமிழர் பேரவை வழங்கியுள்ளது.

அத்துடன் சுவிஸ் நீதித்துறைப் பணிப்பாளர் அலுவலகம் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு எதிராக பிடியாணை உத்தரவொன்றையும் பிறப்பித்துள்ளது.

இராணுவ சேவையிலிருந்து ஜகத் டயஸ் நேற்றுடன் ஓய்வுபெற்றுள்ள நிலையில், அவருக்கு இனிவரும் காலங்களில் எதுவித வரப்பிரசாதங்களோ, இராஜதந்திர பாதுகாப்போ கிடைக்கப் போவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு எந்தவொரு ஐரோப்பிய நாடும் விசா வழங்கக் கூடாதுஎன்றும் சுவிஸ் தமிழீழ ஒருங்கிணைப்புப் பேரவை கொழும்பிலுள்ள ஐரோப்பியநாடுகளின் தூதரகங்களிடம் கேட்டுள்ளது. (வ)

# இந்தியப் பிரதமர் மோடி நேற்று பாகிஸ்தானுக்கு திடீர் பயணம்

லாகூர், டிசெ.26



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று பாகிஸ்தானுக்கு திடீர் பயணம் மேற்கொண்டார்.

இவரது திடீர் பயணத்திற்கு இந்திய அரசியலில் பெரும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், பாதுகாப்பு காரணமாக இவரது பயணம் இரகசியமாக திட்டமிட்டிருப்பதாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன .

ரஷ்யாவில் அரசு முறைப் பயணமான இந்தியப் பிரதமர் மோடி, அங்கிருந்து ஆப்ககானிஸ்தான் சென்றார். அங்கு நாடாளுமன்ற வளாகத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சி முடிந்ததும், அங்கிருந்து இந்தியப் பிரதமர் பாகிஸ்தானுக்கு திடீரென புறப்பட்டு செல்வதாக அறிவிக்கப்பட்டது. காபூலில் இருந்து மாலை 3.45 மணிக்கு லாகூர் நோக்கி புறப்பட்டார் .

இந்தத்திடீர் பயணம் தொடர்பில் தனது ருவிற்றர் பக்கத்தில் தகவல் வெளியிட்ட இந்தியப் பிரதமர், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை சந்தித்தேன்.

அத்துடன் இன்று (நேற்று) பிறந்த நாள் கொண்டாடும் நவாஸ் ஷெரிப்புக்கு தான் வாழ்த்து தெரிவித்ததாகவும் அவர் ருவிற் செய்துள்ளார்.

இதேவேளை, அணு ஆயுத வல்லமை கொண்ட இரண்டு அண்டை நாடுகளுக்கு இடையில் அமைதிப்பேச்சுக்களை மீண்டும் தொடங்கும் முயற்சியாக, கடந்த மாதம் பாரிஸில் நடந்த பருவநிலை மாற்றப் பேச்சுக்களில், இவ்விரு தலைவர்களும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

கடந்த2004ஆம்ஆண்டுக்குப் பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத் தக்கது. (வ)

வேலைவாய்ப்பு!
அலிசன் நிறுவனத்தின் கொக்குவில், இணுவில் மற்றும் கிளிநொச்சிக் கிளைகளில் பணிபுரிவதற்கு பெண் பயிலுனர்கள் தேவை.
077 986 6409 /021 300 3800

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
2015.12.25 | 1920 | சிவப்பு
கடகம்
வெற்றி இலக்கங்கள்
30 37 41 61
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,000,000/-

422
25-12-2015
02 12 13 29 N
ரூ. 19,047,520/-

Study Engineering
SICHUAN UNIVERSITY-CHINA
100% SCHOLARSHIPS AVAILABLE
*Conditions Apply
Admission Open for the March 2016
# No IELTS
# No Interview
# No Bank Balance
# 100% Visa Success Rate
# Part Time Job Allowed
# Fully English Medium
# Apply with Pending Results
iCS
Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
021 4926222 , 077 3013060
107-B 1/1,Galle Road, Colombo - 06

பாராட்டி வாழ்த்துகின்றோம்

15.12.2015 இல் மகறகம இந்து இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்ற
கலைஞர்களுக்கான கலாபூஷண அரச விருது வழங்கும் நிகழ்வில் கலாபூஷண விருது பெற்ற
வேலணையைச் சேர்ந்த
ந.தங்கவேல்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்
வாழ்த்துவோர்:
ஆனைக்கோட்டையில் வசிக்கும் பெறாமக்கள் ஆகிய திரு. பொன்.கனகரத்தினம் (J.P), சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மருமகன் ஜெயேந்திரகுமார் குடும்பத்தினரும்.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பு[illegible]வருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' P[illegible] Individual Attention
Batch 1 : 28.12.2015
Batch 2 : 30.12.2015
Batch 3 : 02.01.2016
Batch 4 : 04.01.2016
No.15 1/2, Siriampiyady La[illegible]
Hotlines
0777585913, 0777222422, 071429935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை, திருகோணமலைக்கு இணைத்தலைவர்கள் நியமனம்

வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களினதும், ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தகவல் வெளியிடுகையில்,

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக இரா.சம்பந்தனும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக கவீந்திரன் கோடீஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த நியமனங்களை வழங்கியுள்ளார்.

முன்னதாக, மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக சிறீநேசனும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக மாவை சேனாதிராசாவும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக சிறீதரனும், முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக சிவமோகனும், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக செல்வம் அடைக்கலநாதனும், மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக சாள்ஸ் நிர்மலநாதனும் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை, அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவர்களுக்கான நியமனங்கள் மட்டும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## எம்.பிக்களின் ஒரு நாள் கொடுப்பனவு அதிகரிக்காது

நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் 500 ரூபா ஒரு நாள் கொடுப்பனவை 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பது தொடர்பாக அமைச்சரவையில் ஆராயப்படவில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரச ஊடகமொன்று அவரிடம் வினவியபோதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் என்ற வகையில் தனக்கு இவ்வாறான ஒரு விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நாள் கொடுப்பனவை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்தால், அதனைக் கடுமையாக எதிர்ப்பதாக மக்கள் விடுதலை முன்னணி கூறியுள்ளது. (ற)

# குடும்பம் ஒன்று கலைவதை தடுக்கவே முயற்சித்தேன்

*ஹிருணிகா விளக்கம்*

கொழும்பு, டிசெ.26

குடும்பம் ஒன்று கலைக்கப்படுவதைத் தடுக்கவே முயற்சித்தேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

தெமட்டகொட பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டார் என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமது பணியாளர் ஒருவரின் குடும்பம் வெளிநபர் ஒருவரால் சிதைவடையக் கூடிய அளவு பிரச்சினை ஏற்பட்டதால் அதனைத் தடுப்பதற்குத் தாம் முயற்சித்ததாவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தமது பணியாளர்கள் என்றாலும் சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தால் அவர்களை தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது பணியாளர் ஒருவரின் மனைவியுடன் குறித்த இளைஞர் தகாத உறவு கொண்டிருந்தார் என்றும், குறித்த பணியாளரின் மனைவியை, குற்றம்சாட்டப்பட்ட இளைஞர் பலவந்தமாக அழைத்துச் சென்று வைத்திருந்தார் என்றும் குறிப்பிட்டுள்ள ஹிருணிகா, அந்தப் பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளைத் தவிர்ப்பதே தமது நோக்கமாக இருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ற)

## தொடர்ச்சி.....

### ஜனவரி 4இல்

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், பாகிஸ்தான் பிரதமர் கொழும்புக்கு மேற்கொள்ளும் முதலாவது அதிகாரபூர்வ பயணம் இதுவாகும்.

பாகிஸ்தான் பிரதமரின் பயணத்தின் போது, அந்த நாட்டுடன் 10 புரிந்துணர்வு உடன்பாடுகளை செய்து கொள்வதற்கு நேற்றுமுன்தினம் இரவு நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், இளைஞர் விருத்தி, சுகாதாரம், கலாசாரம், மக்கள் தொகை கணப்பெடுப்பில் நவீன தொழில்நுட்ப பயன்பாடு, பண மோசடி தொடர்பான உளவுத்துறை தகவல்களை பரிமாற்றிக் கொள்ளல் மற்றும் பயங்கரவாத நிதி தடுப்பு உள்ளிட்டவை குறித்த ஒப்பந்தத்தில் அடங்குமென இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்காக, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கொழும்புக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இருதரப்பு உறவில் இலங்கை முப்படைகளுக்கான தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை பாகிஸ்தான் நீண்டகாலமாக வழங்கி வருகின்றது. அத்துடன், உள் நாட்டில் இடம்பயர்ந்த மக்களுக்கு வீடுகள் அமைத்து வழங்குவதற்காக, பாகிஸ்தான் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கியதுடன், 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்கிள்ளதாகவும், பாகிஸ்தான் தூதுவர் கூறியுள்ளார். (வ)

**மின்சார கட்டண நிலுவைகளை செலுத்துதல் தொடர்பாக சகல மின்பாவனையாளர்களுக்கான அறிவித்தல்**

யாழ். குடாநாடு முழுவதும் உள்ள இலங்கை மின்சார சபையின் மின் பாவனையாளர்கள் (அரச மற்றும் தனியார்) தங்களது மின்சார நிலுவைகளை 31.12.2015 இற்கு முன்பாக செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறும் மின்துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். செலுத்த தவறும் பட்சத்தில் எந்தவித முன் அறிவித்தலுமின்றி மின் துண்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- மின் பாவனையாளர்கள் தமது மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கு வசதியாகவும் மின்பட்டியலுக்கு பணம் செலுத்தப்பட்ட உடன் வரவு வைப்பதற்கு வசதியாகவும் பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலமைந்துள்ள இ.மி.சபை பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலக வளாகத்திலும் மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி) கிளைகளில் அமைந்துள்ள எமது கரும பீடங்களிலும் பணத்தை செலுத்த முடியும்.
- மின்னிணைப்பு துண்டிக்கப்படும் பட்சத்தில்மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு மின்பட்டியல் நிலுவையுடன் மேலதிகமாக ரூபா 1,100.00 இனை மீளிணைப்பு கட்டணமாக மின் சிட்டையில் செலுத்தப்பட வேண்டும்.

மின் பொறியிலாளர்,
யாழ் பிரதேசம்.

மின் பொறியிலாளர் அலுவலகம்,
யாழ் பிரதேசம்,
இ.மி.சபை, சுன்னாகம்.
(c/28139R)

**சட்டமாணி அனுமதிப் பரீட்சை - 2016**
(திறந்தபல்கலைக்கழகம்)
பரீட்சையில் உயர் புள்ளி பெறுவதற்கான வழிகாட்டல் paper class
ஆரம்பம்: 26.12.2015 - சனி: 3.00pm
D.C.M சென்ரர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகில்,
யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**
1நாள், 3கிழமை, 5கிழமை, 7கிழமை,
2மாத குஞ்சுகள் ஊர் கோழிக் குஞ்சுகள்
விற்பனைக்கு உண்டு.
தொ.பே:077 999 4655

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணம் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் (இந்திய துணை தூதுவர் இல்லம் அருகில்) சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 6740 513

**தாசன் பாம்**
ஊர்க்கோழி,கல்பேட்,வான்கோழி,
அனைத்தும் கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: தாசன் பாம்
இல158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
077 3127498

**ஜீவக வாத தைலம்**
**Jeewaka Vata Thailaya**
முதுகுவலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு,நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும், வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம், காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.
25 ml 150 ரூபா | 50 ml 280 ரூபா | 100 ml 450 ரூபா
Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, Wedagedara Koskandawala Yakkala
Ayu Lic No. 6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact : 071 227 1526
ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567

**பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
கண்டி வீதி, பளை.
பதிவு இல: PA52
பதிவுத்திகதி: 18.03.1972

**கட்டட ஒப்பந்தகாரர் கூறுவிலை கோரல்**
எமது சங்கத்துக்கு தொழிற்சாலைக்கான கட்டடம் ஒன்றை 60X20 அளவில் புதிதாக அமைத்துத் தருவதற்கு கட்டட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன
விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களுடைய விண்ணப் பங்களை எதிர் வரும் 05.01.2015ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **தலை வர், பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி,பளை** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.
குறிப்பு: மேலதிக விவரங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் கடமை நேரத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.
தலைவர்,
பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கண்டிவீதி, பளை.
தொடர்புகளுக்கு:
021 320 7697

**Personal Classes.**
UK இல் படித்த பட்டதாரி ஆசிரியரால் Spoken English with Grammer உங்களின் வசதிக்கேற்ப குறைந்த கட்டணத்தில் வீடுகளில் வந்து கற்பித்து தரப்படும்.
Rony 076 6151 837
உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவச் சான்றிதழுக்காக இரவு காத்திருக்கும் அவலம்

மட்டக்களப்பு, டிசெ.26

மட்டக்களப்பிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தில், மோட்டார் சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக மருத்துவச் சான்றிதழ் பெற்றுக்கொள் வதற்கு வருகை தரும் இளைஞர், யுவதிகள் இரவு வேளையில் தங்கியிருந்தே குறித்த சான்றிதழைப் பெறவேண்டியுள் ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துப் பொதுமக்கள் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இந்த நிறுவகம் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு மருத்துவச் சான்றிதழ் பெறவருவோருக்கு உத்தியோகத்தர்கள் காலை 8.30 இற்குப் பின்னரே சிட்டை வழங்குகின்றனர். அதுவும் ஒரு நாளில் 100 பேருக்கே இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

தினமும் இந்த நிலையத்திற்கு 300 க்கும் மேற்பட்டோர் வருகை தருகின்ற நிலையில் 100 பேருக்கே பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனையவர்கள் திரும்பிச் செல்ல வேண்டிய நிலையேற்படுகின்றது - என்றனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இரவு வேளைகளில் குறித்த நிறுவகத்துக்கு வரும் இளைஞர் யுவதிகள் வீதிகளிலேயே இரவைக் கழித்து வருகின்றனர். இவ்வாறு இரவு வேளைகளில் கண்விழித்து மறுநாள் சிலவேளைகளில் சிட்டை கிடைக்காமல் திரும்பிச் செல்ல வேண்டிய நிலையேற்படுகின்றது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகளவானோர் இவ்வாறு பெரும் சிரமங்களை எதிர்கொள்வதன் காரணமாக மாவட்டத்தில் மேலும் சில நிலையங்களைத் திறக்க இந்த நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-10)

## 11 மாதத்தில் 15 லட்சம் சுற்றுலாப் பயணிகள்

இந்த வருடத்தின் முதல் 11 மாத காலப் பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 15 லட்சத்து 90 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அதிகார சபை அறிவித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இது 18.1 வீத அதிகரிப்பு எனவும் அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள நாடுகளில் சீனா, இந்தியா, இங்கிலாந்து மற்றும் ஜேர்மன் ஆகியன பிரதான இடத்தை வகிக்கின்றன.

நவம்பர் மாதத்தில் மாத்திரம் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 174 பேர் எனவும் அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)


சேவைநலன் பாராட்டும்
57 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்களும்




திரு.செல்லையா - இராஜேந்திரன்
(உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி)
சேவைக்காலம்: 15.04.1980 - 26.12.2015
மக்கள் வங்கியின் 35 வருடகால சேவையினை ஆற்றி ஓய்வுபெற்ற எங்கள் குடும்ப வழிகாட்டியான திரு.செல்லையா - இராஜேந்திரன் அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: கஜீபன், கஜேந்திரன், டரன், கபிலாஸ், சஞ்சீவன், ப்ரிதிபன், ஹரீஸ், தருண், டிபிகன்.
(67066) (13.15)

சேவைநலன் பாராட்டும்
பிறந்தநாள் வாழ்த்தும்




திரு.செல்லையா - இராஜேந்திரன்
(உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி,சங்கானை)
சேவைக்காலம்: 15.04.1980 - 26.12.2015
மக்கள் வங்கியின் 35 வருடகால சேவையினை ஆற்றி ஓய்வுபெற்றுச் செல்கின்ற எமது மாமா திரு.செல்லையா - இராஜேந்திரன் அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாகவும் சுபீட்சமாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: M.சுரேஸ் குடும்பம்
N.கிசிதரன் குடும்பம்
(67035) (13.15)

Congratulations
மணிவிழா நாயகரை வாழ்த்துகின்றோம்
யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
Congratulations

பாடசாலை
வளர்ச்சியின் சிறந்த மகான்

மணிவிழா நாயகர் திரு. நா.பஞ்சலிங்கம் அவர்கள் புங்குடுதீவில் ஊரதீவு என்னும் கிராமத்தில் திரு. நாகநாதபிள்ளை வியாழாட்சி தம்பதியருக்கு கனிஷ்ர புத்திரனாக 26.12.1955 இல் பிறந்தார். சிறு வயது தொடக்கம் சுறுசுறுப்பும் கல்வியில் ஆர்வமும் கொண்ட இவர் தந்தையாரின் விருப்புக்கிணங்க 1979.09.03ஆம் திகதி தொடக்கம் ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்டார்.

அக்காலத்தில் இவர் பெரும்பாலும் கற்பித்த பாடசாலைகள் மிகவும் கஷ்ட பிரதேசப் பாடசாலைகளாகும். இந்தப் பாடசாலைகளில் கற்ற மிகவும் வசதி குறைந்த மாணவர்களுக்கு இவரது கணிதப் புலமை மிகவும் உதவியாக இருந்தது. மிகவும் பிரச்சினை மிகுந்த காலத்தில் க.பொ.த.(உ.த) கற்க இவரது கணிதப் புலமை மிகவும் உதவியதை சமூகம் அறியும். இவர் இக்கட்டான கால கட்டத்தில் இடப் பெயர்வின் பின் மூடிக் கிடந்த பாடசாலையை மீளவும் திறப்பதற்கு முயற்சி எடுத்து 1997.01.15 ஆம் திகதி மீண்டும் இப்பாடசாலையைத் திறந்து 1997.08.24 ஆம் திகதி அதிபராகக் கடமையேற்றார். அன்றிலிருந்து இன்றுவரை 18 வருட காலமாக மிகவும் கஷ்டத்தின் மத்தியில் அதிபராகக் கடமையாற்றியமை பாராட்டுக்குரியதாகும்.

இவரது காலத்தில் சேதமடைந்து இருந்த பாடசாலையை புனரமைப்புச் செய்து பாடசாலையை ஒழுங்கமைத்து சிறு விளையாட்டு மைதானத்தையும் உருவாக்கினார்.

இவர் சமூக ஒத்துழைப்புடன் இணைப்பாடவிதானம், கலைநிகழ்வுகள் போன்றவற்றில் மாவட்ட மட்டம், தேசிய மட்டம் செல்வதற்கு ஊக்குவித்தார். மாணவர்களின் ஒழுக்கத்துக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

இவர் மாணவர், ஆசிரியர் சமூகத்துடன் சிறந்த நட்புறவைப் பேணி இப்பாடசாலையில் 25 வருடங்கள் சேவையாற்றினார்.

இவ்வாறு கட்டுக்கோப்பான நிர்வாகக் கட்டமைப்பினைக் கடைப்பிடித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியதோடு சமூகப் பணிகளையும் ஆற்றி அனைவரது மனங்களிலும் நிறைந்திருக்கும் அதிபர் திரு.நா.பஞ்சலிங்கம் அவர்களை மனம் மகிழ்ந்து நீடூழி வாழ வாழ்த்துவதோடு ஓய்வு காலத்திலும் அவரது சேவை தொடர வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்க வளமுடன்
பாடசாலைச் சமூகம்,
யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.



அதிபர் - உயர்திரு
நாகநாதபிள்ளை பஞ்சலிங்கம்
B.Ed.Sp.Maths.
Trd, SLPS I

Congratulations

பிறந்த இடம்: புங்குடுதீவு
பிறந்ததிகதி : 26.12.1955
ஆரம்பக்கல்வி: யா/புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம்.
இடைநிலைக்கல்வி: யா/பரமேஸ்வராக் கல்லூரி
சிரேஸ்ட இடைநிலை: யா/வேலணை மத்திய கல்லூரி
உயர்கல்வி: கல்விமாணி தேசிய கல்வி நிறுவனம்

கல்விப்பணி
ஆசிரியர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ இராசராஜேஸ்வரி வித்தியாலயம்
03.09.1979 - 16.09.1979
ஆசிரியர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் க.ம.வித்தியாலயம்
17.09.1979 - 30.01.1983
ஆசிரியர் - யா/பலாலி ஆசிரியர்கலாசாலை
31.01.1983 - 31.12.1984
ஆசிரியர் - யா/வற்றாப்பளை றோ.க.ம. வித்தியாலயம்
01.01.1985 - 31.05.1989
ஆசிரியர் - யா/வள்ளுவர்புரம் ம.வித்தியாலயம்
01.06.1989 - 30.04.1991
ஆசிரியர் - யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்
01.05.1991 - 17.06.1991
ஆசிரியர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
18.06.1991 - 23.08.1997
பதில் அதிபர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
24.08.1997 - 03.08.2000
அதிபர்- யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
04.08.2000 - 26.12.2015

சமூகப்பணி
- சனசமூக நிலைய தலைவர்
- [illegible]
- ஆலய பரிபாலன சபை உறுப்பினர்.

கனடா புங்குடுதீவு
பழைய மாணவர் சங்கத் தலைவனின்
வாழ்த்துச் செய்தி

பசும் புல்வெளிகளும் மருத்துவ மூலிகைகளும் குன்றும் குழியுமான சிறு சிறு குளங்கள் மாரி காலங்களில் நீர் நிலைகள் இத்தனைக்கும் இடையே எமது ஓய்வு காலத்தைக் கழிப்பதற்காகப் பிற தேசங்களிலிருந்து எம் தீவகத்தை நோக்கிப் படையெடுத்து வந்து தம் உறவுகளைச் சந்தித்து கொண்டாடி மகிழும் அற்புதமான அழகான இயற்கையான பறவைகள் சரணாலயம் மிகுந்த எம் அழகிய ஊர்தான் புங்குடுதீவு.கடல் கடந்து வாழும் அன்பான எமது உறவுகளுக்கு மனம் கனிந்த வணக்கங்கள். நான் உங்களை அடுக்கு வசனத்தில் வாழ்த்த வில்லை. எமது தாயகப் பற்றுள்ள மக்கள் உலகெங்கும் பரந்து வாழ்ந்தாலும் எம் ஊரிலே அமைந் திருக்கும் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மாணவர்களுக்குக் கல்விச் செல்வத்தை ஆசிரியராய், அதிபராய் ஊட்டிய பெருமை என்றும் மறத்தலாகாது. ஆயினும் இந்நன் நாளிலே விடியலை நோக்கி வீறு நடை போட்ட விளைநிலமாக எம் மக்களை மாற்றி அவர் புத்திரர்களுக்குக் கல்வி என்னும் பயிரை செழிப்படையச் செய்தது தங்களின் நல்லெண்ணமே.தூங்கிக்கிடந்த மக்களை மெதுவாகத் தட்டி யெழுப்புவது போல் எம் மக்களின் அறிவினை சாணை தீட்டியபட்டையின் பேரொளியைப் போல் எல்லோர் உள்ளத்திலும் பிரகாசித்திருக்கிறீர்கள். எல்லோரிடமும் இனிமையா கப் பழகும் சுபாவம் எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் திறமையும் இறை பக்தியும் கொண்ட பஞ்சலிங்கம் அவர்கள் நீடூழி வாழி.

காலங்கள் மாறலாம். கருத்துக்கள் மாறலாம். ஒருவரது நல்ல சேவை என்றும் மாறாதவை. மாற்ற முடியாதவை ஆகும். இவரின் கல்விச் சேவையானது எம் ஊர் மக்களின் மலர்ச்சியான வதனங்களிலே வெளிப்பட்டு நிற்பதை நாம் மறக்கவோ மறைக்கவோ முடியாத ஒரு நிதர்சனமாகும்.

இவ்வாறான ஓர் ஆசானின் பணிகள் எம் மனம் உள்ள வரை நறுமணமாய் திகழ்ந்து கொண்டிருக்க வேண்டும்.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணம் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

தெளிந்த நல் அறிவோடு எண்ணிய கருமம் நிறைவேற இறைவன் துணை நிற்பார் என்ற நம்பிக்கையோடு பஞ்சலிங்கம் அவர்களை நீடூழி வாழ வேண்டும் என்று வாழ்த்தி நிற்கின்றேன்.

திரு.குமார் தில்லைநாதன் -தலைவர்
புங்குடுதீவு, பழைய மாணவர் சங்கம்,
கனடா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## 11 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்

மருத மண்ணில் முத்தாக
29 . 03 . 1995



மருத மண்ணில் முத்தாக
08 . 06 . 1966

**வே.இளவரசி - வே.மல்லிகாமலர்**

ஆழிப்பேரலையின் நெய்தலில் வித்தாக


**2004.12.26**

மருதத்தில் உதித்த சொத்துக்களே!
நெய்தலில் மறைந்த முத்துக்களே!
இதயத்தில் பதிந்த உறவுகளே
உள்ளத்தில் கவலையை தந்ததேனோ?
அலையொன்று எழுந்து கொண்டதால்
கூடொன்றில் இரு உயிர் மாண்டது
விதியின் செயற்பாட்டை புரிந்ததால்
மூவுயிர் இங்கு தவிக்குது.

மருதங்கேணி வடக்கு.
மருதங்கேணி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**கந்தையா**
**குருபரன்**

(வர்த்தகர்- கொழும்பு பாலாஜி ரான்ஸ்போட்
கைதடி சிறிநங்கன் ஸ்ரோர்ஸ்)
திதி :அபரபக்க பிரதமை (26.12.2015)

மலர்வு
11.08.1972

உதிர்வு
06.01.2015

ஓராண்டு சென்றாலும் எம் விழிகள் இன்னும் காயவில்லை - அப்பா
நானும் மகளும் தவியாய் தவிக்கின்றோம் என் கணவரே
நீங்கள் காட்டிய நேர்வழிப் பாதையில் நாங்கள் பயணத்தை -
தொடர்கின்றோம் அப்பா
எம் அருமைத் தம்பியே ஆலமரமாய் நீ கொழுந்து எறிந்து வளர்ந்தாய்
எங்கள் கடைக்குட்டியாய் இருந்தாயடா கணப்பொழுதில் மறைந்த
மாயம்
எம் நெஞ்சை உலுப்புதையா அக்காமார்கள் புலம்புகின்றோம்
ஓராண்டு அல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உன் அக்காமார்
இனி உன்னை எப்போ காண்போம்

அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (26.12.2015) சனிக்கிழமை எமது இல்லத்தில் பகல் 11 மணிக்கு நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி கைதடி கற்பகப்பிட்டி முருகனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கைதடி கிழக்கு,
கைதடி. (67016) (11.15,18)

மனைவி. பிள்ளை.
அக்காமார்.குடும்பத்தினர்

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 . 01 . 1924



மறைவு
26 . 10 . 2004

**கந்தப்பு கிருஷ்ணபிள்ளை**

(விஷகடி வைத்தியர்)

எமது கனவெல்லாம்
கலைந்ததையா - உமது
இழப்பினாலே
எமக்கென்று யாருள்ளார்
இந்தப் பாரினிலே அன்பு செய்ய
எமது விருப்பங்கள்
வெறுப்புக்கள் யாவும்
அழிந்து சென்றதையா உம்முடனே
நாம் நாமாக இருந்து
ஆண்டுகள் பதினொன்று ஆனதையா

இலக்குமி வாசா
மாரைக்காய்,
புலோலி தெற்கு, புலோலி.

குடும்பத்தினர்.

## 11 ஆம் ஆண்டு நினைவேந்தல்

அமரர்
**குமாரசாமி**
**பிரதீபன்**

அன்னை மடியில் 30.10.1977
ஆழியின் பிடியில் 26.12.2004



ஆழிப்பேரலையின்
கோரப் பிடியில் சிக்கிய
எம் அருமைப் பிரதீபா ...
உன் பிரிவு எம்மை இன்றும்
ஆறாத் துயரில் ஆழ்த்துதடா -
என் செய்வோம்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மில் ஒழுங்கை,
மல்லாகம். (67064)(11.15.18)

என்றும் உன் நினைவுடன்
**குமாரசாமி குடும்பத்தினர்.**
(பொன்னர்)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## நினைவழியா நினைவலைகள்.........

தோற்றம்
10.07.1950

மறைவு
03.07.2006



அன்னையிடம்
கவியாக
20.07.1983

அலையினால்
காவியமாக
26.12.2004

அமரர் சின்னத்தம்பி
இராசேந்திரன்

அமரர் இராசேந்திரன்
நிசாந்தன்

ஆண்டுகள் எத்தனை ஆனாலும் ஆறவில்லை உங்கள் நினைவுகள்
இத்தனை ஆண்டுகள் கழிந்தும் ஓவியமாய்
எம் நெஞ்சில் உங்கள் முகம்.....

"விக்னபவனம்"
காளி கோயிலடி, மல்லாகம்.

என்றும் உங்கள்
நினைவழியா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 01 . 1980



மறைவு
26 . 12 . 2004

**கொன்சன் ரைன் தனுசியா**

(யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி - உள்ளகப்பயிற்சி - ஆசிரியை)

ஆண்டு பதினொன்று ஆனதம்மா
எமது ஆருயிரை நாம் தொலைத்து
பாசம் காட்ட நீயின்றி
பரிதவிக்கின்றோம் - இந்தப்
பாரினிலே நாம் தனிமையிலே
உன் அருகினில் நாம்
இருந்த நொடிகளை
மட்டும் எமதருகே வைத்துக் கொண்டு
உன்னை இழந்து
தவிக்கின்றோம்
நின் நினைவு வாட்டுதம்மா
எமை நாள் பொழுதும்
வந்து எம்மை அழைத்துச்
சென்று விடு இல்லையெனில்
உன் நினைவால் உயிரை
அணுவணுவாய் இழந்திடுவோம்.

இலக்குமி வாசா,
மாரைக்காய், புலோலி தெற்கு,
புலோலி.

(c 28134) (11.15.18)

குடும்பத்தினர்.

## தெற்கு அதிவேக வீதி வருமானத்தில் சாதனை

கொழும்பு, டிசெ.26

தெற்கு அதிவேகப் பாதையின் ஒரு நாள் வருமானம், நேற்றுமுன்தினம் வரலாற்றுச் சாதனையாகப் பதியப்பட்டுள்ளது.

நீண்ட விடுமுறையின் காரணமாக நேற்றுமுன்தினம் அதிவேகப் பாதையில் அதிகமான வாகனங்கள் பயணம் செய்தமையால் இந்த வரலாறு பதியப்பட்டுள்ளது.


நேற்று அதிகாலை 4.00 மணி முதல் நிறைவடைந்த 12 மணித்தியால காலப்பகுதியில் மாத்திரம் 14 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இப்பாதையை சுமார் 50 ஆயிரம் வாகனங்கள் பயன்படுத்தியுள்ளன. தெற்கு அதிவேகப் பாதையின் ஒரு நாளைய சாதாரண வருமானம் 11 மில்லியன் ரூபாவாகும் எனவும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் டீ.சி. திஸாநாயக்க கூறியுள்ளார். (ற)

### புதையல் தோண்டியோர் கைது

கொழும்பு, டிசெ.26

ஹெப்பிட்டிக்கொல்லாவ இஸ்ஸன்வெவ பிரதேசத்தில் பாதுகாக்கப்பட்ட இடத்தில், சட்டவிரோதமாக புதையல் தோண்டிய நால்வர் கைது செய்யப்பட்டுள்ள



னர்.

குறித்த நால்வரையும் ஹெப்பிட்டிக்கொல்லாவ பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட குறித்த சுற்றிவளைப்பில், சந்தேக நபர்களிடம் இருந்து, கருங்கல்லை வெடிக்க வைக்கக் கூடிய வெடிப்பொருட்கள் மற்றும் பூசைப் பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரியில் ஆரம்பமாகிறது யாழ்.நகரை அழகுபடுத்தல்

## பணிகள் 5 ஆண்டுகளுக்குள் முடிவடையும்

யாழ்ப்பாணம், டிசெ.26
ஐந்து வருட துரித திட்டத்தின் கீழ் யாழ்.நகர மையம் புதிய நகராக - புதிய பரிமாணமாக அழகுபடுத்தப் படவுள்ளது. அந்த நடவடிக்கை 4 பிரிவுகளாக முன்னெடுக்கப்படவுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதற்கென பல பில்லியன் ரூபாவை செலவிட உலக வங்கி முன்வந்துள்ளது. நவீன யாழ்.நகரத் திட்டம் குறித்து உலக வங்கிக் குழுவினர் வடமாகாண சபை முதலமைச்சர் தலைமையிலான கூட்டத்திலும், யாழ். அரச அதிபர் தலைமையிலான உலக வங்கி குழுவின் முதலாவது கூட்டத்திலும் ஆலோசிக்கப்பட்டு இந்தத் திட்டம் முழுமை பெற்றுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகும் இந்த அபிவிருத்தியை 5 வருடங்களுக்குள் நடைமுறைப்படுத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> “ வீதி விஸ்தரிப்பு, தேவையற்ற கட்டடங்கள் அழிப்பு, பஸ்தரிப்பு நிலையம், வர்த்தகக் கடைத் தொகுதி இடமாற்றம் என்பவையும், வைத்தியசாலை அமைப்பில் மாற்றம் என்பவையும் ஏற்படவுள்ளன ”

இந்தத் திட்டம் முதலில் நான்கு பிரிவுகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதன்படி முதலாவது திட்டம், வீதி விசால அபிவிருத்தி மற்றும் வாகனத் தரிப்பு மற்றும் நிறுத்தம் தொடர்பானது. இரண்டாவது திட்டம் யாழ். நகர கலாசார மைய அபிவிருத்தி (பல பரிமாணம் கொண்டது) மூன்றாவது திட்டம், நகர வாய்க்கால், காணி, மலசல கூடம், உட்கட்டுமானம், நவீன உட்கட்டுமானத் தொகுதி அமைத்தல். நான்காவது திட்டம், நிறுவன ரீதியான அபிவிருத்தி என்பவையாகும்.

இந்தத் திட்ட முன்னகர்வு இடம்பெறும்போது, வீதி விஸ்தரிப்பு, தேவையற்ற கட்டடங்கள் அழிப்பு, பஸ்தரிப்பு நிலையம், வர்த்தகக் கடைத் தொகுதி இடமாற்றம் என்பவையும், வைத்தியசாலை அமைப்பில் மாற்றம் என்பவையும் ஏற்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-50)

### அமிர்தலிங்கத்துக்கு விரைவில் சிலை

யாழ்ப்பாணம், டிசெ. 26
அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் சிலை நிறுவுவது தொடர்பில் வடமாகாண சபை ஆலோசித்து வருகிறது.

வலி.மேற்கு முன்னாள் பிரதேச சபைத் தவிசாளரும் உறுப்பினர்களும் சபை வளவினுள் அமிர்தலிங்கத்துக்கு சிலை நிறுவுவது தொடர்பில் ஏற்கனவே அனுமதியளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு சிலை அமையவுள்ள இடம் தெரிவு செய்யப்பட்டு உயர்மட்டகுழு பார்வையிட்டுச் சென்றுள்ளது.

குறித்த நினைவுச் சிலையை அமைப்பதற்கான துரித நடவடிக்கை வடமாகாண சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 16ஆம் திகதி இந்தச் சிலை நிறுவப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-50)

### சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி, டிசெ.26
சாவகச்சேரி சந்தையில் விடப்பட்ட பெண்களுக்கான புதிய சைக்கிள் ஒன்று நேற்று இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட பேர்த்தியின் சைக்கிளை வாங்கிக் கொண்டு வந்த தாத்தா, சந்தையில் பொருள்கள் வாங்குவதற்காக, சந்தைக்கு வெளியே சைக்கிளை நிறுத்தி பூட்டி விட்டுச் சென்றுள்ளார். பொருள்கள் கொள்வனவு செய்து கொண்டு வெளியே வந்து பார்த்த போது சைக்கிள் திருட்டுப் போயிருந்தது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

### நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.26
வட்டுக்கோட்டை தெற்கு செம்பாட்டான் தோட்ட சனசமூக நிலையத்துக்கு 3 வருடத்தின் பின்னர் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

109 உறுப்பினர் கலந்து கொண்ட சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவில் தலைவராக சமூக ஆர்வலர் த.சசிதரன் தெரிவு செய்யப் பட்டுள்ளார். செயலாளராக சி.செந்தமிழ்ச் செல்வனும், பொருளாளராக நா.கிருஸ்ண பவானும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-ஜ-50)

# மதுபானப் போத்தல்கள் வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.26
கொழும்புதுறைப் பகுதியில் விடுமுறை தினத்தில் விற்பனை செய்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 55 மதுபானப் போத்தல்களை யாழ். பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மதுபானங்களை மறைத்து வைத்திருந்த நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக அதிகளவான சாராயப் போத்தல்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்தது.

விடுமுறை தினத்தில் மதுபான சாலைகள் திறக்கப்படாமையால் இந்த மதுப் போத்தல்களைக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யும் நோக்கில் குறித்த நபர் வைத்திருந்தார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-9)

# விலை கூட்டி பொருள் விற்ற வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், டிசெ.26
கடந்த நவம்பர் மாதம் வரவு - செலவு திட்டத்தில் பொருள்களின் விலை குறைக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னரும், அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு 5 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில்தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது அதிக விலையில் பொருள்கள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி த. வசந்தசேகரன் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் யாழ்.மாவட்டதிலுள்ள 5 நீதிமன் றங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விற்பனை நிலையங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால், பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த பரிசோதனைகளின்போது, அதிகரித்த விலையில் பொருள்கள் விற்கப்பட்டமை தெரியவந்தது. அதனால் குறித்த வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் நவம்பர் மாதம் 89 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது 4 லட்சத்து 22 ஆயிரம் ரூபா அபராதமும், டிசெம்பர் மாதம் 85 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 1 லட்சத்து 69 ஆயிரம் ரூபா, தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளது.

அதேவேளை, வர்த்தகமானியில் அறிவிக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக பொருள்களை விற்பனை செய்யத் தவறும் வர்த்தகர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று வசந்தசேகரன் தெரிவித்தார். (ற-ஜ-4,106)

# தண்ணீர் விநியோக நேரத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.26
யாழ்.மாநகர சபையால் வழங்கப்படும் குடிதண்ணீர் விநியோக நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்று குருநகர்ப் பிரதேச மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

தற்போது குடிதண்ணீர் விநியோகம் காலை 6.30 மணிக்கு குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு காலை 6.55 மணிக்கு நிறுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏறத்தாழ 3 ஆயிரத் துக்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற குறித்த பிரதேசத்துக்கு 25 நிமிடங்கள் மட்டும் ஒரு நாளைக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதால் பெரும்பாலான குடும்பங்களால் குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விடுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் குடிதண்ணீர் விநியோக நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (ற-ஜ-160)

# தீவகத்துக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை

## வேள்ட் விசன் நிறுவனம் முன்னெடுக்கிறது

யாழ்ப்பாணம், டிசெ.26
வேள்ட் விசன் லங்கா சர்வதேச தொண்டு நிறுவனம் வேலணை, ஊர்காவற்றுறைக்கு தனது வேலைத் திட்டங்களை விஸ்தரிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. முதற்கட்டமாக அங்கு தண்ணீர் பற்றாக்குறையாகவுள்ள இடங்களுக்குத் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் அபிவிருத்தி தொடர்பான மாவட்டக் கூட்டம் யாழ். அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட குறித்த நிறுவன செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயல்ட் அன்ரனி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது சாவகச்சேரியிலும், வலி.மேற்கு சங்கானையிலும் வேள்ட்விசன் லங்கா நிறுவனத்தால் மாற்றுத்திறனாளிகளுக்கான உட்கட்டுமானம், நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் நலனோம்பு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் குடிதண்ணீர் தொடர்பான அபிவிருத்திகளை வலி.மேற்கில் முன்னெடுக்க முடியாத சூழல் தென்படுகின்றது. வலி.மேற்கில் குடிதண்ணீருக்கான தேவைப்பாடு உள்ளபோதிலும், அந்தத் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கான நீர் மூலவளம் இல்லை. நீர் மாதிரிப் பரிசோதனையிலும் ஒரே ஒரு கிணறு மட்டுமே தேவைப்பாட்டை நிறைவேற்றக் கூடியதாக உள்ளது.

எனவே வேள்ட்விசன் லங்கா நிறுவன நிதிப் பயன்பாட்டை முழுமையாகக் கொண்டு மக்களுக்கு குடிதண்ணீர் தேவையாகவுள்ள வேலணை, ஊர்காவற்றுறைக்கு அதனைக்கொண்டு செல்வது குறித்து விளக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதன்போது அரச அதிபர் வேலணை, ஊர்காவற்றுறைக்கான திட்டங்களை முன்னகர்த்துவதற்கான வேலைகளை ஆரம்பிக்கலாம் எனவும், அதற்கு முன்னர் தீவகத்தின் குடிதண்ணீர் மற்றும் சுகாதார நிலைமைகள் தொடர்பான அறிக்கைகளை முன்வைக்குமாறும் கோரியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-50)

### கஞ்சா விநியோகித்த கடற்றொழிலாளிக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, டிசெ.26
சக தொழிலாளர்களுக்கு கஞ்சா விநியோகித்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள கடற்றொழிலாளியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கொடிகாமம் கெற்பேலிப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு கஞ்சா விநியோகிக்கப்படுகின்றது என்று சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருந்தது.

அதையடுத்து கடந்த புதன்கிழமை இரவு கெற்பெலி கடற்கரையில் மறைந்திருந்த பொலிஸார், குறித்த நபர் கஞ்சா விநியோகித்த வேளையில் கைதுசெய்துள்ளனர்.

அவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் முற்படுத்தியபோதே எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார். (ற-ஜ-9)

### யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், டிசெ.26
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நீண்ட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பதவியேற்றதன் பின்னர் முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஜனவரி மாத நடுப் பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைமைப் பதவியை தாம் ஏற்கமாட்டேன் எனத் தெரிவித்து வடமாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம்மூலம் அது பற்றி அறிவித்துள்ளார்.

அதையடுத்து யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக தமிழரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மதுவரித் திணைக்களத்துக்கு தமிழரை நியமிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.26

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மதுவரித் திணைக்களத்துக்கு தமிழ் அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் மொழி, அரசமொழியாக உள்ள இடத்தில் வடக்கு மாகாணத்தின் பல அரச அலுவலகங்களில் சிங்கள மொழி பேசும் உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட மதுவரித் திணைக்களத்துக்கு தற்போது புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரியும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரே.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களும், மது வரித் திணைக்கள அதிகாரியாக கடந்த காலங்களில் தமிழர் ஒருவரே கடமை யாற்றி வந்தார். ஆனால் அவர் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்ததன் காரணமாக குறித்த மதுவரித் திணைக்களத்துக்கு என அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாதிருந்தார். இந்தநிலையில் கடந்த சில மாதங்களுக்குமுன்னர்பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

> கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும், மதுவரித் திணைக்கள அதிகாரியாக கடந்த காலங்களில் தமிழர் ஒருவரே கடமையாற்றி வந்தார்.

பொதுமக்கள் அவருடன் தொடர்பாடலை மேற்கொள்ளவதில் பெரும் சிக்கலை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். அத்துடன் குறித்த அதிகாரி தென்னிலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் அதிகாரியைச் சந்திப்பதற்காக குறித்த திணைக்களத்துக்குச் செல்லும் போது அவர் அங்கே இருப்பதில்லை என்றும் கூறுகின்றனர். இதனால் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை உள்ளது என்றும் பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர்.

வடக்கு மாகாணத்திலேயே சிறந்த ஆற்றலுடைய, தகமையுடைய மதுவரி அதிகாரிகள் இருக்கும்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மதுவரித் திணைக்கள அதிகாரியாக ஏன் நியமித்துள்ளனர் என்று கேள்வி எழுப்பியுள்ள பொதுமக்கள், தமிழ் அதிகாரி ஒருவரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-21)

# அடைக்கலநாதனின் அலுவலக தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்

## மகாறம்பைக்குள நபரொருவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு

வவுனியா,டிசெ.26

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய செல்வம் அடைக்கலநாதனின் வவுனியா அலுவலகத்தில் இருந்து, தனக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று மகாறம்பைக் குளத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் மறுத்துள்ளார். இது தனக்குச் சேறு பூசும் நடவடிக்கை என்று அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

குறித்த நபர் மாகாறம்பைக்குளம் எல்லைப் பகுதியில் தன்னால் நீண்ட காலமாக பராமரிக்கப்பட்டுவந்த காணியை மக்களுக்கு வழங்குவதற்காக கடந்த திங்கட்கிழமை துப்பரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காணியைத் துப்புரவு செய்ய வேண்டாம் எனத் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் அலுவலகத்தில் உள்ள 024-2222977 என்ற தொலைபேசியில் இருந்து குறித்த நபரின் தொலைபேசிக்கு அழைப்பெடுத்து காணியை விட்டு வெளியேறுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

> காணியை விட்டு வெளி யேறுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, குறித்த நபருக்கு எனது அலுவலகத்தில் இருந்து அழைப்பு எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

அச்சுறுத்தல் ஏதும் விடுக்கப்படவில்லை. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை உடனடியாகக் கண்டு பிடிக்க வேண்டும். இது என் மீது சேறு பூசும் நடவடிக்கை. இதற்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ-21)

# தோணிக்கல் மைதானம் கழகத்திடம் கையளிப்பு



வவுனியா, டிசெ.26

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், நாடு முழுவதும் செயற்படுத்தும் இளைஞர் சிரமசக்தி 2015 வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் வேலி அமைக்கப்பட்ட வவுனியா தோணிக்கல் மைதானம் நேற்று குறித்த விளையாட்டுக் கழகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

வவுனியா இளைஞர்சேவைகள் மன்றம், தோணிக்கல் இளங்கோ இளைஞர் கழகத்தினூடாக செயற் படுத்திய குறித்த மைதானத்துக்கான வேலி அமைக்கும் வேலைத் திட்டம் நிறைவடைந்துள்ளதை அடுத்து அது விளையாட்டுக் கழகத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவரும்வன்னிநாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரான வினோநோகராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் தியாகராஜா, போக்குவரத்து, மீன்பிடி அமைச்சரின் இணைப்பாளர் மயூரன், முன்னாள் தெற்கு பிரதேச சபை உபதலைவர் நடராஜசிங்கம், வவுனியா இளைஞர்சேவைகள்மன்றத்தலைவர் அமுதராஜ், அஜித் சந்திரசேன, சுகாணி, தமிழ் ஈழ விடுதலை இயக்க அமைப்பாளர் விஜயகுமாரன் , கழக உறுப்பினர்கள், பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-21)

# ஊடகவியலாளர் மீது தாக்குதல் சந்தேக நபருக்கு விளக்கமறியல்

வவுனியா,டிசெ.26

வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளரை தாக்கினார் என்றகுற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா நகரில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த போது வர்த்தக நிலையமொன்றில் பணியாற்றிய ஒருவர், ஊடகவியலாளரைத் தாக்கியமை தொடர்பாக நேற்று முன்தினம் மாலை வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போதே எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ற-ஜ-21)

# ஊடகவியலாளருக்கு தற்போதும் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன

## பிராந்திய ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்கு வன்னி ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

வவுனியா,டிசெ.26

நாட்டில் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல் தற்போது இல்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரசிங்க கூறியிருந்த போதிலும் தற்போதும் ஊடகவியலாளர் தாக்கப்படுகின்றனர். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். - இவ்வாறு வன்னி மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் பிராந்திய ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் வன்னி மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் சார்பாக அந்த அமைப்பின் செயலாளர் கி.வசந்தரூபன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஊடகவியலாளர் மீதான தாக்குதல்களும், ஊடகங்கள் மீதான அடக்குமுறைகளும் கடந்த காலத்தைப் போன்று தற்போதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்ட உரையின்போது இந்த நாட்டில் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல் தற்போது இல்லை எனவும், கடந்த காலத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளாகிய ஊடகவியலாளர்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறும் எனவும் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வடபகுதியில் ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம், ஊடக சுதந்திரம் தொடர்பில் அரசு கூறும் கருத்துக்களைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது. இவ்வாறான தாக்குதல் சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

வவுனியா நகரப் பகுதியில் வீதிப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டிருந்த வியாபார நிலையங்களின் விளம்பர பதாதைகள், கொட்டகைகள் என்பவை பொலிஸாரின் துணையுடன் வவுனியா நகரசபையால் அகற்றப்பட்டன. அதன்போது செய்தி சேகரித்த ஊடகவியலாளர் தாக்கப்பட்டுள்ளார். அவரது புகைப்படக் கருவி பறிக்கப்பட்டுள்ளது. தங்கச் சங்கிலி ஒன்றும் அபகரிக்கப்பட்டுள்ளது. அவர் மீது வர்த்தக நிலையம் ஒன்றில் ஊழியராக கடமையாற்றுபவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

பொலிஸார் முன்னிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஏனைய ஊடகவியலாளர்களால், தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புதிய அரசின் காலத்திலும் பொலிஸார் முன்னிலையில் ஊடகங்கள் மீதான அச்சுறுத்தலும், அடக்குமுறைகளும் தொடர்கின்றன. சில தனிநபர்கள் சட்டத்தை மதிக்காது அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

ஊடகவியலாளரின் பாதுகாப்பு தொடர்பிலும், ஊடக சுதந்திரம் தொடர்பிலும் இந்த அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.- என்றுள்ளது.

(ற-ஜ-21,402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு விருது வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 26

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆக்கத் திறன்களில், திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தில்லை நடராஜா, யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் தலைவர் மா.வேதநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-ஐ-ரி5)

## பொதுக்கூட்டம்

பளை, டிசெ.26

பளை, முகமாலை வள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு பளை, முல்லையடியில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மீள்குடியமர்வு தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் பிரிவு மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிலையத் தலைவர் சி.சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

# வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியப் பிரஜை கைது

சாவகச்சேரி, டிசெ.26

சாவகச்சேரிப் பகுதியில் உடுபுடவைகள் விற்பனை செய்த இந்தியப் பிரஜை ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்த உடுபுடவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி வர்த்தகர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் பெருங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குச் சென்றவேளையில், அங்கு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உடுபுடவைகளை குறித்த நபர் விற்பனை செய்து கொண்டிருந்ததை அவதானித்து சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த இந்தியப் பிரஜையைக் கைது செய்தனர். குறித்த நபர் பெருங்குளம் வீதியில் உள்ள வீட்டின் அறையொன்றை மாதம் 10 ஆயிரம் ரூபாவுக்குவாடகைக்குப்பெற்றுத்தங்கியிருந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-9)


## மனதைவிட்டு மறையா ஐந்தாம் ஆண்டு நினைவுத் தூவல்



அமரர்
**பத்மநாதன் புஸ்பாகரன்**
(புஸ்பா)
(சா.ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலைய முன்னாள் பணியாளர்)

மண்ணில்
12.06.1979

மனதில்
26.12.2010

காலங்கள் எவ்வளவு வேகமாக நகர்கிறது
கண்ணயர்ந்த வேளையில்
ஐந்து ஆண்டுகள் கடந்தும் - முள்ளாக
எங்கள் மனதில் உங்கள் நினைவுகள்
ஐந்து வருடம் என்ன இன்னும் எத்தனை வருடங்கள்
கடந்தாலும் என்றும் எங்கள் நட்பு அழியாது நண்பா புஸ்பா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
நண்பர்கள்:
வேணன், சீலன், முகுந்தன்,
பகி, கமல், தர்சன், டர்ஷன்

எரிபொருள் நிரப்பு நிலையம்,
சாவகச்சேரி.

(6760685)
(11.15,18)

## மரண அறிவித்தல்

### தம்பு கணபதிப்பிள்ளை



யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் அரசடிகுளம், இல.77 செட்டிகுளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட தம்பு கணபதிப்பிள்ளை 23.12.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், ஆனந்தராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை -.தருமலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், வத்சலா, ஜயந்தி, பிரதீசன், வினோதினி, கேதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதன், ஆறுமுகராசா, சோபனா, பிரசாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தேனுயா, ஜீயிவன், ஜீயீதரன், அனுசியா, கேசிகன், பவனா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற வர்களான கோபாலப்பிள்ளை, பசுபதிப்பிள்ளை, பால சிங்கம் மற்றும் தருமரெத்தினம், சற்குணம், வில்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தர்லிங்கம், பாலசிங்கம், செல்வராணி, கிருபாராணி, நரேந்திரன், தனலெட்சுமி, கெங்காதரன், கணேசலிங்கம், திருவருட்செல்வி, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுத் தகனக் கிரியைகளுக்காக 9ஆம் யூனிட் பாவற்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 923 3168

இல.77, அரசடிகுளம்,
செட்டிகுளம், வவுனியா.

(66658)
(11,15,18)

## நெஞ்சை விட்டகலாத மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

# தர்மலிங்கம் தர்மேந்திரன் (பாபு)

(பிரபல "தர்ம்சன்ஸ்" கட்டட ஒப்பந்தகாரரும் உரிமையாளரும் - அரியாலை)



**பிறப்பு**
**12.05.1953**

**இறப்பு**
**28.12.2012**

ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டதே
ஆறுது இல்லை எம்மனம்
வேண்டுதல் செய்கிறோம்
வேறு வழியின்றி
சோறு அள்ளி உண்கின்றோம்
வேகிறது நெஞ்சமோ
ஆறுதல் கூற யாரும்
இல்லை அவலப்படுகின்றோம்

உங்களின் பிரிவு பெரு நெரிவாய்க்கிடக்கிறது
காலை எழுந்து நீர் வாசலில் நிற்பது
கண்ணுக்குள் நிற்கிறது
கனவுகள் பல கண்டோம்
நினைவுகள் பல எண்ணினோம்
எல்லாம் கற்பனை நினைவாகிவிட்டது

அப்பா என்று அழைத்த வாயால்
ஐயோ என்று அலற விதி வந்ததோ எமக்கு
பொய்யோ உங்கள் சாவு
புரிய முடியவில்லை எம்மால்
ஆண்டுத் திவசத்திற்கு ஆள்களைக் கூட்டி
அன்னதானம் வழங்க காலமாச்சு

நீங்கள் சொன்னது எல்லாம்
நினைவிலிருக்கிறது
சொன்னபடியே நாம் நடப்போம்
உருகி மனம் வெந்து அழுகின்றோம்
உங்கள் உருவம் எங்கள் மனதை விட்டகலாது


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
- குடும்பத்தினர்.

இல.11, கதிரவேல் ஒழுங்கை,
கனகரட்ணம் றோட், அரியாலை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சிவலிங்கம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30.11.1925 | 24.12.2015 |

களபாவோடையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு, விழிசிட்டியை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சிவலிங்கம் 24.12.2015 வியாழக்கிழமை தமது 90 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சிவலிங்கம் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவரான வீரகத்தி தம்பையாவின் அன்புப் புதல்வரும் குமாரசாமி, கந்தசாமி, கண்மலர் (நேசமணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவரூபன், வசந்தி, சிவகாந்தன், வசீகரன், சிறிதரன் மற்றும் காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விமலாஞ்சலி, ஆனந்தகுமார், பத்மகுமாரி(வசந்தி), கலாநாயகி (மீனா), வசந்தி(விஜி)ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஷன், நிலோஜா, சுபேந்திரன், டக்ஷிகா, அருண்கோகுல், பிரணவன், சிவனேஷ், அனுஷியா, நிலானுஜா, அபினாஷ், அபிநயா, அன்ஷியா, அஜெய், அதீஷன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(27.12.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து பூதவுடல் காடாகடம்பை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 205 9444 (இல்லம்)
072 213 6105 (சிவரூபன்)
077 344 4801 (சிறிதரன்)

"வசந்த மகால்",
விழிசிட்டி,ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(சி/28053)
(11,15,18)

## வட மாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினம்

கிளிநொச்சி, டிசெ.26

வடமாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினம்இன்றுசனிக்கிழமைபிற்பகல்3மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்வதுடன், சிறப்பு விருந்தினராக வட மாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜா "காலை நிலை மாற்றமும் வடமாகா ணத்தில் அதன் தாக்கமும்" எனும் தலைப்பில் விசேட உரை ஆற்றவுள்ளார்.

(ந-ஜ-ரி3)

# மரண அறிவித்தல்

## கதிரவேலு பொன்னம்பலம்

(முன்னாள் கைதடி ஆயுள்வேத ஊழியர், முன்னாள் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சாரதி, முன்னாள் UNHER சாரதி)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் சங்க வீதி , சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பொன்னம்பலம் 24.12.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகம்மா தம்பதிகளின் புத்திரனும் நல்லையா -கனகம்மா தம்பதியரின் மருமகனும் மற்றும் மங்களேஸ்வரியின் (இளைப்பாறிய ஆயுள்வேத ஊழியர்-கைதடி) பாசமிகு கணவரும், தவரூபி(லண்டன்), தனுசா (முன்னாள் ஆசிரியர்- கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்-பிரான்ஸ்) , குமணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், கந்தசாமி மற்றும் செல்வநாயகதேவி (மட்டுவில்), கனகாம்பிகை (சரசாலை) ஆகியோ ரின் சகோதரரும், அருள்செல்வம் (லண்டன்), மனோரங்கன் ( முன்னாள் இ.போ.ச.வவுனியா - பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், குமாரசாமி (குமார்),புவேந்திரன், பரம்ஜீவா ஆகியோரின் மைத்துனரும் சியானன் (லண்டன்), சியானி (லண்டன்), தவிசினி (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(60684)
(11,15,18)

சங்கவீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
077 986 2369


தகவல்.
குடும்பத்தினர்.

## கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.26

''விழுதுகளிலிருந்து வேர்களை நோக்கி" எனும் தொனிப்பொருளில் பேராசிரியர் கைலாசபதி வாழ்வியல் தொடர்பான கருத்தரங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி இந்து வா[illegible]பர் சங்கத்தில் முறபகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கின் தொடக்கவுரையை பேராசிரியர் செ.யோகராசாவும், தி.செல்வமனோகரன்,ந.மயூரரூபன், த.அஜந்தகுமார் ஆகியோர் கருத்துரைகளையும் வழங்கவுள்ளனர்.

(ந-ஜ-ரி5)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 08 . 1959 | 21 . 12 . 2015 |

## துரைராஜசிங்கம் திருலோகநாதன்

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜசிங்கம் திருலோகநாதன் 21.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் இலட்சுமிதேவியின் பாசமிகு கணவரும் காயத்திரி, பிரியா (குடும்ப நல உத்தியோகத்தர்- பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), தேவானந் (Y.M.C.A College India), கோமதி (பிரயோக விஞ்ஞான பீடம்-தென்கிழக்குப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரன், அஜந்தன் (மகேந்திரா மோட்டோர்ஸ்-நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தவயோகநாதன், ஜெயகௌரி, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேனகன், அபிஹாசினி ஆகியோரின் பாசமிகு பேரனும் மலர்தேவி, வசந்தாதேவி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் புஸ்பதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.12.2015 செவ்வாய்க்கிழமை கந்தவுடையார் ஒழுங்கை பருத்தித்துறையில் உள்ள இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கந்தவுடையார் ஒழுங்கை,
புலோலி மத்தி,
பருத்தித்துறை.
077 974 2299, 021 226 0004

(62229)
(11,15,17,18)

தகவல்.
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## முருகேசு சிவசுப்பிரமணியம் (சிறாப்பர்-G.P.O)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1923.03.10 | 2015.12.24 |

காரைநகர், மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தங்கோடையை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சிவசுப்பிரமணியம் (சிறாப்பர்-G.P.O) 24.12.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (தலைப்பா-G.P.O) - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும், பார்வதியம்மையின் அன்புக் கணவரும், லோகநாயகியம்மை (தேவி), காலஞ்சென்ற கணேசரத்தினம் மற்றும் மகாலட்சுமி, நவரத்தினம், ராசரத்தினம் (நியூ லட்சுமி ஸ்ரோர்ஸ் - பசறை), யோகம்மா (யோகம்- பிரான்ஸ்), செல்வரத்தினம் (அப்பு - இங்கிலாந்து), காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் தர்மரத்தினம் (பசறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகநாதன், தனலட்சுமி, சண்முகலிங்கம் (பிரான்ஸ்), சித்ரா (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தமலர் ரவிச்சந்திரன் (கனடா), வசந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அருள்ராசா மற்றும் தவமலர் சர்வானந்தபவன், விதுர்ஷன், திவாகரன், துஸ்யந்தன் (பிரான்ஸ்), டினேஸ் (பிரான்ஸ்), கஸ்தூரி (பிரான்ஸ்), ஜனந்தன் (இங்கிலாந்து), ஜனனி (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு பேரனும், ராகவி (கனடா),கபிசன் (கனடா), யக்சித்தா ஆகியோரின் பாசமிகு பூட்டனும், காலஞ்சென்றவர்களான கமலாசினி, மீனாட்சி, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நமசிவாயம், திலகவதியம்மை, கனகாம்பிகையம்மை, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் (அப்போதிகரி), நடராசா, சுப்பிரமணியம், சுந்தரலிங்கம் (நாவற்கண்டியர்), திருநாவுக்கரசு (கிளார்க்கர்), கமலாவதியம்மை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 030 5571
072 282 7762

(சி/28053)
(11,15,18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியில் சீனாவுடன் சுமுக உறவு நிலவுகின்றது

## நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

சீனாவுடனான கொடுக்கல் வாங்கல்களில், கடந்த காலங்களில் அரசியல் குழப்ப நிலை காணப் பட்டிருந்தாலும், தற்போதைய நல்லாட்சி அரசில் சீனாவோடு நெருக்கமான, சுமுகமான உறவு நிலையே நிலவுகின்றது. - இவ்வாறு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சி.என்.பி.சி. தொலைக்காட்சி அலைவரிசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.



அதன்போது அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது -

சீனாவுடன் நல்ல உறவுநிலை காணப் பட்டாலும், கடந்த காலங்களில் நிகழ்ந்த தவறுகளை சுட்டிக் காட்டி, அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அதனையே மைத்திரி பால சிறிசேன தலை மையிலான அரசும் செய்கிறது.

> சீனாவுடன் நல்ல உறவுநிலை காணப்பட்டாலும், கடந்த காலங்களில் நிகழ்ந்த தவறுகளை சுட்டிக் காட்டி, அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

நல்லாட்சி அரசு எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கு எமது அரசு, மக்களுக்கு செயல்வடிவில் நடந்து காட்ட வேண்டிய தேவை உள்ளது.

பொருளாதார ரீதியில் சீனா முக்கியமான தொரு நாடாக கணிக்கப்படுகின்றது. அத்துடன் சகல நாடுகளும் எமது நாட்டுக் குள் வரவேண்டும். இந்த நாடுகளுடன் ஒப்பிடு கையில், இலங்கையின் பொருளாதாரம் சிறி தாக இருந்தாலும், திறந்த பொருளாதாரத்தை ஏற்படுத்தி உலகளாவிய ரீதியில், நமது நாட்டின் வணிகத்துறையையும் இணைப்பதே எங் களது நோக்கம்.- என்று தெரிவித்துள்ளார். (ற)

# வெளிநாடு தப்பியோடும் ஊழல் பேர்வழிகள்!

கொழும்பு, டிசெ.26

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் பெரும் ஊழல், மோசடியில் ஈடுபட்ட தரப்பினர், இரகசியமான முறையில் குடும்பங் களுடன் நாட்டை விட்டுத் தப்பியோட முயற்சித்து வருகின்றனர் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் பெருமளவில் ஊழல் மோசடி செய்தார் எனக் குற்றம்சாட்டப்பட்ட பெண் அதிகாரியொருவர் ஏற்கனவே இவ்வாறு இரகசியமாக குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பெண் அதிகாரி, பெரும் நிதி மோசடிகள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுமுன் முன்னிலையாகி சாட்சியம் வழங்கியிருந்த நிலையில், இவ்வாறு வெளிநாட்டிற்குத் தப்பியோடி யுள்ளார் என்று கூறப்படுகின்றது.

குறித்த பெண் அதிகாரியைப் போலவே, மகிந்த ஆட்சியில் ஊழல் மோசடியில் ஈடுபட்ட பலர் குடும்பங்களுடன் வெளிநாடுகளுக்குத் தப்பியோடுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

ஊழல் மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் இதேபோல் வெளிநாடு களுக்கு தப்பிச் சென்றால் மோசடி குறித்து உரிய முறையில் விசார ணைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் என்றும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# பாரத லக்ஸ்மன் பாணியை பின்பற்றுகிறாரா ஹிருணிகா

## விக்கிரமபாகு கருணாரட்ன கேள்வி

கொழும்பு, டிசெ.26

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தனது தந்தை பாரத லக் ஸ்மன் பிரேம ச்சந்திரவின் பாணியைப் பின்பற்றுகின்றாரா? என புதிய இடதுசாரி முன்ன ணியின் தலைவர் கலா நிதி விக்கிரமபாகு கருணா ரட்ன கேள்வி எழுப்பியுள் ளார்.




தெமட்டகொட பகுதியில் இளைஞர் ஒருவர் கடத்தப் பட்டுத் தாக்கப்பட்ட சம் பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர அவரது தந்தை பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திரவின் பாணியைப் பின் பற்றுகின்றாரா? என்று கேட்கவிரும்பு கின்றேன். கடத்தல் சம்பவம் குறித்துப் பார்க்கும்போது, குண் டர்களுக்கு இடையிலான பிரச் சினைகளை தீர்க்கும் முயற்சி யில் ஹிருணிகா ஈடுபட்டுள் ளமைத் தெளிவாகின்றது.

இதேபோல்தான் அவரது தந் தையான முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் பாரத லக்ஸ மன் பிரேமச்சந்திர, கொலன்னாவ பிரதேசத்தில் பல்வேறு கட்டப் பஞ்சாயத்துக்களில் ஈடுபட்டி ருந்தார்.

தற்போது அவரது புதல்வியான ஹிருணிகாவும் அவரது பாதையை பின்பற்றி மக்களின் பிரச்சினை களைத் தாமே தீர்க்க முயற்சிக்கின் றார் என்று தோன்றுகின்றது.

எது எப்படியாயினும், எவரும் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது.

எந்தவொரு குற்றச் செயல் களிலோ, சட்டவிரோத செயல் களிலோ ஈடுபடுபவர்களை கைது செய்யும் முழு அதி காரமும் பொலிஸாருக்கே இருக் கின்றது.

இவ்வாறான சம்பவங்களைப் பார்க்கும்போது, கடந்த அர சாங்கத்தில் அரங்கேறிய குண்டர்கள் ஆதிக்கம், கட்டப் பஞ்சாயத்து என்பன இந்த அரசிலும் தொடர்கின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.- என்றார். (ற)



# ஐ.தே.கவை தோற்கடிப்பதே எனது பிரதான இலக்காகும்

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, டிசெ. 26

ஐக்கிய தேசியக் கட்சியை தோற் கடிக்கும் நோக்கில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சுதந் திரக்கட்சிக்கு ஆதரவாக பரப் புரை மேற்கொள்ள உள்ளதாக மகிந்த ராஜபக்ச தெரிவித்துள் ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச, ஜாஎல, கந்தானை யில் அமைந்துள்ள தனது ஆதர வாளர் ஒருவரின் வர்த்தக நிலையமொன்றுக்குச் சென் றிருந்தார்.

அங்கு ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது–

நான் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியிலேயே இருக்கின்றேன். அத்துடன் ஐக்கிய தேசியக்கட் சிக்கு எதிரான எனது நிலைப் பாடு தொடர்ந்தும் இருக்கின்றது.

இதன் காரணமாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சுதந் திரக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பரப்புரை மேற் கொள்ளத் தீர்மானித்துள்ளேன்.

... ஐக்கிய தேசியக் ...யும்

# சாவுத் தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும்

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, டிசெ.26

சாவுத் தண்டனை முற்றாக ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இலங்கை அரசமைப் பிலிருந்து சாவுத் தண்டனையை முற்றாக நீக்குவது குறித்து வலியுறுத்தும் ஆவணமொன்று அரசிடம் வழங்கப்பட உள்ளது என்றும் ஆணைக்குழு குறிப் பிட்டுள்ளது.

எந்தவொரு குற்றத்துக்கும் சாவுத் தண்டனை தீர்வாகாது எனக் குறிப்பிடும் ஆணைக் குழுவின் பேச்சாளர் சாலிய பீரிஸ், சாவுத் தண்டனை விதிப் பதால் குற்றச் செயல்களைத் தடுக்க முடியாது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை விதிப்பதற்கு பதி லாக, குற்றச் செயல்கள் இடம் பெறுவதற்கான மூல காரணங் களைக் கண்டறிந்து அவற்றைச் சமூகத்திலிருந்து இல்லாதொழிப் பதே மிகவும் அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சாவுத் தண்டனை இல்லாதொழிப்புக் குறித்த சர் வதேச பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திட வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டுள் ளார்.

அதேவேளை நாட்டில் அதி கரித்து வரும் குற்றச் செயல் களைக் கட்டுப்படுத்துவதற்காக நாடாளுமன்ற அனுமதியுடன் சாவுத் தண்டனையை நிறை வேற்ற எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன முன்னர் ஒருசமயம் குறிப் பிட்டிருந்தார்.

இவ்வாறிருக்க இலங்கையில் ஒருபோதும் சாவுத் தண்டனை நிறைவேற்றப்படாது என இலங் கையின் வெளிவிவகார அமைச் சர் மங்கள சமரவீர ஒருசமயம் கருத்து வெளியிட்டிருந்தார். (ற)

# குற்றம் செய்தமை உறுதியானால் தண்டிக்கப்படுவார் ஹிருணிகா

## ஜே.சீ. அலவத்துவல எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர அல்லது அவரது ஆதரவா ளர்கள் குற்றம் செய்திருந்தால் தண்டனை விதிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ. அலவத்துவல தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்கள் சுயாதீனமான முறையில் இயங்குவதற்குத் தேவையான பின்னணியை ஜனாதிபதி மைத்திரி... சிறிசேனவும் தற்போதைய அரசும் ஏற்படுத்திக் கொடுத் துள்ளது. கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ...தைய நிலை நிலவவில்லை. – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது –

ஹிருணிகா பிரேமச்சந்திர அல்லது அவரது ஆதரவாளர்கள் சட்டத்திற்குப் புறம்பான வகையில் செயற்பட்டிருந்தால், அவர்களின் தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப் படும். தற்போதைய அரசின் கொள்கை இதுவேயாகும்.

தற்போதைய அரசு நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்கின்றது என்பதனை திட்டவட்டமாக அறிவிக்க முடியும்.

அதேபோன்று தற்போதைய அரசு நாட்டின் ஜனநாயகத்தையும் உறுதி செய்யும். – என் றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவின் ஆதரவாளர்கள் சிலர் நபரொருவரை கடந்த சில தினங்களுக்கு முன்னர் டிபென்டர் வாகனமொன்றில் கடத்தி யிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, ஹிருணிகா பிரேமச் சந்திரவின் ஆதரவாளர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனாதிபதியின் நல்லெண்ணமும் நல்லிணக்கத்துக்கான வழியும்

நாட்டில் சீர்கெட்டுப் போயுள்ள இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை மீண்டும் எவ்வாறாயினும் உருவாக்கி நிலைநாட்டிவிட வேண்டும் என்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிகொண்டிருப்பதானது, சகல தரப்பு மக்களுக்கும் -- குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமைவது மட்டுமன்றி, நம்பிக்கை ஒளியொன்று வெகுதூரத்தில் பளிச்சிடுவதாகவும் தோன்றக்கூடும்.

அறுபது வருடங்களுக்கும் மேலாக சிறிது சிறிதாக சிறுபான்மை மக்களின் குடியுரிமை, வாக்குரிமை, மொழி உரிமை, சமய உரிமை, நில உரிமை என்று பல்வேறு உரிமைகள் வெளிப்படையாகவும், தந்திரோபாயமாகவும் பறிக்கப்பட்டு வந்த நிலையில், அந்த உரிமைகளை மீட்டுக் கொள்வதற்காக அவர்கள் அமைதியாக ஜனநாயக முறைகளில் முயன்ற வேளைகளில் எல்லாம், கொடூரமான சட்டங்களை இயற்றியும், பாதுகாப்புப் படையினரை ஏவியும் இனவாதக் காடையர்களைக் கொண்டு தாக்குதல்கள் நடத்தியும் போராடியவர்களை மட்டுமன்றி அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களையும் தாக்கி அவர்களில் பலரை கொன்றொழித்தும் பேரின ஆட்சியாளர்கள் நடத்திய கேடுகள், கொடுமைகள் எண்ணிலடங்காது. இதனைப் பொறுத்துக் கொள்ள இயலாத தமிழ் இளைஞர்கள் பொங்கி எழுந்து அரசுக்கு எதிராக ஆயுதப் போரில் ஈடுபட்டனர்.

இவ்வாறு பல தசாப்தங்களாக சமூகங்களுக்கிடையில் வளர்க்கப்பட்டுவிட்ட இன, மத மற்றும் மொழிகள் தொடர்பான வெறுப்புணர்வுகள், நம்பிக்கையீனங்களை இலகுவில் சரிசெய்துவிட முடியாது. அதற்கான அடிப்படைக் காரணங்களை ஆய்ந்துணர்ந்து ஆட்சியாளர்கள் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். சிறுபான்மை மக்களின் குறைபாடுகள் பலவற்றில் ஒரு சிலவற்றை ஜனாதிபதியும் அரசும் தீர்த்து வைக்க எத்தனித்துள்ளார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இன்னும் பலவற்றுக்கு வித்திடப்படுவதும் தெரிகின்றது. ஆனால் இவைகள் மட்டுமே நல்லிணக்கத்துக்கு வழிசமைத்துவிட மாட்டா.

தமிழ் மக்களும் இந்த நாட்டின் சரிசமமான குடிமக்களே என்பது சட்டபூர்வமாக, அரசமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவர்களுக்குரிய ஏனைய உரிமைகள் யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்விதமான கைங்கரியத்தை ஜனாதிபதியால் மட்டும் நிறைவேற்றுவது சாத்தியமில்லை. இப்பொழுது ஆட்சிபீடமேறியுள்ள முக்கிய இரு கட்சிகளின் பெரும்பான்மை அரசு அந்த வகையில் அடி எடுத்து வைப்பதையே தமிழ் பேசும் மக்களும், சர்வதேசமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை ஒழிப்பது, தேர்தல் முறையை சீர் அமைப்பது மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு போன்ற முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் யோசனை பற்றியும் செய்திகள் அடிபடும் அதேசமயம், அந்த அரசமைப்புக்கான முயற்சியை முறியடிக்க அல்லது அதற்கு முட்டுக்கட்டைகளை தோற்றுவிக்க இனவாதிகள் இப்போதே தம் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியதன் பின்னர் மக்கள் கருத்துக்கணிப்பை நடத்துவது அரசின் நோக்கமாகத் தெரிகிறது. முதலில் மக்களின் தீர்ப்பைப் பெறவேண்டும் என்று ஜி.எல்.பீரிஸ் போன்றவர்கள் கூறி நிற்கிறார்கள். அரசு எந்த முடிவை எடுப்பதானாலும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஒருமித்த கருத்தை உருவாக்கிக் கொள்வது அவசியம். குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கு முக்கிய இடம்கொடுப்பது அவசியம். அவர்களின் கருத்துக்கள் கடந்த காலங்களில் புறந்தள்ளப்பட்டதும் அவர்கள் ஓரங்கட்டப்பட்டதுமே இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இவ்வளவு காலம் நீடிப்பதற்கான இன்னுமொரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

# சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ள அரசமைப்பு மறுசீரமைப்பு வேலைத்திட்டம்

**விக்டர் ஐவன்**

இப்போது அரசின் அரசமைப்புமறுசீரமைப்பு வேலைத்திட்டம் இருப்பது மிகப்பெரிய சிக்கலிலாகும். 19ஐ நிறைவேற்றினாலும், அதன் மூலம் கிடைக்கப் போவது நல்லதொரு பிரதிபயனல்ல. குறைபாடுள்ள பிரதிபயனாகும். அரசமைப்பு மறுசீரமைப்பு வேலைத்திட்டம் மிகப் பெரிய சிக்கல் நிலைக்குட்பட்டிருப்பது ஏன்? இதற்கு முன்னர் ஒருபோதும் எந்தக்காலகட்டத்திலேனும் காணக் கிடைக்காத வகையில் அமைப்பு ரீதியிலான குடியுரிமை நடவடிக்கைகளுக்கு தாக்கமேற்படுத்தும் அரசியல் தளம் தொடர்பில் தாக்கமேற்படுத்திக் கொண்டிருக்கும் முறை போன்றே, அரசியல் கட்சிகள் அந்த குடியுரிமை நடவடிக்கைகளில் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் முறை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தெளிவாகப் புலனாகியது. அது ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி ராஜபக்சவை தோல்வியுறச் செய்யும் நோக்குடன் ஆனது என்பது தெளிவாகத் தெரியும் ஒன்றாக அமைந்தது. அதனைச் சமூகத்தில் மேலும் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தன்வசப்படுத்தும் ஒன்றாக கருதமுடியும்.


கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் சேர்க்கையோடு முன்னெடுத்த மறுசீரமைப்பு வேலைத்திட்டம், சோபித தேரரின் சாதாரண சமூகமொன்றுக்கான வியாபாரத்தில் கடனாகப் பெற்றுக்கொள்ளும் செயற்றிட்டமாக கருத முடியும். அது இலங்கையில் குடியுரிமை நடவடிக்கை, தேசிய அரசியல் நிலை தொடர்பில் பாதிப்புக்கு தங்களுக்கிருக்கும் இயலுமையைக் காண்பிக்கும் சந்தர்ப்பமொன்றாகக் கருத முடியும்.

சாதாரண சமூகமொன்றுக்கான செயற்றிட்டமொன்றில், ஏற்றுக் கொண்ட மற்றும் பிரபல்யமான தலைவர் சோபித தேரர் எனினும், அந்த செயற்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய நபர்களிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட கற்றவர்கள் மற்றும் தொழில் நிபுணர்கள் என்று கருதக்கூடிய சிலரும் இருந்தனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்ய வேண்டும்என்றஎண்ணம்கொண்ட மக்கள் மத்தியில் வெளிப்படுத்திய இந்தச் செயற்றிட்டமானது, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பிரதான பொறுப்புக்களை நிறைவேற்றியது. என்றாலும், அந்தச்செயற்றிட்டம் அந்தக் காரியத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்படாது, நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிமுறையை இல்லாமல் செய்வதற்கான [illegible] மாற்ற வேலைத்திட்டமொன்றையும் நாட்டுக்கு முன் வைத்தது. அந்த வேலைத்திட்டம் அச்செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளில் ஒன்றாகி, பேச்சுவார்த்தைக்குட்படுத்தப்பட்ட வேலைத்திட்ட நடவடிக்கையாக கருத முடியும். அது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்தல் மற்றும் ஒரு தனிப்பட்ட காரணிக்கு உடன்பட வேண்டும் என்ற கருத்துடன் இருந்து ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வேலைத்திட்டமாகும். அந்தக் கருத்தில் கருத்துக் கூறுபவராக கருதப்படுவது மாக்ஸ்வாதி, நியாயவாதி மற்றும் மின்சார பொறியியலாளரான

> கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் சேர்க்கையோடு முன்னெடுத்த மறுசீரமைப்பு வேலைத்திட்டம் சோபித தேரரின் சாதாரண சமூகமொன்றிற்கான வியாபாரத்தில் கடனாக பெற்றுக் கொள்ளும் செயற்றிட்டமாக கருத முடியும்.

கலாநிதி குமார்டேவிட் ஆவார். இந்தச் செயற்றிட்டத்தை செயற்படுத்திய மறுசீரமைப்பு வேலைத் திட்டத்திற்கேற்ப ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடப்போவது அரசியல்வாதி ஒருவரன்றி, எதிர்க்கட்சி செயற்றிட்டங்களின் ஒத்துழைப்புடனான சுயாதீன ஒருவராவார். பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்புடன் ஆறு மாத காலத்துக்குள் 18 வது திருத்தச் சட்டவரைவோடு ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்து 17வது திருத்த சட்டவரைவுக்கு அதிகாரமளித்து நாடாளுமன்றத்தைக் கலைத்து நாடாளுமன்ற தேர்தலொன்றுக்கு இடமளித்து வீட்டிற்குச் செல்ல வேண்டும். பொது வேட்பாளரின் பொறுப்புக்கள் அத்துடன் முடிவடைந்து விடும். அந்தப் பிரதான மூன்று காரணிகளும் அடங்கிய 19வது திருத்தச் சட்டவரைவாக முன்வைக்கப்படும் சட்டவாக்க மறுசீரமைப்பு வரைபொன்றும் அந்த செயற்றிட்டத்துக்கிருந்தது. அந்த வரைபை ஒழுங்குபடுத்திய நபரானவர் தற்போதைய ஜனாதிபதியின் சட்டவாக்கத்தை தொகுக்க, ஆலோசகராக இருந்த கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன ஆவார். ஆரம்பத்தில் இந்தச் செயற்றிட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணத்திற்கேற்ப ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்யும் வரையறுக்கப்பட்ட சட்டவாக்க மறுசீரமைப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் பொது வேட்பாளராக முன்வைப்பதற்கிருந்து சரியான நபராக கருதப்பட்டவர்சோபித தேரராவார். எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு தமக்கு கிடைக்குமென்றால் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முழுமைப்படுத்தி ஆறுமாத காலத்தில், வீட்டுக்குச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு தான் தயாராக இருப்பதாக சோபித தேரர் கூறியிருந்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் கூட்டுச் சேர்க்கையை அரங்குக்கு எடுத்தது சாதாரண சமூகமொன்றுக்கான செயற்றிட்டத்தில் சுத்தமான நிகழ்ச்சி நிரல் இல்லாவிட்டாலும், அதில் குறைந்திருந்த சில பகுதிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டு அமைக்கப்பட்ட அந்த நிகழ்ச்சி நிரலின் புதிய மீளாய்வாகக் கருத முடியும். சாதாரண சமூகமொன்றுக்கான செயற்றிட்டத்தில் ஆரம்ப மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கும் பிரதான காரணிகள் மூன்றாகும், 18வது திருத்தச்சட்டவரைவுடன் ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வது, மற்றும் 17வது திருத்தச்சட்டத்தை பலமுள்ளதாக்குவதும் அதில் உள்ளடங்கும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டது சுயாதீன வேட்பாளருக்கு பதிலாக அரசியல் வேட்பாளர் ஒருவர் என்ற போதிலும், பொது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேட்பாளர் தன்னை நடைமுறைக் குட்படுத்துவதற்கு செல்லும் செயற்றிட்டத்திற்காகும். அவர் நாட்டுக்கு முன்வைத்தது. வெற்றியின் பின்னர் நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்தது அந்த வேலைத்திட்டத்தையாகும். இறுதியாக, அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சென்ற வெற்றிக் குழுவினரை மிகப்பெரிய சிக்கலில் தள்ளிவிட்டமையாகும். அந்த துரதிஷ்ட நிலைமையின் காரணிகள் கூர்மையான முறையில் அவதானிக்கப்படாமல் அடுத்தவரின் வேலைத்திட்டமொன்றை கடனுக்குப் பெற்ற அரசியல் தலைவர்கள் மாத்திரமன்றி, நடைமுறைப்படுத்த முடியாத, மனதுக்கு பிடித்த வேலைத்திட்டமொன்றை தயாரித்து நாட்டுக்கு வழங்கிய சாதாரண சமூகமொன்றுக்கான செயற்றிட்டமானது பொறுப்பேற்க வேண்டும்.

அது ஜனாதிபதி முறைக்கு எதிராக மக்கள் எண்ணத்தைஏற்படுத்துமானால்அதுமுக்கியமான வேலைச்சுமையொன்றை நிறைவேற்றிய குடியுரிமை செயற்றிட்டமொன்றினூடாக இடம்பெற்ற பாரதூரமான அரசியல் பிழையொன்றாகக் கருதமுடியும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை என்ற மரணப் பொறியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு சரியான வேலைத்திட்டம் இருப்பது தனக்கே என மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு அந்த குடியுரிமை செயற்றிட்டம் சாமர்த்தியம் பெற்றது. என்றாலும் இனத்தின் ஏற்றுக் கொள்ளும் தன்மைக்குக் காரணமான அந்த மார்க்கமான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு முற்பட்டு, இனத்துக்கு விடுதலையை பெறுவதற்கு பதிலாக தற்போது இருப்பது மிகப்பெரிய சிக்கலிலாகும். அது அவ்வாறானதெனில், தங்களுக்கு கிடைத்த வேலைத்திட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதில் இனம் சாமர்த்தியம் பெறவில்லை என்பதனாலன்றி, மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தந்திரோபாய வேலைத்திட்டத்தில் இருந்த பாரதூரமான தோசத்தினாலாகும். இந்த தந்திரோபாய மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் சரியான மூல கர்த்தாக்கள் எவரென்பது மக்களுக்கு ஞாபகமில்லை. அவர்களின் கேலி போன்றே கோபமும் பாதிப்படைந்து இருப்பது இந் நடைமுறையில் இல்லாத வேலைத்திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு முட்டாள்தனமான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தலைவர்களுக்காகும். என்றாலும் இடம்பெற்றிருக்கும் அந்தத் தவறின் அதிகமான பங்கு போக வேண்டியது அவ் வேலைத்திட்டத்தை உருவாக்கிய குடியுரிமை செயற்திட்டத்திற்கே.

இது சாதாரண சமூகமொன்றுக்காக இருக்கும் செயற்றிட்டத்தில் உள்ள சமூக வரவேற்பு இல்லாமலாக்கப்படும், தீய எண்ணத்துடன் செய்யப்படும் திறனாய்

> ❝ ஜனாதிபதி முறை என்ற மரண பொறியிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்கு சரியான வேலைத்திட்டம் இருப்பது தனக்கே எனமக்களுக்குதெளிவுபடுத்துவதற்கு அந்த குடியுரிமை செயற்றிட்டம் சாமர்த்தியம் பெற்றது. ❞

வாக கருதக்கூடாது. சமூக அரசியல் தொடர்பில் கட்டாயப் படுத்தும் எந்தவொரு சமூக அரசியல் செயற்றிட்டமும், அதன் மூலம் சமூகம் தொடர்பில் ஏற்படுத்தும் நல்லது கெட்ட துக்கேற்ப அவை திறனாய்வுக்கும் விமர்சனத்திற்கும் உட்படக்கூடும். அவ்வாறான செயற்றிட்டமொன்றைத் தமது கைகளினால் ஏற்படும் பாரதூரமான பிழைகளின்போது பொது மக்களுக்கு காரணங்களை தெளிவுபடுத்துவது மிகவும் முக்கியமானதாகும். தற்போதைய அரசமைப்பு மறுசீரமைப்பின்போது இந்தச் செயற்றிட்டம் மூலம் ஏற்பட்டிருக்கும் இந்தப் பாரதூரமான பிழை இன்னமும் அவர்களுக்கு புலப்படவில்லையெனின், அதுவும் பாரதூரமானபிழையொன்றாகி, பாரதூரமான பிழையொன்று இடம்பெற்றிருப்பதை தெரிந்து கொண்டே அது பற்றிப் பேசாமல் மௌனமாக இருப்பார்களேயானால் அது அதையும்விட பாரதூரமான பிழையாகும். சாதாரண சமூகமொன்றுக்காக செயற்றிட்டம் ஆட்சி மறுசீரமைப்புக்காக நாட்டுக்கு அறிமுகப் படுத்தப்படும் தந்திரோபாய பிரவேசம் மிகப்பெரிய சிக்கலை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்குமேயானால், அது பற்றிய காரணிகளை நன்றாக தேடிப் பார்த்து, பொது மக்களுக்கு சுயாதீன அறிவுபூர்வமான காரணிகளை தெளிவுபடுத்தும் கடமை மற்றும்பொறுப்பு அந்தசெயற்றிட்டத்துக்கு உள்ளது.

இந்த செயற்றிட்டம் தங்களுடைய தந்திரோபாய மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை நாட்டிற்கு முன்வைத்த உடனேயே அந்தப் பிரவேசம் மற்றும் சிந்தனை பற்றி பாரதூரமான திறனாய்வொன்றில் ஈடுபடுவதற்கு எனக்கு நேர்ந்தது. மேல்வாரியாக பார்க்கும்போது அது அழகான நிகழ்ச்சியொன்றான போதிலும் அது நடைமுறைக் கொவ்வாத, நாட்டை மிகப்பெரிய சிக்கலுக்குள் தள்ளுவதற்கு ஏதுவாகும் ஒரு வேலைத்திட்டமாகும் என்பதே எனது எண்ணமாக இருந்தது. அது பற்றி நான் முன்வைத்த கருத்துரையில் அதனைப் பாதிப்படையச் செய்த காரணிகள் பல இருந்தன. அவை யாவன,

1978ம் ஆண்டு சட்டவாக்கம் ஏற்படுத் தப்பட்டிருந்தது, ஜனாதிபதி முறையொன்றுக்காக என்பதனால் அந்த சட்டவாக்கத்திற்கு முன்வைக்கப்பட்ட மறுசீரமைப்பு மூலம் ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாமல் செய்து நாடாளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்த முடியாது. சட்டவாக்கமொன்றை ஒரேமுறையில் முழுமையாக செய்து கொள்வதற்குப் பதிலாக, துண்டு துண்டாக அமைத்துக் கொள்வது நல்லதல்ல.

ஜனாதிபதி முறையினுள் நாடாளுமன்றத்திலும் ஊழல் ஏற்பட்டு இருப்பதனால், நாடாளுமன்றத்தின் ஊழல் தன்மையை மாற்றியமைப்பதற்கு காரணியாகின்ற மறுசீரமைப்பை ஏற்படுத்தாமல் ஜனாதிபதி முறையை மாத்திரம் மறுசீரமைப்பு செய்வதில் முழு ஆட்சி முறையும் சிக்கலான நிலைக்குட்பட முடியும்.

## அரச அதிபரின் பதிலுக்காக காத்திருக்கிறோம்

தென்மராட்சி கிழக்கில் அமைந்துள்ள கெற்பேலிக் கிராமத்தில் உள்ள பாடசாலை வீதியானது அந்த ஊரின் மிகவும் முக்கியமான வீதியாகும். 800 மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதியானது சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட கல் வீதியாகும்.

இந்த வீதி அமைக்கப்பட்ட பின்னர் எந்த விதமான புனரமைப்பும் செய்யப்படாது இது கல்வீதி தானா எனச் சந்தேகம் கொள்ளும் அளவுக்கு கற்களே இல்லாமலும் மணல் மேடாகவும் காணப்படுவதால் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாத பாதசாரிகள் அயலில் உள்ள மணல் வீதியைப் பயன்படுத்துகின்றபோதிலும், அந்த வீதியும் தற்போது பயணிக்க முடியாத அளவுக்கு மணல் நிறைந்து காணப் படுகின்றது.

இந்த வீதியின் புனரமைப்புத் தொடர்பாக கடந்த 12 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக ஊர்மக்களும், இந்த ஊரின் பொது அமைப்புக்களும் பிரதேச சபை, பிரதேச செயலகம், முன்னாள் அரச அதிபர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளிடம் முறையிட்டும் இந்த வீதியின் புனரமைப்புத் தொடர்பில் எந்தவொரு நட வடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் எமது ஊர்மக்களின் கோரிக்கைக்கு அமைய 2009 ஆம் ஆண்டு கச்சேரி திட்டமிடல் செயலகத்தினால் இந்த வீதியின் புனரமைப்பு விவரத்தைக் கோரி பிரதேச சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி எமது கிராமத்தின் மாதர் சங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தக் கடிதத்துக்கு பிரதேச சபைச் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட பதில் கடிதத்தில் 2009 ஆம் ஆண்டுக்குரிய நிதி போதுமான அளவு இல்லாத காரணத்தால் 2010 ஆம் ஆண்டில் இந்த வீதியின் புனரமைப்புத் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், இற்றைவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த வீதியின் அவலநிலை காரணமாக எமது கிராம மக்கள் படும் துயரைப் போக்குவதற்கு எவரும் முன்வராததற்கு எமது கிராம மக்கள் செய்த பாவம்தான் என்ன என உரிய அரச அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்.மாவட்டத்தின் அரச அதிபரே தங்களின் மேலான பதிலைத் தயவுடன் எதிர் பார்த்து நிற்கின்றோம்.

[illegible]
கெற்பேலிக் [illegible]

## வீதி தொடர்பாக உரிய நடவடிக்கை வேண்டும்

பண்டத்தரிப்பு பிரான்பற்று வீதிகள் மழை காலத்துக்கு முன்பே கொங்கிறீட் வீதி, தார் வீதிகளாக மாறிவிட்டன. தற்பொழுது வெள்ள நீரானது ஊர் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து வெளியேறாமல் இருக்கின்றது.

நீண்ட நாள்களின் பின்புதான் நீரானது வற்று கின்றது.

இதனால் சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை நோய் பரவும் அபாயத்தை எதிர்கொள்கின்றனர்.

எந்தவித வடிகால் அமைப்பும் செய்யவில்லை. இதனால் ஊர்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

தயவு செய்து ஒரு தடவையாவது மழை காலத்தில் வந்து பார்த்து வீதி அமைத்தவர்கள் மற்றும் பிரதேச சபை, பிரதேச செயலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை நீர்நிலைமைகளை அறிந்து அதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு ஊர்மக்கள் தாழ்மையுடன் வேண்டி நிற்கிறார்கள்

குறிப்பு- கொங்கிறீட் வீதி, தார் வீதிகளின் இருபக்கமும் நீர் அரிப்பு ஏற்பட்டு உடைந்து இருக்கின்றது.

சி.குணா, பண்டத்தரிப்பு

## ஆடம்பரங்கள் வேண்டாம்

இறைமகன் இயேசு மனிதனாக மண்ணில் அவதரித்த கிறிஸ்மஸ் நாள் கிறிஸ்தவ மக்களால் எதிர்பார்க்கப்படுகிறது. இன்று கிறிஸ்தவர்கள் வாழும் எமது யாழ்ப்பாணப் பகுதிகளில் பட்டாசு வெடிகள் காதைப் பிளப்பனவாக மாறிவருவதுடன் வீதிகளில் சினிமாப் பாடல்களும் உச்சதொனியில் ஒலிக்கவிடப்படுகின்றன. இதனால் அமைதி குலைந்து வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இயேசு பிறக்கும்போது அவரது பெற்றோர்களுக்கு மாடமாளிகைகள் கிடைக்கவில்லை. அவர் மாட்டுத் தொழுவத்தில் கடும் குளிரிலேயே அவதரித்தார். இயேசு இல் [illegible]ஸ்ஸே இன்று கொண்டாடப்படும் நிலை உருவாகி வருகிறது. எனவே [illegible]ங்களை நிறுத்தி அமைதியான முறையில் கிறிஸ்மஸ்ஸைக் கொண்டாட நாம் முயல்வோம். (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியும் வாளும் மோடிக்குப் பரிசளிப்பு



மொஸ்கோ, டிசெ. 26
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மகாத்மா காந்தியின் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் மற்றும் வங்கத்து வாள் ஆகியவற்றை பரிசாக வழங்கி உள்ளார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்.

இந்தியப் பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் முதன்முறையாக மோடி புதன்கிழமை இரவு ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்டார். தலைநகர் மொஸ்கோ சென்றடைந்த அவருக்கு ரஷ்ய அதிபர் புடின் தனது கிரெம்ளின் மாளிகையில் சிவப்பு கம்பள வரவேற்பு அளித்தார். பின்னர் இரவு விருந்து அளித்தார். அப்போது இரு தலைவர்களும் நலம் விசாரித்துக்கொண்டனர்.

இதுகுறித்து மோடி தனது டுவிற்றில், "மகாத்மா காந்தியின் டைரியில் உள்ள ஒரு பக்கத்தை எனக்கு புடின் பரிசளித்தார். அதில் காந்தியின் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் உள்ளன. மேலும் வங்கத்தைச் சேர்ந்த 18ஆம் நூற்றாண்டின் வாளையும் எனக்கு அவர் பரிசளித்தார். இதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொண்டேன்" என பதிவிட்டுள்ளார்.

"ரஷ்யாவில் பயணம் மேற்கொண்டுள்ள மோடி, அந்த நாட்டு தேசிய நெருக்கடி நிர்வாக மையத்துக்கு சென்றார். அப்போது இந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. நெருக்கடி கால பிரச்சினைக்கு தீர்வு காணும் இந்த மையத்தில் 2.4 லட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு உதவுவதற்காக 62 ஆயிரம் கருவிகள் பயன்பாட்டில் உள்ளன" என்று மோடியின் பயணம் குறித்துத் தனது டுவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார் இந்திய வெளியுறவுத்துறை தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப்.

மொஸ்கோ சென்றடைந்த மோடிக்கு நுகோவா-2 விமான நிலையத்தில் இரா ணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. அப்போது பின்னணியில் ரஷ்ய இராணுவ இசைக் குழுவினரால் இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதை உணராத மோடி அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்ட இடத்திலிருந்து நடக்கத் தொடங்கினார். அப்போது அவரை ரஷ்ய அதிகாரி ஒருவர் நேர்த்தியாகப் பிடித்து பின் பக்கமாக இழுத்தார். இது மோடிக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியது.

மரபுப்படி தேசிய கீதம் இசைக்கும்போது, நிலையாக ஓரிடத்தில் நிற்க வேண்டும் என்பதை மோடி மறந்துபோய்விட்டதே இதற்குக் காரணம்.

ரஷ்யப் பயணத்தை முடித்துக் கொண்டு மோடி ஆப்கானிஸ்தான் சென்றார். தலைநகர் காபூலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றக் கட்டடத்தை அவர் திறந்து வைத்தார். முன்னதாக காபூல் நகருக்கு வந்த மோடிக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் அதிபர் உள்ளிட்ட தலைவர்களை மோடி சந்தித்துப் பேசினார். (உ)



எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த தாங்கியில் வாயுவை நிர
களில் அந்தப் பகுதி முழுவதும் கரும் புகைக்குள் மறைந்தது. தப
தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் அயல் வீட்டுக்காரர்களும் இந்

## செய்தி வாசிக்கும் ரோபோ

சீன செய்திச் சேவையான ஷாங்காய் ட்ராகன் தொலைக்காட்சி செயற்கை நுண்ணறிவு கொண்ட ரோபோவை வானிலை அறிவிப்பாளராக்கியுள்ளது. காலை நேர செய்திப் பதிப்பின்போது திடீரென்று அலைவரிசையில் தோன்றிய ரோபோ, "குளிர்கால பருவத்தில் எனது புதிய வேலையைத் தொடங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்று குறிப்பிட்டது.

சீனச் செய்திச் சேவையின் ரோபோவுக்கு 'ஜியோஜ எஸ்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஸ்மார்ட் கிளவுட் மற்றும் பிக் டேட்டா உதவியோடு மைக்ரோசாஃப்ட் நிறுவனம் இந்த ரோபோவைத் தயாரித்துள்ளது. இந்த ரோபோவின் குரல் அனைவரையும் கவர்ந்துள்ளது. அதன் வார்த்தை உச்சரிப்பு மற்றும் செய்தியை வெளியிடும் விதம் என்பனவும் பல பேரைக் கவர்ந்துள்ளன.

ரோபோவைப் பணியில் அமர்த்தியிருக்கும் ஷாங்காய் ட்ராகன் தொலைக்காட்சி நிறுவனம், "முழுவதுமாக செய்தியாளர்களை பணி நீக்கம் செய்து ரோபோக்களை வேலையில் அமர்த்தும் எண்ணம் இல்லை" என்று தெரிவித்துள்ளது. இதனால் வேலை பறிபோகும் என்று பீதியில் இருந்த செய்தியாளர்கள் சற்று நிம்மதி அடைந்துள்ளனர். இந்த ரோபோ செய்தி வாசிப்பின்போது உணர்ச்சியையும் வெளிப்படுத்தும். (உ)

## அகதிக்கு அதிர்ஷ்டம்

ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு ஸ்பெயின் நாட்டில் தஞ்சமடைந்த செனகல் நாட்டைச் சேர்ந்த அகதி ஒருவருக்கு கிறிஸ்மஸ் அதிர்ஷ்டலாபச் சீட்டு மூலம் 4 லட்சம் யூரோ கிடைத்துள்ளது.

நகானே என்ற அந்த அகதி, 2007ஆம் ஆண்டு மோசமான படகு ஒன்றின் மூலம் ஸ்பெயினைச் சென்றடைந்தார். ஆபத்தான அந்தப் பயணத்தில் கடலில் தத்தளித்த அவரையும் அவரது குடும்பத்தினரையும் படகில் இருந்த ஏனைய 65 பேரையும் மீட்புப் பணியாளர்கள் கரை சேர்த்தனர்.

பரிசு விழுந்ததை அறிந்ததும் ஊடகங்களிடம் பேசிய நகானே ஸ்பெயின் அரசுக்கும் மீட்புப் பணியாளர்களுக்கும் நன்றி கூறினார்.

## அதிபர் போட்டியில் ஹிலாரி முன்னிலை

அமெரிக்க அதிபர் பதவி வேட்பாளர் தேர்வுக்கான போட்டியில், முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரும், முன்னாள் அதிபர் பில் கிளிண்டனின் மனைவியுமான ஹிலாரி கிளிண்டன் முன்னேற்றமடைந்துள்ளார்.

ஜனநாயகக் கட்சி சார்பிலான வேட்பாளர் தேர்வுப் போட்டியாளர்களுக்கான ஆதரவு குறித்து, வாக்காளர்களிடையே ஊடக நிறுவனங்கள் கருத்துக் கணிப்பு நடத்தின. அந்தக் கருத்துக் கணிப்பில், தனக்கு அடுத்தபடியாக வந்த பெர்னி சாண்டர்ஸ்ஸை விட 24 சதவீதம் அதிகம் பெற்று, ஹிலாரி கிளிண்டன் முன்னிலையில் உள்ளார். ஜனநாயகக் கட்சி வாக்காளர்களின் 50 சதவீதத்தினர் ஹிலாரிக்கும், 34 சதவீதத்தினர் சாண்டர்ஸுக்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கருத்துக் கணிப்பின்படி, வெளியுறவு மற்றும் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகள் குறித்த ஹிலாரி கிளிண்டனின் கொள்கைக்கு 72 சதவீத வாக்காளர்கள் ஆதரவளித்துள்ளனர்.

பொதுமக்கள் துப்பாக்கி வைத்திருப்பதைக் கட்டுப்படுத்தும் விவகாரத்திலும், ஹிலாரிக்கு 51 சதவீதத்தினரும், சாண்டர்ஸுக்கு 30 சதவீதத்தினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரிக்கும், குடியரசுக் கட்சி சார்பில் டொனால்டு டிரம்புக்கும் இடையிலான கற்பனைத் தேர்தலில், ஹிலாரிக்கு 49 சதவீதத்தினரும், டிரம்புக்கு 47 சதவீதத்தினரும் ஆதரவு அளித்தனர்.

டிரம் ஹிலாரிக்கு எதிராக மோசமான கருத்துக்களைத் தெரிவித்து பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறார். ஆனால் அவரது பாலியல் சீண்டல் கருத்துக்களுக்கு ஹிலாரி தொடர்ந்தும் அமைதி காத்துவருகிறார். இது அவரது மதிப்பை இன்னும் உயர்த்துகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். (உ)

## அமெரிக்க

அமெரிக்காவின் தெ
களைப் பலமான சூ
தாக்கியதில் குறைந்
உயிரிழந்திருக்கின்ற
சிப்பி, ஆர்கன்ஸா
னெஸ்சி ஆகிய மா
கடுமையாகப் பாதிக்
ளன. இலினோய்ஸ்

## சூதாட்டக் காசு குழந்தையை முயன்றவர்

சூதாட்டத்தில்
பணத்தை ஈடு செ
காக தனது மூன்று
பெண் குழந்தை
முயன்றார் என்ற
சாட்டில் இஸ்ரேலி
வர் கைது செய்யப்
கிறார்.
குறித்த நபரின் பெ
ரங்கள் வெளியாக
ஆனால் அவருக்
வயது இருக்கும் என்
பிடப்படுகிறது. அவ
வயதான மனைவியு
ஸாரால் தடுத்து
பட்டிருக்கிறார்.
இந்த விவகாரத்தி
ரது தொடர்பு இன்
தெளிவாகவில்லை
அவர்கள் கூறுகின்
குழந்தையை வ
தற்கு பொலிஸ்
ஒருவரே மாறுவே
சென்றிருந்தார்.
குழந்தையை குறி
கையளித்தபோது
லேம் பொலிஸார்
கைது செய்துள்ளன
18 ஆயிரம் ஸ்
பவுன்ஸ் தொகைக்
தையை விற்பதற்
நபர் முன்வந்துள்ள

## கர்ப்பிணி வேடத்தில் தற்கொலைத் தாக்குதலுக்கு முயன்ற பெண் கைது

போலி கர்ப்பப்பைக்குள் வெடி மருந்துகளை நிரப்பி வைத்து, தற்கொலைத் தாக்குதலுக்குத் திட்டமிட்டிருந்தார் என்ற சந்தேகத்தில் பிரெஞ்சுப் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸின் மொண்ட்பில்லர் பகுதியை சேர்ந்த கேம்லி என்பவரின் வீட்டில் பாரிஸ் தீவிரவாத தடுப்பு பொலிசார் திடீர் சோதனை நடத்தினர்.

அவரது கணினியைச் சோதித்தபோது அதில், ஐஎஸ் அமைப்பின் பரப்புரை அதிக அளவில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும், அவர் இணையதளம் ஊடாக பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட போலிக்கர்ப்பப்பையை வாங்கியுள்ளார், அதில் வெடி மருந்துகளை மறைந்து வைத்திருந்ததையும் தாம் கண்டு பிடித்தனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர, பணயக் கைதிகளின் தலையை ஐ.எஸ். அமைப்பினர் வெட்டும் காட்சிகளைப் பார்ப்பதிலும் தீவிரவாதக் குழுக்களின் பத்திரிகைகளை படிப்பதிலுமே அதிக நேரத்தை அவர் செலவழித்ததும் தெரிய வந்தது.

தனது நெருங்கிய நண்பர்களிடம் தனது கணவருடன் சேர்ந்து சிரியா செல்ல வேண்டும் என்றும் தியாகியாக இறக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளாராம். பெண் தற்கொலைத் தாக்குதல் தொடர்பான ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டிருந்தார் எனப் பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதையடுத்து கேம்லி மற்றும் அவரது கணவரையும் பொலிஸார் கைது செய்தனர். தீவிரவாத தடுப்பு பொலிசார் இது தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிரான்ஸில் அண்மையில் ஐ.எஸ். அமைப்பினரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இது ஐரோப்பா முழுவதும் பெரும் அதிர்வலைகளைக் கிளப்பியது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கையில் பிரான்ஸ் பொலிஸார் தீவிரம் காட்டிவருகின்றனர். சோதனை பலப்படுத்தப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ாயுவை நிரப்பிவிட்டு டாங்கர் பார ஊர்தி புறப்பட்ட சமயத்தில் பெரும் வெடிப்புடன் தீப் பற்றியது. சில நொடி
றந்தது. தமது சிலிண்டர்களில் எரிவாயு நிரப்புவதற்காக நின்றுகொண்டிருந்தவர்கள் தீயில் கருகி மாண்டனர்.
ர்களும் இந்த விபத்தில் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காஸ்நிலையம்வெடித்து 100 பேர் சாவு

## கிறிஸ்மஸ் காலத்தில் நைஜீரியாவில் பெரும் சோகம்

நைஜர், டிசெ. 26
நைஜீரியாவின் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் ஏற்பட்ட பெரும் வெடிப்பினால் 100 பேருக்கும் மேல் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிவாயுவை நிரப்பிக் கொண்டிருந்த டாங்கர் பார ஊர்தியே இந்த வெடிப்புக்குக் காரணம் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

கிறிஸ்மஸ் கொண்டாட்ட நேரம் என்பதால் சமையல் எரிவாயுவைக் கொள்வனவு செய்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள், இந்தப் பெரும் வெடிப்பினால் தீயில் கருகினர். வெடிப்பு ஏற்பட்ட சில நொடிகளிலேயே நெருப்பு முளாசி எரிந்து அங்கிருந்த அனைத்தையும் சாம்பராக்கியுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களும் முற்றாக எரிந்துள்ளன.

தென் நைஜீரியாவில் உள்ள நீவி என்ற இடத்திலேயே சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதியிலேயே கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட, எரிந்து கரிக்கட்டைகளாகக் கிடந்த சடலங்களை அசோசியேட்ஸ் பிரஸ் செய்தி நிறுவன செய்தியாளர் கண்டுள்ளார்.

வியாழக்கிழமை நண்பகல் உள்ளூர் நேரப்படி 11 மணியளவில் வெடிப்பு இடம்பெற்றதாக சம்பவத்தின் சாட்சியான எமேக்கா பீற்றர்ஸ் தெரிவித்தார்.

சிக்காசன் குழுமத்துக்குச் சொந்தமான எரிவாயு நிலையத்தில், வாயுவை இறக்கி விட்டு டாங்கர் பார ஊர்தி புறப்பட்ட சமயத்திலேயே வெடிப்பு இடம்பெற்றது என்று அவர் தெரிவித்தார்.

"பெரும் குண்டு வெடித்த மாதிரிச் சத்தத்துடன் நெருப்பு கொழுந்துவிட்டது. சில நொடிகளிலேயே நிரப்பு நிலையம் கரும் புகை மூட்டத்திற்குள் மறைந்தது. சமையல் எரிவாயு நிரப்பியவர்களின் சிலிண்டர்களில் இருந்து தொடர்ந்து வெடிப்புச் சத்தங்கள் கேட்டன" என்கிறார் பீற்றர்ஸ்.

"பலர் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சமையல் வாயுவை தமது சிலிண்டர்களில் மீள நிரப்புவதற்காக நாள் முழுவதும் அங்கேயே காத்து நின்றவர்கள். பலரின் சடலங்கள் அடையாளமே காணமுடியாத அளவுக்குக் கருகிப் போயிருந்தன. படுகாயமடைந்தவர்கள் நகரில் இருந்த போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்" என்று மேலும் தெரிவித்தார், 36 வயதான பீற்றர்ஸ். (உ)

## மெரிக்காவில் சூறைக்காற்றுக்கு 7பேர் சாவு

க்காவின் தென் மாநிலங்
பலமான சூறைக் காற்று
தில் குறைந்தது 7 பேர்
ந்திருக்கின்றனர். மிசி
ஆர்கன்ஸாஸ், டென்
சி ஆகிய மாநிலங்கள்
யாகப் பாதிக்கப்பட்டுள்
இலினோய்ஸ், மற்றும் இன்டியானா ஆகிய மாநிலங்களிலும் சூறைக் காற்று வீசியுள்ளது.

மிசிசிப்பி ஆளுநர், மாநிலத்தில் அவசரகால நிலையை அறிவித்துள்ளார். சூறாவளியின் கோரத் தாண்டவத்தால் அங்கு 6பேர்உயிரிழந்ததுடன் மேலும் 40 பேர் காயமடைந்தனர்.

மிசிசிப்பி அவசர முகாமைத்துவ முகவர் நிலையமும் பொது மக்கள் பாதுகாப்புத் திணைக்களமும் பேரிடர் உதவி நடவடிக்கைகளை முழு வீச்சில் மேற்கொண்டு வருகின்றன. (உ)

## நிலநடுக்கம்

இந்தோனேசிய மாலுக் மாகாணத்தில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. உள்ளூர் நேரப்படி காலை 6.11 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.9ஆக பதிவாகியிருந்தது. எனினும் இதனால் பெரும் பாதிப்புகள் ஏதும் ஏற்பட்டதாக உடனடித் தகவல்கள் ஏதும் இல்லை. (உ)

## ட்டக் காசுக்காக ந்தையை விற்க ன்றவர் கைது

த்தில் தோற்ற
தை ஈடு செய்வதற்
னது மூன்று மாதப்
குழந்தையை விற்க
றார் என்ற குற்றச்
இஸ்ரேலியர் ஒரு
கது செய்யப்பட்டிருக்

நபரின் பெயர் விவ
வெளியாகவில்லை.
ல் அவருக்கு 30
இருக்கும் என்று மதிப்
டுகிறது. அவரது 27
மனைவியும் பொலி
ல் தடுத்து வைக்கப்
க்கிறார். ஆனால்
விவகாரத்தில் அவ
தொடர்பு இன்னமும்
வாகவில்லை என்று
ள் கூறுகின்றனர்.
தையை வாங்குவ
பொலிஸ் அதிகாரி
ரே மாறுவேடத்தில்
ருந்தார். அவரிடம்
தையை குறித்த நபர்
ரித்தபோது ஜெருச
பொலிஸார் அவரைக்
செய்துள்ளனர். சுமார்
ஆயிரம் ஸ்ரேலிங்
ஸ் தொகைக்கு குழந்
ய விற்பதற்கு அந்த
ன்வந்துள்ளார்.

## விநோத உருவத்தில் சுறா கண்டுபிடிப்பு

விநோத தோற்றத்தைக் கொண்ட சுறா ஒன்றை ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். பார்ப்பதற்கு உண்மையிலேயே வினோதமாக இருக்கின்றது இந்தச் சுறா. அது கடலின் ஆழத்தில் மறைந்திருந்துள்ளது. அதனது கறுப்பு நிறம் அது மறைந்து கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. நின்ஜா லன்ட்ரன் சுறா என்று இதற்குப் பெயரிட்டிருக்கிறார்கள்.

பசுபிக் சுறா ஆய்வு மையத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களால் இந்த நின்ஜா லன்ட்ரன் சுறா கண்டறியப்பட்டது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் மோஸ் லான்டிங் என்ற இடத்தில் இந்த மையம் இருக்கிறது.

நின்ஜா கிட்டத்தட்ட அரை மீற்றர் - 18 இஞ்சி - நீளம் இருக்கிறது. பசுபிக் கடலில் சுமார் 1000 அடி ஆழத்தில் இது உயிர் வாழ்கிறது. அனேகமாக கறுப்பாக இருந்தாலும் வெள்ளை நிறமும் அதன் உடலில் ஆங்காங்கே காணப்படுகின்றது. இந்தப் புதிய கண்டுபிடிப்புப் பற்றி சமுத்திர அறிவியல் நிதிய சஞ்சிகையில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)



# கிறிஸ்மஸ்கொண்டாட சோமாலியாவில்தடை

மொகாடிசு, டிசெ.26
சோமாலிய நாட்டில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் இஸ்லாமிய நம்பிக்கையை முடக்குவதாக இருப்பதனால் கிறிஸ்தவ பண்டிகைகளுக்குத் தடைவிதிப்பதாக அரசு அறிவித்துள்ளது.

கிறிஸ்தவ கொண்டாட்டங்கள் எதுவுமே இஸ்லாத்துடன் தொடர்பற்றவை என்பதால் அவை தேவையற்றவை என சமய விவகார அமைச்சு விடுத்த அறிக்கை தெரிவிக்கிறது.

கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டால் கண்காணிப்பதற்கென சிறப்புப் படை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் தினத்தில் பலர் ஒரே இடத்தில் களியாட்டங்களுக்காக ஒன்றுசேர்வதும் தடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள், கிறிஸ்தவர்கள் தமது வீட்டில் கொண்டாட்டங்களை நடத்தலாம் என்றும், ஆனால் நட்சத்திர விடுதிகள், பொது இடங்களில் கொண்டாட்டங்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன என்றும் சமய விவகார அமைச்சின் அறிக்கை மேலும் கூறியது.

> இஸ்லாமியர்கள் கிறிஸ்மஸ் கொண்டாடுவது முறையல்ல. அப்படிச் செய்வது மதத்தைக் கைவிட்டமைக்கு ஒப்பானது. போரின் பாதிப்பில் இருந்து மீண்டு வருகையில் பலர் மேற்கத்தைய கலாசாரத்தை நாடுவது பாரம்பரியத்திலிருந்தும் கலாசாரத்திலிருந்தும் பிறழ்வை ஏற்படுத்தி வருகின்றது என்கிறது சோமாலிய அரசு.

"இஸ்லாமியர்கள் கிறுஸ்மஸ் கொண்டாடுவது முறையல்ல. அது தமது மதத்தை கைவிட்டமைக்கு ஒப்பாகும்" என அதிகாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சோமாலியாவில் தற்போது தான் மீள்குடியேற்றம் இடம்பெற்று வருகிறது. இந்தக் காலப்பகுதியில் பலர் மேலைத்தேய ஆடைகளை அணிய ஆரம்பித்துள்ளனர் என்றும் இது கலாசார பிறழ்வுக்கு வழிவகுக்கும் என்றும் அரசு கருதுகின்றது.

ஏற்கனவே புருணே நாட்டிலும் அதன் தலைவர் சுல்தான், கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்குத் தடை விதித்துள்ளார். பகிரங்கமாக கிறிஸ்மஸ் கொண்டாடினால் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும், கிறிஸ்தவர்கள் வீடுகளில் மட்டும் கொண்டாட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருமதி நாச்சியார் செல்வநாயகம்

# அடக்கத்தின் அற்புதம் வைத்தீசுவர ஐயா

வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு அடிப்படை எது என்று ஆராய்ச்சி செய்தால்அதுதூயமனமே என்பதனை அறியலாம். தூய மனம் உள்ள இடத்திலே உண்மை அன்பு ஒளிரும். அந்த அன்பு நிலைப்பட்ட வாழ்வே உண்மை வாழ்வாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உயர்ந்த மனிதர்கள் தங்களிடம் இருந்த அத்தனை சக்திகளையும், சுயநலமின்றிப் பிறருக்கே அர்ப்பணம் செய்துள்ளார்கள். அவ்வகையில் மனத்தூய்மையுடன் சுயநலமின்றிப் பிறருக்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்த செம்மனச் செம்மலே

> “என்றும் அன்பு ததும்பும் சிரிப்பை தன் உடைமையாகக் கொண்ட செம்மனச் செல்வராகிய ஐயா வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மையும் அவ்வழி நடக்க உழைத்த சான்றோர் ஆவர்.”

வைத்தீசுவர ஐயா. பொதுநல நோக்குடன், அடக்கத்துடன், சாந்த சொரூபியாக வாழ்ந்தவர்; பழக இனியவர்; பண்புக்கு இருப்பிடம். அகத்தின் அழகு முகத்திற் தெரியும்என்பதற்கிணங்க மலர்ந்தமுகம், அனைவரையும் அரவணைக்க வல்ல குளிர்ந்த பார்வை, நேரிய பாதையில் செல்லும் போக்கு, உள்ளத்தை வசமாக்கும் இனிய வார்த்தைகளை உடையவரே எங்கள் வைத்தீசுவர ஐயா.



காரைநகரில் தமிழ் வளர்ச்சிக்கழகம் ஒன்றை நிறுவி, தமிழ் மொழிக்காக அருந்தொண்டாற்றியவர். வேதாகமங்களில் அறிவு பெற்றவர். காரைநகரில் மணிவாசகர் சபையை நிறுவி சைவசமயத்துக்கு அருந் தொண்டாற்றி யவர். ஈழத்துச் சிதம் பரத்தை சிவபூமி ஆக்குவதில் பெரும் பங்காற்றியவர்.

வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழ் சங்கத்தை நிறுவ முன்னின்று உழைத்தவர். அத்துடன் அங்கு பண்டிதர் வகுப்பிலே பயின்ற மாணவர்களுக்கு சிறந்த முறையில் இலவசமாகக் கற்பித்தவர். பல சைவத்தமிழ்நூல்களை இலகு தமிழில் உருவாக்கி வெளியிட்டவர். இதனால் மாணவர்கள் இலகுவாகத் தமிழ் அறிவையும், சைவ வாழ்வின் சிறப்பையும் அறியும் வகை செய்தவர். ஈழத்துச் சிதம்பர ஆலயத்துக்குச் சமீபமாகத் தமது வசிப்பிடத்தை ஆக்கி, அங்கு குருகுலக் கல்வியை நடத்தியவர். உலகில் அறிஞர்கள் பலர் உள்ளனர். அவர்கள் எல்லோரும் பண்பாளர்களாக வாழ்கின்றார்களா என்பது கேள்விக்குறி. ஆனால் ஐயா அவர்கள், கசடறக்கற்று, அதன் வழியில் அடக்கத்துடன் நின்றொழுகிய பெருமைக்குரியவர்.

இறைவன் அன்புள்ளத்தையே விரும்புவான் என்பதை சுவாமி விபுலானந்தர் உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என்று குறிப்பிட்டுள்ளார். அது ஐயா, அவர்களுக்கு மிகப் பொருத்தமானது. அந்த வகையில் என்றும் அன்பு ததும்பும் சிரிப்பைத் தமது உடைமையாகக் கொண்ட செம்மனச்செல்வராகிய ஐயா, வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து எம்மையும் அவ்வழி நடக்க உழைத்த சான்றோர் ஆவார். அவர் தான் செய்யும் பணிகளை ஆரவாரமில்லாமல் ஆற்றியமையால், அவர் பணி சிவப்பணியாக திருத் தொண்டாக, சைவத் தமிழர்களால் போற்றப்படுகின்றது. உண்மையில் அடக்கத்தின் அற்புத வடிவாக ஐயா விளங்கியமை அவருடன் பழகியவர் களுக்குத் தெரிந்த ஒன்று. அடக்கத்தின் அற்புதமான அவர் வாழ்வைப் போற்றிப் பாராட்டுவோம்.

*கட்டுரையாளர் யாழ்.பல்கலையின் சிரேஷ்ட விரிவுரையாளர்.*

# இல்லை என்ற சொல்லை இல்லாமலாக்கிய இதயக்கனி

வ.இ.செல்வக்குமார்.


நடிகர்தானே, நாலாம் வகுப்புக்கூட படிக்காதவர்தானே என்று புரட்சித் தலைவரைப் பற்றி சிலர் நாக்கூசாமல் எள்ளி நகையாடிய நேரம் அது. புரட்சித்தலைவர் பள்ளியில் படிக்காவிட்டாலும் பல்கலைக்கழகமாய் தன்னை மாற்றிக் கொண்டவர். அதனால்தான் அந்த வள்ளல் பெருந்தகை, சென்னை தியாகராஜர் கலைக் கல்லூரியின் தவிசாளராகச் சிம்மாசனத்தில் அமரமுடிந்தது. பொன்மனச்செம்மல், வாரிக்கொடுக்கின்ற வள்ளல் மட்டுமல்ல தன் வாசல்தேடி வந்தவன் வானவில்லைக் கேட்டால்கூட, வளைத்துக் கொடுக்கின்ற வல்லமை பெற்றவர்.

அன்று ஏ.வி.எம்மில் படப்பிடிப்பை முடித்துக்கொண்டு கார் வாசலை நெருங்கும்போது திடீரென்று ஓட்டுநரிடம் காரை நிறுத்தச் சொல்கிறார். கர்ணனின் கட்டளைப்படி கார் நிற்கின்றது. காருக்குள் இருந்து ஹலோ செல்வம் என அழைக்கிறது. அந்தப் பெயருக்குரியவர் திகைத்துப்போய் கார் அருகே வருகிறார். உங்களைத்தான் பார்க்க வந்தேன் என்கிறார் சினிமா மக்கள் தொடர்பாளர். செல்வம் என்ன வேண்டும் சொல்லுங்கள் என்று கேட்டார் மக்கள் திலகம். என் நண்பரின் தம்பிக்கு தியாகராஜர் கலைக் கல்லூரியில் இடம்வேண்டும். முதலாவது இரண்டாவது பிரதி எல்லாம் அனுப்பி விட்டோம். பெயர் தகுதியெல்லாம் கேட்கிறார்கள். வள்ளல் அருகில் இருந்த திருப்பதிசாமி எல்லாவற்றையும் குறித்துக் கொள்கிறார். போய் வாருங்கள் நான் பார்த்துக் கொள்கின்றேன்.

தன் வாழ்நாளில் முடியாது என்கிற வார்த்தையை தமிழில் உள்ள அனாவசியமான வார்த்தைகள் என்று அப்புறப்படுத்தியவர் எம்.ஜி.ஆர். அதனால் தான் அவரால் மட்டுமே அவதார புருசரைப்போல் என்ன வேண்டும், நானிருக்கிறேன், நான் பார்த்துக் கொள்கின்றேன். கலங்காதீர்கள்,கவலைப்படாதீர்கள் கண்ணீரை நான் துடைக்கின்றேன் என்றெல்லாம் சொல்லிச் செயற்பட முடிந்தது.

இரண்டு நாள் கழித்து சத்தியா புகைப்பட நிலையத்தில் புரட்சித் தலைவரை கல்லூரி அனுமதி (துண்டு) விடயமாக விவரம் கேட்கச் செல்கிறார் செல்வம். தான் யாரென்ற குறிப்புடன் (ஸ்லிப்) உள்ளே செல்கிறார்.ஆனால் மக்கள் திலகத்தைப் பார்க்க முடியாது என்று அவரின் பார்வைக்கே செல்லாமல் திருப்பதிசாமி என்பவரால் (ஸ்லிப்) திருப்பி அனுப்பப்படுகிறது. தான் அவமானப்படுத்தப்பட்டு விட்டதாக வேதனையுடன் செல்வம் திரும்புகின்ற பொழுது சொல்லி வைத்தாற்போல் காட்சிகளை முடித்துக் கொண்டு அந்தப் பகுதியை விட்டு வெளியில் வந்து கொண்டிருந்த வள்ளல், செல்வத்தைப் பார்த்து விடுகிறார். கலையகத்துக்கு வந்துவிட்டு என்னை ஏன் பார்க்கா மல் செல்கிறீர்கள்? நடந்தவைகளைச் சொல் கிறார் செல்வம். திருப்பதிசாமி திருதிரு என்று விழிக்கின்றார்.நான் பார்த்துக் கொள்கின்றேன். நீங்கள் தைரியமாகப் புறப்படுங்கள் நாளை கடைசி நாள். நம்பிக்கை இழந்து செல்கிறார் செல்வம்.

மறுநாள் ஏ.வி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் தயாரிப்பாளர் ஜி.என்.வேலுமணியின் மகன் சரவணன் திருமணம். வாழ்த்த வந்த வள்ளல், மண்டப ஓரமாக இருந்த புற்றரையில் வட்ட வரிசையில் போடப்பட்டிருந்த நாற்காலியில் செய்தித்தாள் நண்பர்களுடனும் திரையுலக பிரமுகர்களுடனும் பேசிக் கொண்டிருக்கிறார். தாமதமாக வந்த செல்வம் உட்காருவதற்கு நாற்காலி இல்லாமல் சுற்றிச் சுற்றி வருகிறார். இதைப்பார்த்த வள்ளல் அனுமதி கிடைக்கவில்லை என்று வேதனைப்படாதீங்க செல்வம். நான் நாற்காலி தருகிறேன் என்று, தான் உட் கார்ந்திருந்த நாற்காலியிலே நகர்ந்து அருகில் உட்கார வைக்கிறார். இரு பொருளில் பேசிய வள்ளலின் கருத்து அப்போதுகூட செல்வத்துக்குப் புரிந்தும் புரியாமல் இருந்தது. மறுநாள் காலையில் அனுமதி கேட்ட நண்பருக்குத் தொடர்பு கொண்டு உன் தம்பியின் அனுமதி விடயம் என்னாச்சு



என்று செல்வம் கேட்கிறார். இன்றிலிருந்து தம்பி கல்லூரிக்குப் போகிறான். இதை உங்களிடம் சொல்ல இரண்டு நாள் முயற்சித்தேன். உங்களைப் பார்க்க முடியல என்று நண்பரிடமிருந்து பதில் வருகிறது. செல்வம் சிந்தை குளிர்ந்து போகிறார். வள்ளல் நிகழ்த்திய அற்புதங்களில் இதுவும்ஒன்றோ என்று சிலாகித் துப் போன சினிசெய்தி செல்வம், நேற்று இருபொருளில் வள்ளல் பேசியதைப் புரிந்து கொண்டு ராமாவரம் தோட்டத்தை நோக்கி நன்றி சொல்லக் கிளம்பினார். (தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித வரலாற்றில் மறக்க முடியாத சுனாமிப் பேரவலம்

## 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி இடரின் 11 ஆவது நினைவு தினம் இன்று

சேரலாதன்

இன்று நினைத்தாலும் கூட நெஞ்சம் பதைபதைக்கின்றது. 1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிகழ்ந்த மிகப்பெரிய சுனாமி இடர் என வரலாற்றிலும் பூகோள ரீதியிலும் புதிய பதிவுகளையும், அழியாத வடுக்களையும் ஏற்படுத்திவிட்ட 2004 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் அவலங்களையும், இடர்களையும் எழுத்தில் மட்டுமல்ல சொல்லிலும் எடுத்துரைக்க முடியாது.

தெற்காசியாவையே உலுக்கிய இந்தத்துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பலர் அதே நினைவால் நித்திரையை இழந்து தவிக்கின்றனர். பலர் சுயத்துக்குத் திரும்பாத நிலையில் நடைப்பிணங்களாக மாறியுள்ளனர்.

இந்தோனேசியாவின் சுமாத்ரா கடற்பரப்பில் பூமியதிர்வு ஏற்பட்டதன் விளைவாகவே இந்த சுனாமி இடர் ஏற்பட்டது. இதன் காரணமாக இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மாலைதீவு, சோமாலியா, மியன்மார், மலேசியா, சீசெல்ஸ் உட்பட பல நாடுகள் பாதிப்புக்களை எதிர்கொண்டன. இதில் இந்தோனேசியாவும் இலங்கையும் அதிக இழப்புக்களை எதிர்கொண்டன. இந்தோனேசியாவில் 80 ஆயிரத்து 246 பேரும், இலங்கையில் 28 ஆயிரத்து 627 பேரும், இந்தியாவில் 8 ஆயிரத்து 955 பேரும், தாய்லாந்தில் 4 ஆயிரத்து 812 பேரும், சோமாலியா, மலேசியா, மியன்மார், தான்சானியா, பங்களாதேஷ், சீசெல், கென்யா ஆகிய நாடுகளில் தலா 142, 66, 53, 10, 2, 1, 1 பேர் என்ற அடிப்படையிலும் அந்த ஆழிப்பேரலை மக்களைக் காவுகொண்டது.

பூகோள ரீதியில் வர்ணிக்கப்படும் முக்கிய 11 தட்டுக்களில் இரண்டில் பல நூறு ஆண்டுகளாக நெருக்குதல் உருவாகி அதன் ஒட்டுமொத்த விசையின் உச்சக்கட்ட வெளிப்பாடுதான் இந்த சுனாமி என்கின்ற ஆழிப்பேரலை என்கின்றனர். சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் உயிர்களைக் காவுகொண்ட 2004 ஆம் ஆண்டின் ஆழிப்பேரலை அனர்த்தம் வரலாற்றிலும் முக்கிய பதிவை ஏற்படுத்தி விட்டது.

சுனாமி தொடர்பான தகவல்கள் மிக நீண்டகாலமாக அறியப்பட்டும் பேசப்பட்டும் வந்துள்ள போதிலும், சர்வதேச ரீதியில் கடந்த 1963 ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்துலக மாநாட்டில் முழு உலகுக்கும் பொதுவான சுனாமி என்ற சொல் நடைமுறைக்கு வந்தது.

சுனாமி என்பதற்கு தமிழில் கடற்கோள் அல்லது ஆழிப்பேரலை என்ற சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. கடல் அல்லது மிகப்பெரிய ஏரி போன்ற நீர்ப்பரப்புக்களில் திடீரென பெருமளவு நீர் இடம்பெயரும் போது சுனாமி இடர் ஏற்படுகின்றது. பூமி அதிர்ச்சி, எரிமலை வெடிப்பு, விண்பொருள்களின் மோதுகை போன்றவை சுனாமி அலைகளை ஏற்படுத்தக்கூடிய பிரதான காரணிகளாகும்.

சுனாமியினால் பூமியின் மேற்பரப்பு மோசமாக பாதிக்கப்படுகின்றது. இறுதியாக ஏற்பட்ட சுனாமி இடர் ஜப்பானின் ஹிரோசிமாவில் அமெரிக்காவினால் வீசப்பட்ட அணுகுண்டைவிட 1500 மடங்கு பாதிப்பை ஏற்படுத்திவிட்டதாகக் கூறப்படுகின்றது. கடலில் உருவாகிய இராட்சத அலைகளின் வேகம் மணிக்கு 1000 கிலோமீற்றராகப்பதிவுசெய்யப்படுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

உலக வரலாற்றில் சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடு ஜப்பான்தான். சுமாத்ரா தீவில் அடிக்கடி பூமியதிர்வு ஏற்படுவதால் அங்கு சுனாமி தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

> **அழியாத வடுக்களை ஏற்படுத்திவிட்ட, 2004 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஏற்பட்ட ஆழிப் பேரலையின் அவலங்களையும், இடர்களையும் எழுத்தில் மட்டுமல்ல சொல்லிலும் எடுத்துரைக்க முடியாது. தெற்காசியாவையே உலுக்கிய இந்தத் துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பலர் அதே நினைவால் நித்திரையை இழுந்து தவிக்கின்றனர். பலர் சுயத்துக்குத் திரும்பாத நிலையில் நடைப் பிணங்களாக மாறி யுள்ளனர்.**

சுனாமியின் தாக்கத்தினால் எமது நாடு பேரழிவைச் சந்தித்தது. மட்டக்களப்பு, திருகோணமலை,அம்பாறை,அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டன. தெற்கில் சனநெரிசல் மிகுந்த பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த ரயில் சுனாமி அலைகளால் தாக்குண்டதில் ஆயிரத்து 700க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இதைவிட கடற்கரை விடுதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் உயிரிழந்தனர். சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள், பெரிய லொறிகள், பயணிகள் நிறைந்த பஸ்கள் என்பன வேறுபாடு இல்லாமல் சுனாமி அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டன.

இந்த நூற்றாண்டின் பேரவலமாக 2004 ஆம் ஆண்டின் சுனாமி பதிவாகியுள்ளது. மனிதர்களை உருவாக்கி, ஆதரித்து, அரவணைக்கின்ற இயற்கையே அவ்வப்போது பேரிடர்களை ஏற்படுத்தி மனித குலத்துக்கு எச்சரிக்கை விடுத்து வருகின்றது. ஆனால் இயற்கையை வெல்வதற்கு மனிதர்களால் முடியுமா? முடியவே முடியாது. இயற்கை அளிக்கின்ற தண்டனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1805 – பிறஸ்பேக் ஒப்பந்தத்தில் ஒஸ்ரியாவும் பிரான்சும் கைச்சாத்திட்டன.

1860 – கழகங்களுக்கு இடையேயான முதலாவது உதை பந்தாட்டப் போட்டி இங்கிலாந்து சீபீல்ட் மைதானத்தில் இடம்பெற்றது.

1870 – 12.8 கி.மீ நீள 'பிறஜஸ்' புகையிரத சுரங்கப் பாதை அல்ப்ஸ் பகுதியில் பூர்த்தி.

1898 – றேடியம் பிரித்தெடுக்கப்பட்டதாக மேரி மற்றும் பிறெர் கியூரி அறிவிப்பு.

1925 – துருக்கி கிறகோரியன் நாட்காட்டியை பின்பற்றத் தொடங்கியது. 1982 – 'ரைம்ஸ்' சஞ்சிகையால் ஆண்டின் சிறந்த மனிதராக மனிதரல்லாத ஒன்று தனிப்பட்ட கணினி தெரிவு.

1991 – சுப்ரீம் சோவியத் ஒன்றியம் கூடி சோவியத் ஒன்றியத்தை முறையாகக் கலைப்பு.

1994 – 15ஆயிரம் தாதியர் வேலை நிறுத்தம்
– வடக்கு கிழக்கில் இடம்பெறும் போருக்கு நிமிடமொன்றுக்கு 45 ஆயிரம் ரூபா செலவு என மதிப்பீடு.

1996 – தென் கொரிய வரலாற்றில் மிகப் பெரிய வேலை நிறுத்தம் ஆரம்பம்.

1999 – வடக்கு கிழக்கில் 4 மேலதிக கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்.
– நாட்டிலுள்ள சகல சக்திகளையும் திரட்டி இனப்பிரச்சினைக்குத் தீர்வு என லண்டனில் ஜனாதிபதி சந்திரிகா பேட்டியொன்றில் தெரிவிப்பு.
– மத்திய ஐரோப்பாவில் 'லோதர்' புயல். 137 பேர் பலி.

2003 – தென்கிழக்கு ஈரான் 'பாம்' நகரில் 6.6 அளவிலான புவியதிர்ச்சி. பல்லாயிரக்கணக்கானோர் மரணம்.

2006 – நைஜீரியா லாகோசில் எண்ணெய்க் குழாய் வழி வெடித்து 260 பேர் வரை பலி.
– இலங்கையில் அனர்த்த நிவாரணப் பணி தாமதம். இருதரப்புமே இதற்குக் காரணமென பதவி விலகிச் செல்லும் ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் குற்றச்சாட்டு.

2009 – தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைகுறித்து அடுத்த வாரம் முடிவு என பிரதி நீதியமைச்சர் புத்திர சிகாமணி தெரிவிப்பு.
– உலகின் மிக நீண்ட அதிவேக புகையிரதப் பாதை சீனா பீஜிங் குவான்சூ நகர்களிடையே திறந்து வைப்பு.

2013 – உலகில் சிறந்த டெங்கு சிகிச்சை நிலையம் நீர்கொழும்பு வைத்தியசாலையில்.

## பள்ளிக்கூடம் கட்டப்போகிறோம் மன்னா!



தருமபுரி என்ற நாட்டின் மன்னனாக வராகதன் என்பவன் இருந்தான். அவன் மகா கஞ்சனாக இருந்தான். தனது கஜானாவில் இருந்து ஒரு சதத்தைக்கூட எடுத்து எவருக்கும் கொடுத்து விடமாட்டான். தானம், தர்மம், உதவி போன்ற வார்த்தைகளைக் கேட்டால் முகத்தைச் சுழிப்பான்.

நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்த புலவர்கள் பலர், ஆரம்பத்தில் அரண்மனைக்கு வந்து கவிபாடத்தான் செய்தனர். நிறையப் பொன் பொருள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் வந்தவர்களின் வாயில் மண்தான் விழுந்தது.

புலவர்களே! எனது நாட்டில் இத்தனை அருமையாகக் கவிதை புனையும் கவிஞர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்ற பொழுது எனக்குப் பெருமையாக உள்ளது. மிகவும் அபாரமாக எழுதுகிறீர்கள். தொடர்ந்து இது போன்ற உன்னதமான அழியாக் காவியங்களையே படையுங்கள். எனது வாழ்த்துக்கள். சென்று வாருங்கள்!" என்று சொல்லி எல்லோரையும் அனுப்பி வந்தான்.

புலவர்கள் அடைந்த துயரத்துக்கு அளவே இல்லை.

"ஈவு இரக்கமே இல்லாத இப்படி ஒரு மன்னனும் இருப்பானா" என்று முனகிக் கொண்டே புலவர்கள் வெறுங்கையுடன் திரும்பிப் போனார்கள்.

அதன் பிறகு அவனது அரண்மனைக்கு புலவர்களோ அறிஞர்களோ பண்டிதர்களோ எவருமே செல்வது கிடையாது.

ஒரு சமயம் ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு நிதி கேட்டுச் சில பண்டிதர்கள் மன்னனிடம் வந்தனர்.

"பள்ளிக்கூடம் கட்டப்போகிறீர்களா? நல்ல காரியம்தான். எமது நாட்டில் கல்வியறிவற்றவர்கள் எவருமே இருக்கக்கூடாது. உங்களால் இயன்ற அளவு பள்ளிக்கூடங்கள் கட்டி எல்லோருக்கும் கல்வி புகட்டுங்கள். உங்கள் சேவைக்கு எனது வாழ்த்துக்கள். சென்று வாருங்கள். நான் அந்தப்புரத்துக்கு உடனே செல்ல வேண்டும்'' என்று சொல்லி அவர் களையும் வெறும்கையுடன் திருப்பி அனுப்பிவிட்டான்.

ஒரு சமயம் கோயில் ஒன்றின் கும்பாபிசேகத்துக்காக நிதி கேட்டு வராகதனிடம் சில அர்ச்சகர்கள் வந்தனர்.

"கடவுளைக் கௌரவப்படுத்த வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமையாகும். அதைச் சரியாகச் செய்வதன் மூலம் நாடு சுபீட்சமடையும். மக்களும் எவ்வித குறையுமின்றி வாழ்வார்கள். தாராளமாகக் கடவுளுக்கு விழா எடுங்கள். அது எந்த நாள் என்பதை மட்டும் சொல்லுங்கள். அந்த நாளில் வந்து தலையைக் காட்டி விட்டு வந்து விடுகின்றேன். இப்பொழுது சென்று வருகிறீர்களா....எனக்கு தர்பாரில் அவசரமான வேலை ஒன்று காத்திருக்கிறது'' என்று சொல்லி அவர்களையும் வெறுங்கையோடு திருப்பி அனுப்பி விட்டான்.

அர்ச்சகர்கள் பெருத்த அவமானத்தோடு வெளியேறினார்கள்.

அரசனின் இந்தக்கருமித்தனம் நாடு முழுவதுமே தெரியும். இது நல்ல குணமல்ல என்பதை அவனுக்கு யார் எடுத்துக் கூறுவர்?

மன்னன் ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடப் புறப்பட்டுச் சென்றான்.

குதிரை, தலைநகரை விட்டு ஒருகாட்டுப்பாதையில் சென்றது. அப் பொழுது – எதிரே மாமுனிவர் ஒருவர் வருவதைக் கண்டான். வராகதன் உடனே குதிரையை நிறுத்திக் கீழே இறங்கி முனிவரைக் கை கூப்பி வணங்கினான்.

அவனையும் அவனது செயலையும் கண்ட அந்த முனிவர் சட்டென்று தமது கண்களை மூடிக் கொண்டார்.


இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட மன்னன் " தவ சிரேஷ்டரே! நான் இந்த நாட்டின் மன்னன். தங்களை உள்ளன்போடு வணங்கினேன். ஆனால்தாங்கள்என்னை ஆசிர்வதிக்காமல் கண்களை மூடிக்கொண்டீர்களே. இதன் காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

அந்த முனிவர் இப்போது மன்னனை நேருக்கு நேர் பார்த்தார்.

நீ இந்த நாட்டு மன்னன் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். அத்தோடு நீ ஒரு கருமி என்பதும் எனக்குத் தெரியும். நன்றாகக் கேட்டுக்கொள்...... திறமையாகப் பதில்சொல்ல முடியாதவனின் வித்தையும், கோழைகளின் பலமும், தானதர்மங்கள் செய்யாதவனின் செல்வமும் வீண். தான தர்மங்களைச் செய்யாதவனைக் கண்களால் பார்ப்பதே பாவம் என்கிறது சாஸ்திரம். அதனால்தான் உன்னைக் கண்டதும் எனது கண்களை மூடிக் கொண்டேன்" என்றார் முனிவர்.

இந்தவிளக்கத்தைக் கேட்ட மன்னனின் கண்கள் உடனே திறந்தன.



## சுத்தம் சுகம் தரும்!



சின்னப் பாப்பா சேதிகேள்!
சேற்றில் காலை வைக்காதே!
சுத்தம் உனக்கு சுகமாகும்!
அசுத்தம் என்றும் நோயாகும்!

ஈமொய்த்த பண்டம் தின்னாதே!
இனிமை வாழ்வைக் கெடுக்காதே!
எச்சிலை எங்கும் துப்பாதே!
எதிலும் தூய்மை தவறாதே!

கூழானாலும் நீ குளித்துக்குடி!
குறள்தனை தினமும் நீயும்படி!
கந்தையானாலும் கசக்கிக்கட்டு
கௌரவம் என்பதைத் தள்ளிவிட்டு!

மலம்சலம் தெருவில் கழிக்காதே!
மண்ணின் தூய்மையைக் கெடுக்காதே!
சுற்றிலும் தூய்மையைக் காத்தாலே
சுகக்குறைவே உன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி என்பது மன நிலையில் உள்ளது


**கோ.எழிலன்**

சரியான எண்ணங்களை வளர்த்து, சரியானபடி சிந்திக்கத் தொடங்கி விட்டால் வாழ்வு மகிழ்வுடன் அமையும்; வெற்றியால் நிறையும்; சாதனைகளால் சிறக்கும். எதை நீங்கள் வெற்றி என்று கருதுகிறீர்கள்? அதைத் தீர்மானியுங் கள். அந்தத் தீர்மானம்தான் பாதி வெற்றி. ஆனால் அதைத்தீர்மானிப்பதுதான் மகத் தான கடினமாக இருக்கிறது என்று எண்ணுகிறீர்களா?

தாமரையின் தண்டு நீள்வது குளத்தில் உள்ள தண்ணீரின் அளவைப் பொறுத்தது என்றார் வள்ளுவர் பெருமான். உங்கள் உள்ளத்தில் அடங்கியிருக்கும் எண்ணத்தின் ஆற்றல் உங்களை எந்த அளவு உந்தித் தள்ளுமோ அந்த அளவுதான் உங்கள் வெற்றியும் இருக்கும்.

ஆக, வெற்றி பெற்ற அத்தனை மனிதர்களுடைய வாழ்க்கையும் எமக்கு வழங்குவது ஒரே ஓர் உபதேசம்தான். அந்த வெற்றி ஒரு மனோநிலையே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதே அது.

மனிதனின் எண்ணங்களே, மனிதனை உருவாக்குகின்றன என்ற புத்தரின் வாசகங்கள் இன்று உலக மொழிகளாகிவிட்டன. எண்ணங்கள், விதைகள், செயல்கள் எண்ணங்களின் கனிகள். ஆகவே நாம் பயன் தரும் சிந்தனைகளை மேற்கொள்வதன் மூலம் எமது சூழ்நிலையை மாற்றி விட முடியும். வெற்றி என்பது வெற்றி பெற வேண்டும் என்ற தீராத தணியாத ஆவலின் கனியாகும்.



வெற்றி வேண்டுமா? முதலில், நான் வெற்றி வேண்டுகிறேன், வெற்றியின் மீது ஆறாத காதல் கொண்டு அதன் வருகைக்காக ஒவ்வொரு நிமிடமும் துடிக் கின்றேன் என்று நினையுங்கள்.

அமெரிக்க ஞானி மொஸன் கூறினார், எனக்கு அதிகமாகத் தேவைப்படுவர் யார் என்றால், என்னால் இயன்றதைச் செய்யுமாறு தூண்டும்மனிதர்தான் என்று. என்னால் இயன்றதைச் செய்தல் என்ற அவருடைய வார்த்தையின் கருத்தை ஆழ்ந்து சிந்தித்துப் பார். வம்சபாரம்பரியத்தை விட சூழ்நிலைகளும் சுற்றுச் சார்புகளும்தான் பலம் வாய்ந்தவை என்று ஐம்பதினாயிரம் குழந்தைகளின் குண ஒழுக்கங்கள் பற்றி முப்பது ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தபின் அறிவியல் விற்பன்னர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

ஒரு வெடிகுண்டை, சிறுபிள்ளைகள்கூட வைத்து விளையாடலாம். ஆனால் அதை ஓங்கி அடித்தால் பிரமாண்டமான ஓசையுடன் அது வெடித்து விடுகின்றது. அதேமாதிரி தன்னுடைய வாழ்வில் ஒரு சோதனை ஏற்படும் வரையில் ஒவ்வொருவனும் தன்னுள் மறைந்து கிடக்கும் மகோன்னத ஆற்றலுக்கே அந்நியன் போன்று இருக்கின்றான்.

இரண்டாவது உலக யுத்தம் ரஷ்ய மக்களின் மகத்தான சக்தியை வெளிக்கொணர்ந்து உலகறியச் செய்தது. போர் என்ற நெருப்பானது அவர்களது திறமை என்ற வெடிகுண்டை வெடிக்கச் செய்து விட்டது.

ஹோமரின் நூல்களைப் படித்துவிட்டு, நான் தெருவிலே போகும்போது மனிதர்கள் எல்லாம் பத்து அடி உயரம் உள்ளவர்கள் போன்று எனக்குத் தென்பட்டனர் என்று கூறினார் ஒருவர்.

எமக்குப் பிடித்த புத்தகங்களே எம்முடைய எண்ணங்களை உருவகப்படுத்துகின்றன. எமக்கு உகந்த ஆசிரியர்களே எம்முடைய குருவாகவும், அவர்களுடைய எழுத்துக்களே எமக்கு அறிவுரையாகவும் ஆகி விடுகின்றன. நாம் அவர்களுடைய கண்கள் மூலமாக உலகத்தைப் பார்க்கின்றோம். உயரிய நோக்கும், தெள்ளிய சிந்தனையும், ஆழிய கருத்துக்களும் பரந்த ஞானமும் உடைய நூல்கள் எம்மையும் அவ்விதமே ஆக்குகின்றன. அதற்கு மாறாக குயுக்தியும், குறுகிய நோக்கும், கோணல் புத்தியும், கெட்ட செயல்களும் நிரம்பிய நூல்கள் எம்மையும் அவ்விதம் ஆக்குகின்றன. நாம் உண்ணும் உணவின் பயனை அனுபவிப்பதை விட்டு எவ்விதம் தப்பிக்க முடியாதோ, அதேமா திரி நாம் படிக்கும் நூல்களின் பயன்களை அனுபவிப்பதை விட்டும் நாம் தப்பிக்க முடியாது.

சில நூல்களை ருசி பார்க்க வேண்டும். சில நூல்களை மெல்லாது விழுங்கிட வேண்டும். சில நூல்களை நன்கு சுவைத்து மென்று விழுங்கி ஜீரணிக்க வேண்டும். படித்தல் ஒரு மனிதனை முழுமனிதனாக்குகின்றது. எழுதுதல் ஒரு மனிதனை சரியான மனிதன் ஆக்குகின்றது. சரித்திரங்கள் ஒருவனை அறிவாளியாக்குகின்றன. காவியங்கள் ஒருவனை உற்சாகமுள்ளவனாக ஆக்குகின்றன. கணக்கு ஒருவனை நுண்மையானவனாக ஆக்குகின்றது. நீதி நூல்கள் ஒருவனைக் கண்டிப்பானவனாக ஆக்குகின்றன. தர்க்க சாஸ்திரம் ஒருவனுக்கு வாதாடும் திறமையை அளிக்கின்றது என்றார் பேரறிஞர் பேசண். இளைஞர்களுக்கு உபதேசம் செய்தாகி விட்டது.பிரசங்க மாற்றியாகி விட்டது. பாடம் படித்துக் கொடுத்தாகிவிட்டது. உத்தரவிட்டாகிவிட்டது. ஆலோசனை கூறியாகி விட்டது. ஆனால் அவர்களுடன் உரை யாடல்தான்

> "இளைஞர்களுக்கு உபதேசம் செய்தாகி விட்டது.பிரசங்கமாற்றியாகி விட்டது. பாடம் படித்துக் கொடுத்தாகிவிட்டது. உத்தரவிட்டாகிவிட்டது. ஆலோசனை கூறியாகி விட்டது."

செய்யப்படவில்லை என்று ஜான்சன் கூறினார். ஒரு புத்தகம் எழுத அரைவாசி நூல் நிலையத்துக்கு மேல் படிக்க வேண்டும் என்று ஹோமருடைய காவியங்களைப் பற்றி ஒருவர் கூறினார். ஒரு தடவை ஹோமரைப் படி; அதற்கு மேல் நீ வேறு நூல்களைப் படிக்காதே; தேவை இல்லை. ஏனெனில் அதன் பின் எல்லா நூல்களும் சாதாரணமானதாகிவிடும். பிற ரின் கவிகளானவை வசனங்கள் போன்று ஆகிவிடும். அதைத்தொடர்ந்து ஹோமரே உனக்குத் தேவைப்படும் எல்லா நூல்களுமாகிவிடும் என்று மேலும் அவர் கூறுகிறார்.

# வீட்டுத் தோட்டம் அமைப்பதால் ஏராளமான நன்மைகள்

மரக்கறி விற்கும் விலைக்கு அசைவக் கறிகள் வாங்கிவிடலாம் என்று சிந்தனை செல்கின்றது. பெரும்பாலும். மரக்கறிகள் விலை அவ்வளவுக்கு உச்சம். பச்சை மிளகாய் போன்றவற்றை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

இந்த நிலையில்தான், நாங்கள் ஒரு வீட்டுத்தோட்டம் வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்ற யோசனை எட்டிப் பார்க்கும். வைத்திருக்கலாம் தான். ஆனால் எமக்குத்தான் நேரம் இல்லையே. விலை அதிகரிக்காமல் இருந்தாலும் வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தியாகும் மரக்கறிகளை உண்பதால் நோய்களில் இருந்தும் தப்பிக்கலாம். சந்தைகளில் மரக்கறிகளை பார்ப்பதற்கு அழகாக அடுக்கிவைத்திருப்பார்கள். அதில் ஒரு மறு கூட இருப்பதில்லை. அதிலேயே உணர்ந்து கொள்ள வேண்டும் அது மருந்துகள் உபயோகிக்கப்பட்டவை என்று. ஒரு நாளில் எவ்வளவு மருந்துகள் விசிறப்பட்ட உணவுகளை நாங்கள் உட்கொள்கிறோம் என நினைத்தாலே நோய் வந்துவிடும். மரக்கறிகளில் மட்டுமல்ல, பழங்களில் கூட மருந்துகள் தான் உள்ளன. உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இரசாயனப்.பொருள்கள் ஊறியவை சந்தைப்படுத்தப்ப்டுகின்றன. வீட்டுத் தோட்டம் இல்லாத காரணத்தால் நாங்களும் அவற்றைத்தான் உண்டாகவேண்டும்.

வீட்டில் தோட்டம் அமைத்தால் எமது அன்றாட மரக்கறித் தேவையை நிறைவாகவே பூர்த்தி செய்ய முடியும். வீட்டுக்கு வேண்டிய காய்கறிகளை நாமே உற்பத்தி செய்து கொள்ள வீட்டுத்தோட்டத்தை அமைக்கலாம். வீட்டின் பின்புறமாக சிறிய காய்கறித் தோட்டம் அமைத்தால் சிறுசேமிப்புக்கு உதவும். அத்துடன் வீட்டுக்குத் தேவையான காய்கறிகளையும் பெறமுடியும். காய்கறிகள் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானவையாகும். அதுவும் குறிப்பாக சைவ உணவு உண்பவர்களுக்கு மிகவும் அவசியம். இவை உணவின் ஊட்டச்சத்தை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், உணவை ருசியாக்குகின்றன. அன்றாட வாழ்வுக்கு தேவையான காய்கறிகளை வீட்டுக் காய்கறித் தோட்டத்தில், எம்மிடம் உள்ள சுத்தமான தண்ணீர் மற்றும் சமையலறை மற்றும் குளியலறை கழிவு நீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யலாம். இதன் மூலம், உபயோகமில்லாத தண்ணீர் தேங்கி நிற்பதையும், அதனால் ஏற்படும் சுகாதார கேட்டையும், சுற்றுச் சூழல் மாசுபாட்டையும் தடுக்க முடிகிறது. பயனுள்ள வகையில் காய்கறி உற்பத்தியை மேற்கொள்ள முடிகிறது. மிகக் குறை வான இடத்தில், மிக எளிதான முறையில் நோய் மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடிகிறது. மேலும் பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. நோய் மற்றும் பூச்சித் தாக்கிய பகுதிகளை செடிகளில் இருந்து அகற்றினால் போதுமானதாகும். இதனால் காய்கறிகளில் நச்சு இரசாயனங்கள் படிவதைத் தவிர்க்க முடிகிறது.


வீட்டுத்தோட்டத்தில் கத்தரி, வெண்டை, தக்காளி, அவரை, மிளகாய் ஆகிய காய்கறிச் செடிகளை வளர்க்கலாம். வெண்டை, கொத்தவரங்காய், சின்ன வெங்காயம் ஆகியவற்றை விதை மூலம் பயிர் செய்யவேண்டும். நேரடியாக விதைகளைத் தரையில் ஊன்ற வேண்டும்.கத்தரி, தக்காளி, பெரிய வெங்காயம், மிளகாய் ஆகியவற்றை நாற்றுகள் மூலம் நடுகை செய்ய வேண்டும்.




காய்கறிகளுடன் சேர்த்து பூச்செடிகளையும் வளர்க்கமுடியும். அவரை, புடோல், பீர்க்கு, பாகல், பூசணி ஆகியவை கொடி வகை காய்கள். அவரையைச் செடியாகவோ, கொடியாகவோ வளர்க்கலாம். புடோல், பீர்க்கு, பாகல், பூசணி ஆகியவற்றை கொடியாக மட்டுமே வளர்க்க முடியும். இவை மட்டுமன்றி அரைக்கீரை, தண்டுக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, பாலாக்கீரை, முளைக்கீரை, காசினிக் கீரை, வெந்தயக் கீரை ஆகியவை கீரை வகைகளைச் சார்ந்தவை. அரைக்கீரை, தண் டுக் கீரை, பாலாக்கீரை, காசினிக் கீரை, வெந்தயக் கீரை ஆகிய வற்றை நேரடி விதைப்பு முறையிலே பயிர் செய்யலாம்.

வீட்டுத்தோட்டங்கள் மூலிகைகளுக்கும் ஏற்றவை. துளசி, திருநீற்றுபச்சிலை, தூதுவளை, ஆடாதோடை, கற்பூரவள்ளி, சிறியாநங்கை (நிலவேம்பு) செம்பருத்தி ஆகியவற்றைச் செடியாகவே வாங்கி நட்டுப் பயன்பெறலாம். வீட்டுத் தோட்டத்தில் கட்டாயம் இருக்க வேண்டியது பப்பாளி. பப்பாளி மரத்தில் ஆண், பெண் என இரண்டு வகைகள் உண்டு. ஆண் மரம் பூக்க மட்டும் செய்யும். பெண் மரம்தான் காய் கொடுக்கும். அதேபோல் வீட்டுத் தோட்டத்தில் இருக்க வேண்டிய மரங்களில் கருவேப்பிலை, முருங்கை என்பன பயன்தரவல்லவை. இவை போன்று பல வகையான செடிகள், கொடிகள் மற்றும் மரங்களை வீட்டுத்தோட்டத்தில் வளர்த்துப் பயன்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அதர்வாவைப் பயமுறுத்திய படம்

"பரதேசி", "சண்டிவீரன்", "இரும்புக் குதிரை" என அடுத்தடுத்து அதர்வா நடித்த படங்கள் அவருக்கு ஏமாற்றத்தைத் தந்தன. பரதேசிக்காக கடுமையான பயிற்சி, தோற்றத்தில் மாற்றம் செய்து நடித்தும் ஹிட்டாக அமையாததால் அவர் கவலையில் இருந்தார். அண்மையில் ரவி அரசு இயக்கத்தில் வெளியான "ஈட்டி" வெற்றியாக அமைந்து கைகொடுத்திருக்கிறதாம். இதுபற்றி அதர்வா கூறியது: ஈட்டி படத்துக்காக 2 வருடம் மிகப்பெரிய அளவில் உழைத்தேன். ஆனாலும் பட ரிலீஸ் தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது. ரிலீஸ் ஆகும் சமயத்தில் மழை வெள்ளம் குறுக்கிட்டு அதன் காரணமாகவும் தள்ளிப் போனது.

மழையின் பிடியிலிருந்து மக்கள் மீண்டால் போதும் என்று நினைத்துக்கொண்டிருந்தோம். அப்போது தயாரிப்பாளர் மைக்கேல் ராயப்பன் படம் ரிலீஸ் பற்றி கூறினார். மழையின் பிடியில் சிக்கிய மக்கள் மெல்ல மெல்ல மீண்டுகொண்டிருந்த நிலையில் படம் வெளியாகிறதே என்ற ஒரு பயம் என் மனதுக்குள் இருந்தது. ஆனால் இது மக்களுக்கு சிறந்த பொழுதுபோக்குப் படமாக அமைந்துவிட்டதை பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். எனது மனதிலிருந்த பயமும் அகன்றது. அடுத்து ராஜ் மோகன் இயக்கத்தில் 'ருக்குமணி வண்டி வருது, சந்தோஷ் இயக்கத்தில் 'கணிதன்' படங்களில் நடித்து வருகிறேன். என்றார்.




machi... facebook la உண் frinds list ல இருக்க ஜனனிய நான் sincere ah லவ் பண்றேன், நீ தான் மச்சி எங்கள சேத்து வைக்கணும்...




Theep Ganthan Retweeted



**ஸ்டைலிஸ் தமிழன்**
பைத்தியம் என்று ஏளனமாக பார்க்கிறோம்.. ஆனால்!! அவர்கள் தான் வாழ்நாள் முழுவதும் சிரித்து கொண்டு இருக்கிறார்கள்..

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கூடும். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்தி இலாபம் காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**இடபம்:** திட்டமிட்டு செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மிதுனம்:** நண்பர்களுடன் கலகலப்பாகப் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். பெண்களால் நன்மை உண்டாகும்.

**கடகம்:** எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பர். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிங்கம்:** பேச்சில், அன்பும் பண்பும் கலந்திருக்கும். தொழில் வளர்ச்சியால், ஆதாயம் பன்மடங்கு அதிகரிக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். சுப செய்தி வந்து சேரும்.

**கன்னி:** சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். இயன்ற அளவில் பிறருக்கு உதவுவீர்கள்.

**துலாம்:** உங்களின் பேச்சு, சிலருக்கு சிரமம் தரலாம். தொழில் சார்ந்த இடையூறுகளை முறியடித்து, இலாபம் காண்பீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**விருச்சிகம்:** மற்றவர்களிடம் சொந்த விடயம் பேச வேண்டாம். தொழிலில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

**தனுசு:** உறவினர் பாராட்டும் வகையில் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். விரும்பிய பொருள் விடாமுயற்சியால் கைக்கு வந்து சேரும். பெண்களால் நன்மை உண்டாகும்.

**மகரம்:** பணிகளைத் திட்டமிட்டு முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்திகரமாகும். பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். புத்திரர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** நிதானத்துடன் செயற்படுவது நல்லது. தொழிலில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பர். பணியாளர்கள் பாதுகாப்பு விதியைக் கவனத்துடன் பின்பற்ற வேண்டும்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில், மிதமான வருமானம் கிடைக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் ஏற்படும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

## நான் மட்டுமே சிரிச்சா எப்படி?

ஒருவன் உன் மீது கல்லைக்கொண்டு எறிந்தால், நீ அவன் மீது பூவை கொண்டு எறி. மறுபடியும் கல்லைக்கொண்டு எறிந்தால் பூத்தொட்டியோடு எறி... கொய்யால...அவன் மண்டை உடையட்டும்

–சுவாமி கல்லெறி சித்தர்

யாராவது உன்னை லூசுன்னு சொன்னா...கூல் லா இருங்க, "குரங்கு" அப்படின்னு சொன்ன குமுறாம அமைதியா இருங்க, கழுதை அப்படின்னு சொன்னா. கதறாம கமுக்கமா இருங்க,...இருங்க ஆனால் நீங்க ரொம்ப அழகு அப்படின்னு எவராவது சொன்னால்..தூக்கிப் போட்டு மிதிங்க.. ராஸ்கல்ஸ்...தமாசு எல்லாம் ஒரு லிமிட்டோட தான் இருக்கணும்...

–சுவாமி தெனாலியானந்தா

நீ சிரிக்கும் ஒவ்வொரு வினாடியும்
நான் உன் பின்னால் இருப்பேன்... ஏன் தெரியுமா?
அந்தக் கொடுமையை எவன் முன்னால நின்னு பாக்கிறது ...

–கவிக்குயில்: கரடிச் சித்தர்

படித்ததில் பிடித்தது

புன்னகை என்பது எதிரியைக் கூட நண்பனாக்கும்...
எனவே....சிரிங்க...நல்லா சிரிங்க
ஆனால்..பல்லை துலக்கிட்டு சிரிங்க

– சுவாமி:பல்லானந்தா



**சிரிக்கலாம் வாங்க**

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | 2 | |
| | | 3 | 4 | | | | 6 | |
| | 4 | 6 | | | 9 | | | |
| | 6 | 5 | 8 | 1 | | 4 | | |
| | 1 | 7 | | | | 8 | 5 | |
| | | 4 | | 9 | 7 | 2 | 1 | |
| | | | 7 | | | 5 | 8 | |
| | 5 | | | | 8 | 6 | | |
| | 7 | | 6 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 4 | 8 | 9 | 6 | 1 | 2 | 5 |
| 5 | 8 | 9 | 7 | 2 | 1 | 6 | 3 | 4 |
| 1 | 6 | 2 | 5 | 4 | 3 | 9 | 7 | 8 |
| 9 | 2 | 1 | 4 | 3 | 5 | 8 | 6 | 7 |
| 3 | 7 | 6 | 9 | 1 | 8 | 5 | 4 | 2 |
| 8 | 4 | 5 | 2 | 6 | 7 | 3 | 9 | 1 |
| 2 | 9 | 8 | 3 | 5 | 4 | 7 | 1 | 6 |
| 6 | 5 | 3 | 1 | 7 | 2 | 4 | 8 | 9 |
| 4 | 1 | 7 | 6 | 8 | 9 | 2 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரேகோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட் டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலகளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு





## பிரின்ரட் சோட்ஸ்

ஆண்களுக்கான புதிய வரவில் பிரின்ரட் சோட்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வர்ண நிறங்களில் கண்கவர் பிரின்ரட் வேலைப்பாடுகளுடன் இவை கிடைக்கின்றன. இதமான துணிகளாலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது 900 ரூபா முதல் 1200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | 180 | 140 | 120 | 140 | 120 | 100 |
| கத்தரி | 300 | 180 | 200 | 220 | 200–220 | 200 | 140 |
| கரட் | 250 | 240 | 200 | 220 | 180–300 | 400 | – |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 40–50 | 40 | 30 |
| பயிற்றை | 300 | 240 | 250 | 240 | 260 | 320 | 200 |
| பாகல் | 300 | 340 | 400 | 250 | 300 | 400 | 300–350 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 90 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 140 | 180 | 140–150 | 140 | 130 |
| பூசணி | 50 | 60 | 50 | 60 | 40 | 100 | 40 |
| தக்காளி | 150 | 150 | 150 | 160 | 130–150 | 200 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 40–50 |
| கீரை | 40 | – | 40 | 40 | 30– 40 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 50 | 30– 40 | 60 | 15 |
| பச்சை மிளகாய் | 700 | 700 | 800 | 750 | 600–700 | 1000 | 1100 |
| புடோல் | 140 | 120 | 140 | 120 | 120 | 160 | 120–100 |
| கோவா | 140 | 150 | 140 | 160 | 160 | 200 | 130 |
| வெண்டி | 200 | 130 | 200 | 140 | 140 | 120 | 140 |
| போஞ்சி | 300 | 280 | 300 | 280 | 280 | 300 | 250 |
| லீக்ஸ் | 200 | 160 | 200 | 180 | 160 | 200 | – |
| தேங்காய் | 50 | 35 | 40 | 50–60 | 40–50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 70 | 70 | 80 | 80–100 |
| தேசிக்காய் | 150 | 240 | 150 | 160 | 180 | 60 | 60–70 |
| வல்லாரை | 30 | 20 | 30 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 500 | 320 | 500 | 320 | 400 | – | 350 |
| இராசவள்ளி | 250 | 160 | 250 | 180 | 160 | – | 130 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 400 | 350 | 250 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 650 | - |
| பாரை | 450 | 500 | 500 | 450 | 500 | 400 |
| சுறா | 500 | 500 | 150 | 600 | - | - |
| சீலா | 250 | 350 | 300 | 400 | 500 | - |
| விளை | 650 | 530 | 400 | 450 | 500 | 400 |
| முரல் | 250 | 350 | 300 | 300 | 400 | - |
| கும்பிளா | 300 | 330 | 300 | 400 | 350 | 200 |
| கிழாக்கன் | 400 | 300 | 300 | 400 | - | - |
| ஓரா | 200 | 350 | - | 350 | - | 350 |
| திரளி | 200 | 200 | 150 | 250 | 100 | - |
| நகரை | 150 | 200 | 200 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 150 | 150 | 100 | 100 | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 250 | 300 |
| திருக்கை | 150 | 300 | 300 | 250 | 200 | - |
| பாலை | 250 | 200 | - | 400 | 300 | - |
| வாளை | 100 | 150 | 200 | 350 | 200 | 200 |
| கொய் | 100 | 150 | 80 | 120 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 400 | 250 | 100 | 300 |

## சமையலுக்கு ஏற்ற பாத்திரங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

**வெண்கலப் பாத்திரம்**

வெண்கலப் பாத்திரத்தில் சமைத்து உண்டால், உடல் சோர்வு நீங்கி, நாள் முழுவதும் புத்துணர்ச்சியாக இருப்பதை உணரலாம். இதில் சமைத்த பொருள்கள் சீக்கிரத்தில் கெட்டுப்போகாது. ஆனால் வெண்கலப் பாத்திரத்தைச் சரியாகக் கழுவி, வெயிலில் காய வைத்துத்தான் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில், நாம் அடுத்த முறை சமைக்கும்போது களிம்புப் படலம் உண்டாகி உணவின் தன்மையே நஞ்சாக மாறிவிடும்.

**செம்புப் பாத்திரம்**

செம்புப் பாத்திரத்தில் சமைத்த உணவுக்குப் பித்த நோய், கண் நோய், சூதக நோய், சுவாசக் கோளாறுகள் போன்ற அனைத்தையும் குணமாக்கும் ஆற்றல் உண்டு. செம்புப் பாத்திரத்தில் தண்ணீரை வைத்திருந்தால் அதில் உள்ள நுண்ணுயிரிகள் எல்லாம் நீங்கிவிடும்.

**ஈயப் பாத்திரம்**

ஈயம், எமது உடலுக்கு உகந்ததல்ல. ஈயப் பாத்திரத்தில் சமைக்கப்பட்ட உணவை உட்கொண்டால் வயிறு தொடர்பான நோய்கள் வர வாய்ப்பு உண்டு. சளி, இருமல் இருப்பவர்கள் ஈயப் பாத்திரத்தில் சமைத்ததைத் தொடர்ந்து சாப்பிட்டால், வயிற்று உப்புசம் ஏற்படலாம்.

**பீங்கான் பாத்திரம்**

பீங்கானும் காலங்காலமாகப் பயன்பாட்டில் இருப்பது தான். பீங்கான் சமைப்பதற்கு ஏற்றது என்றாலும், பீங்கான் பாத்திரம் உயர்தரத்தில் ஆனதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். காரணம், மலிவு விலைப் பீங்கான்கள், அவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் உயர்ந்தபட்சக் கொதிநிலையில் உருவாக்கப்படுவது இல்லை. இத்தகைய மலிவு விலைப் பீங்கான்களை, அலங்காரப் பொருள்களாகப் பயன்படுத்தலாம். ஆனால் அதில் சமைத்தால் உணவில் நச்சுத்தன்மை ஏற்படும் அபாயம் இருக்கிறது.

**அலுமினியப் பாத்திரம்**

ஒவ்வொரு முறையும் அலுமினியப் பாத்திரத்தைக் கழுவும்போது, அதில் கறுப்பாக ஒரு கலவை படியும். அலுமினியம்தான் அது. இந்தக் கலவை உணவில் கலந்து, உடலிலும் சேர்ந்து மூளையில் உள்ள நியூரான்களை அழிக்கும் ஆபத்து ஏற்படலாம். மேலும், தொடர்ந்து பயன்படுத்தும்போது ஆஸ்துமா, காசநோய் போன்ற சுவாசக் கோளாறுகளும், அல்சர் பாதிப்பும் ஏற்படலாம்.

## நாளை

மார்கழி -11
ஞாயிற்றுக்கிழமை 27.12.2015
திதி: துதியை பி.ப.04.29
நட்சத்திரம்: புனர்பூசம் பி.ப.01.13
ராகுகாலம்: 04.57-06.27 வரை
சுபநேரம்: 09.27- 10.57 வரை

## இஞ்சிக் குழம்பு

**தேவையானவை:**

துவரம் பருப்பு -2 கரண்டி
கடலைப் பருப்பு -2 கரண்டி
சாம்பார்ப் பொடி -2 கரண்டி
பெரிய வெங்காயம் - 3
புளி - சிறிதளவு
பூண்டு - 20 பல்
இஞ்சி - 25 கிராம்
வறுத்துப் பொடித்த வெந்தயம் - 1 கரண்டி
கடுகு - 1 கரண்டி
மஞ்சள் பொடி - சிறிதளவு
பெருங்காயம் - சிறிதளவு
கறிவேப்பிலை சிறிதளவு
நல்லெண்ணெய் - 4 கரண்டி
உப்பு - தேவையான அளவு
புளி - சிறிதளவு




**செய்முறை:**

முதலில் இஞ்சியின் தோலை நீக்கவும் . பூண்டு உரிக்கவும், வெங்காயம் நறுக்கவும்.
மூன்றையும் மையாக அரைக்கவும்.
சட்டியில் நல்லெண்ணெய் விட்டு, கடுகு, கடலை பருப்பு, துவரம் பருப்பு, கறிவேப்பிலை தாளிக்கவும்.
அரைத்த விழுதை அதற்குள் போட்டு வதக்கவும்.
நன்கு எண்ணெ பொரியும் வரை வதக்கவும். மஞ்சள் பொடி சேர்க்கவும்.
1 ரம்ளர் தண்ணீர் விடவும்.
புளி கரைத்த தண்ணீர், சாம்பார் பொடி, பெருங்காயப் பொடி, வறுத்த வெந்தயப் பொடி எல்லாம் சேர்க்கவும் .
நன்கு கொதித்து கெட்டியாகி எண்ணெய் பிரிந்து வரும்போது இறக்கவும். நல்ல மணமுள்ள இஞ்சிக் குழம்பு தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழிப்பேரலை

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலையால் ஏற்பட்ட பாதிப்பில் 40ஆயிரத்திற்கு மேற்பட்ட உறவுகளை இழந்ததுடன், பல சொத்தழிவுகளையும் சந்தித்துள்ளோம். கடந்த ஜந்தாம் மாதம் 31ஆம் திகதி அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 26ஆம் திகதி அனர்த்தத்தின் போது உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கோருவதற்கான தேசிய பாதுகாப்புதினமாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதனுடாக எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், ஏதிர்காலப் பாதிப்புக்களை தவிர்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை வலுப்படுத்தி, அனைவரும் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு ஏற்றதாக இந்தத் தேசிய பாதுகாப்பு தினம் அமைந்துள்ளது.

எனவே அனைவரும் இன்று இரண்டு நிமிட மௌன அஞ்சலியை மேற்கொண்டு அனர்த்தங்களின் போது உயிரிழந்தவர்களுக்கான சமய நிகழ்வுகளினூடாக நினைவுகூர்ந்து அவர்களின் ஆத்மசாந்திக்காக ஒன்றுபடுங்கள் என அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் இன்று நாட்டின் பல பகுதிகளில் நடைபெறவுள்ளன. வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணத்தின் பல இடங்களில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கான நினைவு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் மதவழிபாட்டுத் தலங்களில் விசேட அனுஷ்டானங்களும் இடம்பெறவுள்ளன. உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபிகளில் மலரஞ்சலி நிகழ்வுகளும், அன்னதான நிகழ்வுகளும் பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வடக்கில், வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகியவற்றில் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-ரி5)

## காணாமற்

பதா என்பது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கிறது.

அந்தவகையில், இந்த ஆணைக் குழுவைகலைப்பதற்குரிய முடிவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுப்பார் என அறியமுடிகிறது.

பரணகம ஆணைக்குழு கலைக்கப்பட்ட பின்னர் அதற்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் காணாமற்போனோர் தொடர்பில் அமைக்கப்படவுள்ள அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் அறியமுடிகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு வகுத்துள்ள நான்கு திட்டங்களில் காணாமல் போனோர்தொடர்பில்விசாரணைகளை முன்னெடுப்பதற்காக தனி அலுவலகமொன்று அமைக்கப்படும் என்ற உறுதிமொழியும் இருக்கிறது.

போர்க் காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பில் விசா ரணைகளை முன்னெடுப்பதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வெல்பரணகமதலைமையில் ஆணைக்குழுவை தமது ஆட்சியின் போது மஹிந்த ராஜபக்ச அமைத்திருந்தார்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், உள்ளக போர்க் குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் அதன் விடயப் பரப்பை மகிந்த விஸ்தரித்ததுடன், சர்வதேச சட்டத்திட்டம் தொடர்பில் பரணகமகுழுவுக்குஆலோசனை வழங்குவதற்காக டெஸ்மன் டி சில்வா தலைமையில் அறுவரடங்கிய நிபுணர் குழுவொன்றையும் அமைத்திருந்தார்.

ஆட்சிமாற்றத்தின் பின்னரும் பரணகமகுழுவுக்குப்பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கினார்.

அந்தவகையில் விசாரணைகளை முன்னெடுத்த பரணகம ஆணைக்குழு போர்க்குற்றங்கள் தொடர்பிலான தமது இறுதி விசாரணை அறிக்கையை கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் கையளித்தது.

எனினும், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. அண்மையில்கூட யாழ்ப்பாணத்தில் அமர்வு நடத்தப்பட்டது. இந் நிலையிலேயே எதிர்வரும் பெப்ரவரி 12ஆம் திகதியுடன் பரணகம குழுவின் பதவிக்காலம் முடிவடைகிறது.

ஆறு மாதங்களுக்கு ஒருதடவை பரணகம குழுவுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால், இம்முறை அது வழங்கப்படாது என்று கூறப்படுகிறது.

எனினும், தமது ஆணைக் குழுவின் பணிகளை முன்னெடுப்பதற்கு மேலும் கால அவகாசம் வழங்குமாறு தாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளார் என்று மக்ஸ்வெல் பரணகம நேற்று தெரிவித்தார். (வ-சி)

## உள்ளூராட்சி

ஆகஸ்ட் மாதம் வரைதள்ளிப்போகுமென தேர்தல்கள் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணய பங்கீட்டில் காணப் படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக்காரணமென தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

எல்லை நிர்ணய சபையின் தலைவர் அசோக பீரிஸும், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் மகிந்த தேசப்பிரியவும் கடந்த சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான கலந்துரையாடலின்போது, தங்களுக்குமூன்று மாத கால அவகாசம் தேவை என வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதேவேளை, கடந்த எல்லை நிர்ணய கலந்துரையாடலில் கலந்துகொண்ட சிறு கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் தங்களுக்குத் தொகுதி வாரி தேர்தல் முறைமையினால் அநீதியிழைக்கப்படுவ தாக முறையிட்டுள்ளது. அத்துடன், விகிதாசார முறைமையில் தேர்தலை நடத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அத்துடன், உள்ளூராட்சி சபை தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதனால் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆட்சிக் காலம் முடியவிருந்த கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட 27 நகர சபைகள் 6 மாத காலத்தினால் நீடிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## சம்பந்தன்

தலைவர்களில் ஒருவராக வடக்கு முதலமைச்சர் இணைந்துள்ளதுடன் அது குறித்த முரண்பாடுகளும் விமர்சனங்களும் எழுந்துள்ள நிலையில் இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது. சிரேஷ்ட சட்டத்தரணி கனக ஈஸ்வரனின் வீட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நீண்டகாலத்துக்கு இணைந்து செயற்படுவது தொடர்பாகவும் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரங்களில்ஒருமித்த கருத்தின் அடிப்படையில் பணியாற்றுவது குறித்தும் சந்திப்பில் பேசப்பட்டது. தமிழ் மக்களின் நன்மைக்காக எடுக்க வேண்டிய முடிவுகள் எடுக்கப்படும். இது குறித்த சந்திப்புக்கள் தொடரும்.-என்றார். (வ-4.10)

---

### மரண அறிவித்தல்

### திருமதி ஞானேஸ்வரி சபாநாயகம்



யாழ்ப்பாணம் நாவலர் வீதியைப் பிறப் பிடமாகவும் கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி சபாநாயகம் நேற்று (25.12.2015)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாநாயகத்தின் அன்பு மனைவியும், ஸ்ரீதரன், ரமணீதரன், கிரிதரன், ஹரிதரன், சசிதரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2015) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 077 5021572
077 8392456

தகவல்:
குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி பொன்னையா



சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா பூந்தோட்டத்தை வசிப்பிட மாகவும் கொழும்பு சொய்சாபுரத்தினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி பொன்னையா கடந்த (24.12.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்தி -நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னையாவின் பாசமிகு மனைவியும், தங்கநாகேஸ்வரி (வவுனியா), தங்கநாகேஸ்வரன், நவேந்திரகாந்தன், நகுலராசா, நவனேஸ்வரி (கொழும்பு), யமுனா (இந்தியா), நவரட்ணம் , நவனீதா, சிவராசா (யாழ்ப்பாணம்), தெய்வநாதன், குகநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற மார்க்கண்டு (கிராம உத்தியோகத்தர், வவு னியா), தயாமிளா, பகவதி, ராசாத்தி, லோஜினி, அருளானந்தம் (கொழும்பு), கிருபாகரன் (இந்தியா), குணசேகரம், தர்சினி (யாழ்ப்பாணம்), அனோஜினி, ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு மாமியும், கேசவன் (ஆசிரியர், பாரதி வித்தியாலயம், முல்லைத்தீவு), மொசாந்தி (யாழ்ப்பாண பல்கலைக் கழகம்), சுரேந்தர் (கிராம உத்தியோகத்தர் - மாளிகை, வவுனியா), மயூரன், கஜன், கிருபாகரன், காண்டீபன், யான்சி, பிரவீன், நிவேதா, ஜய்சன், அனுசியா, அபினையா, அருமிதா, கண்ணன் (கொழும்பு), கரி, விதுசி, அவனேஸ், மகிசா, நேமிசா, வித்திகா ஆகியோரின் பாட்டியும், தட்சிகன் (வவுனியா), கிசாளினி (யாழ்ப்பாணம்), அபேனிசா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் பூந்தோட்டம் இல்லத்தில் நாளை (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 965 7015 - திருமதி மார்க்கண்டு (கிராம அலுவலர்)
077 208 9851 - நாதன்
077 169 2522 - செல்வி
[illegible]7410 - யமுனா

தகவல் :
குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்



மலர்வு 08 05 1947
உதிர்வு 24 12 2015

### திரு. சின்னையா யோகராஜா

[ஓய்வுபெற்ற படவரைஞர் - நீர்ப்பாசனத்திணைக்களம், முகாமையாளர் - SP MATPOL (PVT) LTD, சிலாபம்]

சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.சின்னையா யோகராஜா அவர்கள் 24.12.2015 திகதியன்று அதிகாலை 4 மணியளவில் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையா பவளம் (பிரசித்த நொத்தாரிஸ்) தம்பதிகளின் 3ஆவது புதல்வனும் அமரர் திரு.தெய்வேந்திரன் சிவபாக்கியம் (கும்பளை) தம்பதிகளின் மருமகனும் காஞ்சனாவின் அன்புக்கணவரும் கவிதா, குகபிரசாத் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் இரவிசங்கர், அஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் [illegible] அன்புப்பேரனும் [illegible], இராமநாதன், [illegible], [illegible], சண்முகநாதன், அமரர் சோதிநாதன், பாலநாதன், கருணைநாதன், குகநாதன், சந்திரலேகா, பாக்கியலட்சுமி, சுமங்களராணி ஆகியோரின் சகோதரரும் தர்மகுலேந்திரன், மகேந்திரன், புலேந்திரன், ரவீந்திரன், குலேந்திரன், புவீந்திரன், சுசிலா, மேனகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 26.12.2015 இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து இரவு 10 மணிவரையும் 27.12.2015 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பொரளை [illegible] மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பிற்பகல் 3 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தொடர்பு இலக்கம்:-
[illegible] - 0772075250
பாலநாதன் - 0776056266
[illegible] - 0773011970
Mail Address - ravi_care@yahoo.com
தகவல்: மனைவி, பிள்ளைகள்.
இலக்கம்: 82 6/3, [illegible], வெள்ளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.26
சமூக விஞ்ஞானப்படிப்பு வட்டக் கலந்துரையாடல் நாளை ஞயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் 21 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உருவாகி வரும் இடதுசாரி அலை எனும் தலைப்பிலான உரைகளை ச.திலீபன், அரசியல் ஆய்வாளர் த.கலையரசன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ந-ஐ-ரி5)


## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் மூத்த உறுப்பினரும், முன்னாள் தலைவருமான
திரு அ.பஞ்சலிங்கத்தின்
அன்பு மனைவி
**திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க உப தலைவரும், கொக்குவில் இந்துக்கல்லூரி ஓய்வுநிலை அதிபருமாகிய
**அ.பஞ்சலிங்கம்** அவர்களின்
அன்பு மனைவி
**திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொக்குவில்.**
(சி.28140) (13.15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
15 . 09 . 1942



விண்ணில்
26 . 11 . 2015

### அமரர் சண்முகம் பண்டிதர்

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்)

கடந்த 26.11.2015 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சண்முகம் பண்டிதர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 24.12.2015 வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (26.12.2015) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமும், கண்ணீர் அஞ்சலி, மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த வர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
127, கனகரட்ணம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
071 860 0033, 077 370 8105

## ஈரவிழிகளுடன் 11 ஆண்டுகள்...



ஆழியின் பிடியில் - 26.11.2004

அன்போடு சொந்தங்கள் என்றழைக்க இதயம் தவித்திருக்க - உதவியின்றி
நாம் தனித்திருக்க - மனதிற்கு ஆறுதல் சொல்ல நீங்கள் இல்லையே
அலைபோல் உங்கள் நினைவுகள் அலைமோத ஆண்டுகள் பதினொன்று சென்றதைய்யா
எமைவிட்டு நீங்கிச் சென்று அணையாத் தீபமாய்

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் முருகேசு தாமோதரம்பிள்ளை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி- அபரபக்க பிரதமை(26.12.2015)

ஆண்டுகள் பத்து பறந்தோடி விட்டாலும்
தங்கள் நினைவுகள் மட்டும்
எம்மைவிட்டுப் போகவில்லை
எம் விழிகளில் ஈரம்
இன்னும் காயவில்லை
தூய உள்ளமும், அன்பும்
பாசமும் நிறைந்த நீங்கள்
எம்மை விட்டுப் போனாலும் - தாங்கள்
உபதேசித்த புத்திமதிகளும்,
வழிகாட்டலுமே
இன்றும் எம்மை வழிநடத்திச் செல்கின்றன
என்றென்றும் உங்கள் நினைவுகளைச்
சுமந்து
நிற்கும் நாம் உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

மலர்வு 13.01.1932
உதிர்வு: 16.12.2005

கோகுலம்,
சங்கத்தானை, சாவகச்சேரி.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்

(சா19605)(8,15,30)

## நீங்கா நினைவலைகள்

### 5ஆம் ஆண்டு



**அமரர் மார்க்கண்டு சிவலிங்கம்**
(முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம். - மருதனார்மடம்)

அன்னை மடியில் 21.06.1956
கடலின் அழிப்பில் 26.12.2010

ஆண்டுகள் ஐந்தாகியும்
ஆறவில்லை எம் துயரம்
கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணோடு சென்றுவிட்டீர்!
ஆற்றொணாத் துயரமது
[illegible] ஓடுகிறது

### 4ஆம் ஆண்டு



**அமரர் பரிமளம் மார்க்கண்டு**
தோற்றம் 20.03.1937
மறைவு 20.08.2011

மகனே! விவசாயக் குடும்பத்தில்
கல்விக்கு வித்திட்டாய் இது முளைத்து
வானளவுக்கு நிழல் தருகிறது- இதிலிருந்து
உன்முகத்தைக் காண்கின்றேன்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா



பிறப்பு: 24.11.1923 இறப்பு: 24.12.2015

பூதர்மடம் நீர்வேலிதெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா நேற்றுமுன் தினம் (24.12.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியா வில் நடைபெறும். இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பரகள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி குஞ்சுமணி செல்லமுத்து



குப்பிளான் தெற்கைச் சேர்ந்த திருமதி குஞ்சுமணி செல்லமுத்து நேற்று (25.12.2015) வெள்ளிக்கிழமை காலமா னார்.

அன்னார் செல்லமுத்துவின் அன்பு மனைவியும் சுபேஸ், சுரேஷ், ஜெயா, ராஜன் ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் நாளை (27.12. 2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் தெற்கு காடகாம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குப்பிளான் தெற்கு. (67084) குடும்பத்தினர்.

## திருமதி கமலாம்பிகை பாலசுப்பிரமணியம்



கச்சேரி நல்லூர் வீதி, மூத்தவிநாய கர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஏழலைகிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை பாலசுப் பிரமணியம் நேற்று முன்தினம் (24.12. 2015) வியாழக் கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -கௌரிஅம்மா தம் பதியரின் மூத்த புதல்வியும், காலஞ் சென்ற வர்களான நல்லசேகரம்பிள்ளை - தங்கம் தம்பதியரின் மருமகளும், பால சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், ஞானாம்பிகை, விக் னேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், கஜமுகன், காலஞ் சென்ற கார்த்திகேயன் (கணக்காளர்) மற்றும் சரஸ்வதி, நாகம்மா ஆகியோரின் மைத்துனியும், வேல்வேந்தன் (பொறியியலாளர், U.K), வாசுகி (U.K) ஆகியோரின் பெரிய தாயாரும், ஞானகௌரி (U.K), திருக்குமார் (U.K) ஆகியோரின் அன்பு மாமியும், சிவகுகன் (U.K), வாகீசன் (U.K), கஜானன் (U.K), பவித்திரா (U.K) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணியளவில் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பரகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. 077 2423490

தகவல்: க.ந.பாலசுப்பிரமணியம் (கணவர்).
கஜமுகன்-சரஸ்வதி

## Dr.பொன்னுச்சாமி கனகலிங்கம்



இல.56, அரச வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச் சாமி கனகலிங்கம் 21.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராதேவியின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும், ராஜ்மோகன் (Australiya), ஜெகமோகன் (Canada), Dr.சந்திர மோகன், ஜெயந்தி (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேகலா, வசுந்தரா, Dr.சஞ்ஜீவினி, லோகநாதன் ஆகியோ ரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12. 2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

56, அரச வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (67072)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.
021 222 7427

## தேவை

அச்சகவேலையில் அனுபவம் உள்ள வர்கள் பழக விரும்புபவர்கள் தேவை.

யாழ் நகருக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

077 21 74741

# மரண அறிவித்தல்கள்



## திருமதி தவமணி செல்லத்துரை

(முன்னாள் உப அதிபர் - தாவடி தமிழ் கலவன் பாடசாலை)

தோற்றம் 1938 . 02. 02 மறைவு 2015.12.25

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி செல்லத் துரை நேற்று (25.12.2015) வெள்ளிக்கிழமை காலமா னார்.

அன்னார் செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-ராசமணி தம்பதி யரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி சீவரெத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் மோகன்ராஜ் (பிரான்ஸ்), உஷாராணி, சோதிராஜ் (பிரான்ஸ்), யசோராணி (கனடா), நிமலராணி (கனடா) ஆகியோரின் பாச மிகு தாயாரும், சிவந்தி (பிரான்ஸ்) காலஞ்சென்ற கிருபா கரன் மற்றும் ஜெயகலா (பிரான்ஸ்), சிவராமேஸ்வரன் (கனடா), உதயகுமார் (கனடா) ஆகியோரின் மாமியா ரும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சிவபாக்கி யம், பஞ்சலிங்கம், சொர்ணலிங்கம் மற்றும் செல்வமணி (வவுனியா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ் சென்ற செல்வரட்ணம், செல்வநாயகி (இந்தியா), செல்வ நாயகம் (சைனம், செல்வம்- பற்றிகடை), செல்வராணி (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (காந்தி செல்வம் - பற்றிகடை) ஆகியோரின் மைத்துனியும் நிவேத்தா, தர்சன், அபிராமி (யூலியா), தரன் (லூக்கா), ரசிகேசிகன், யசின், அக்சயன், அரசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி தெற்கு, 076 800 2819
கொக்குவில். 077 575 3376

தகவல் : குடும்பத்தினர். (67075)

## திருமதி இரத்தினம் சிவக்கொழுந்து



பிறப்பு: 25.05.1941 இறப்பு: 24.12.2015

யாழ். மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சிவக் கொழுந்து நேற்று முன்தினம் (24.12. 2015) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி-சின்னாச்சி தம்பதி யரின் அன்பு மகளும், நாகப்பர்-தெய்வானைப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி (மஞ்சு), கமலேஸ்வரி (சஞ்சு- ஆசிரியை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ), வேணு (கனடா), காண்டீபன் (அன்னை மருந்தகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தப்பு, கன கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகசபாபதி (ஆசிரி யர்,யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), ரஞ்ஜினி (கன டா), தவறஜனி, ஆகியோரின் அன்பு மாமியும், வினோஜா, யதுசன், ஆருஜன், பைரவி, ராகவி, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆனைவிழுந் தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொ ள்ளவும்.

ஆசையப்பர் வீதி,
புலோலி தெற்கு, பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
0776466326

## இலங்கையின்

கூறவேண்டும்.

எமது சட்டத்தரணிகள் வழக்குகளைப் பிற்போடுகின்றனர். உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய வழக்குகளை வருடக் கணக்கில் தாமதப் படுத்துகின்றனர். இதனால் சிறைக்கைதிகள் சிறைக்கூடங்களில் நிறைந்திருக்கின்றனர்.

ஒன்று வழக்கு விசாரணைகளை மேற்கொண்டு அவற்றை முடிக்க வேண்டும். இல்லாவிட்டால், தண்டனை வழங்கவேண்டும். இவை எதையும் செய்யாமல் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. இதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்–என்றார்.

இதேவேளை, ஹங்வெல்லையில் இடம் பெற்ற நத்தார் தின வைபவத்தில் கருத்து வெளியிட்டுள்ள கர்தினால் மல்கம் ரஞ்சித், இன்று நாம் வாழும் நாட்டில் 30 ஆண்டுகளாக நீண்டகாலம் இடம்பெற்ற போர் மற்றும் இரத்த வெள்ளத்தின் பின்னர் நாம் வாழும் இந்தக் காலத்தில், எம்மால் வரையறுக்கப்பட்டுள்ள அந்த குறுகிய எண்ணங்களைக் கைவிட்டு எம்முடன் வாழும் ஏனைய அனைத்து சகோதர, சகோதரிகளுக்கும் நேசக்கரம் நீட்டுவோம்.

அதேபோல் இந்த நாட்டில் பெரும்பான்மையினம், சிறுபான்மையினம் என்று பிரிவுபடுத்தாமல், நாம் அனைவரும் ஒரு நாட்டுக்குள் வாழும் ஒரே சகோதரர்கள். எந்தச் சமயத்தைப் பின்பற்றினாலும், ஒருவருக்கொருவர் அன்புடன் வாழ்வோம் என்ற உணர்வை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (வ–சி)

## ஆளுநருக்கான

மீதமுள்ள நிதியே 35 மில்லியன் ரூபா மீளளிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிதி கடந்த நவம்பர் மாதமே வடக்கு மாகாண சபையிடம் மீள வழங்கப்பட்டு விட்டது என ஆளுநர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன. வடமாகாண பிரதம செயலர் ஊடாக அந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2016 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் செயலக நிதி ஒதுக்கீடாக 57 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ–4,10)

## ஜனவரி

வுள்ளதாக அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கூட்டு அரசை அமைத்து நான்கு மாதங்களாகியுள்ள நிலையில், இந்த திடீர் அமைச்சரவை மாற்றம் இடம் பெறவுள்ளது.

அமைச்சரவை மாற்றம் குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் கவனம் செலுத்தியுள்ளனர். இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது, மிகவும் செல்வாக்குள்ள அமைச்சர் ஒருவர் பதவி இழப்பார் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியில் இடம்பெற்றிருந்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாம் மகிந்த அணியில் இருந்து விலகப் போவது குறித்து இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்சவிடம் ஏற்கனவே தெரிவித்து விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாற்றங்கள் அடுத்த மாத ஆரம்பத்தில் இடம்பெறும் என அரசதரப்புச் செய்திகள் மேலும் குறிப்பிட்டுள்ளன என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பரந்தன்

பரிதாபகரமாக சாவடைந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் முரசுமோட்டையைச் சேர்ந்த இரத்தினதாசன் சுதர்சன் (வயது-32) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

பரந்தன்- முல்லைத்தீவு வீதியில் முரசு மோட்டையில் உள்ள அவரது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை, வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் ஒன்றுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குறித்த கரைச்சிப் பிரதேச சபை பணியாளர் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவரது உயிர் பிரிந்துள்ளதை வைத்தியர்கள் உறுதி செய்தனர்.

உயிரிழந்தவரின் உடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, குறித்த விபத்து தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது இல்லத்தின் தலைவர்
திரு. அ. பஞ்சலிங்கம்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி
**பரமேஸ்வரி
பஞ்சலிங்கம்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்வ தோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஞானசம்பந்தர் இல்லம், உரும்பிராய்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை
உயிரியல் பாட ஆசிரியர்
திருமதி நிரூபா அருந் தவம்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்**

அவர்களின் மறைவையிட்டு துயரத்தில் இருக்கும் அவரது குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திய டைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/வேலணை மத்திய கல்லூரி
வேலணை

## தேவை

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இரண்டு பேர் கொண்ட வைத்திய குடும்பம் ஒன்றிற்கு தங்கி இருந்து பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு: 071 1035422

## அறை அல்லது அனெக்ஸ் தேவை

வயதான பெண்மணி ஒருவர் தங்கியிருக்கக் கூடிய அறை அல்லது அனெக்ஸ் தேவை. யாழ் நகரில் இருந்து 5 கிலோ மீற்றருக்குள் விரும்பத்தக்கது

தொடர்பு: 077 996 1712

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் கிட்ஸ் பார்க் இன் தலைவர்
திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின்
அன்பு மனைவி
திருமதி **பரமேஸ்வரி பஞ்சலிங்கம்**

அவர்கள் காலமான செய்தி யைக் கேட்டு ஆறாத்துயரில் ஆழ்ந் துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் கிட்ஸ் பார்க் சமூகம்

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம் 23.12.2015 புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்பாத்துரை - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர் - யாழ் இந்து, கொக்குவில் இந்து) அவர்களின் அன்பு மனைவியும் நிரஞ்சன் (கனடா) நிரூபா (ஆசிரியர் வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரஷாந்தி (கனடா), அருந்தவம் (ஆசிரிய ஆலோசகர் - வலிகாம கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நவநீத், பிரஜீத், மதுரா, ரூபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கமலாம்பிகை, சற்குண தேவி, சிவபாதசுந்தரம், சிவலோகநாதன் (லண்டன்), சிவானந்தன் (கனடா), சாந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரலிங்கம், சோதிலிங்கம், செல்வநாயகி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2015) ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

தகவல் : குடும்பத்தினர்.
அ.பஞ்சலிங்கம் (கணவர்)

(C/28145)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தலைவரும் எமது நிறுவனத்தின் தலைவருமாகிய திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின் அன்பு துணைவியார்
திருமதி **பரமேஸ்வரி பஞ்சலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் சமூகம்

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் இராசா

(ஓய்வுபெற்ற அதிபர் - இராசா வாத்தியார்)



மூளாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசா (ஓய்வு பெற்ற அதிபர் - இராசா வாத்தியார்) நேற்று (25.12.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் கமலாம்பிகை, இராதா (உதவிக் கல்விப் பணிப்பாளர் - தமிழ் - வலிகாம வலயம்), முருகதாஸ் (அப்பன் - வர்த்தகர்), ஸ்ரீதேவி (உதயன் பணிமனை - யாழ்ப்பாணம்),அரியதாசன் (லண்டன்), ரசனி, கலாரஞ்சினி (லண்டன்), கமலலோசினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாமதி (அரசினர் வைத்தியசாலை - இளவாலை) குலசிங்கம், செந்தில்வேல்ராசா, மோகனதாசன் (லண்டன்), புஸ்பராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் பிரவீன், கீர்த்திகன், பிரணஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.

தகவல் :
குடும்பத்தினர்.

(C/28142)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **செல்லையா கந்தசாமி**
(ஓய்வுநிலை அதிபர்)

மண்ணில்
1941 . 11 . 23



விண்ணில்
2015 . 11 . 27

கடந்த 27.11.2015 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா கந்தசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்தனையும் இன்று (26.12.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1 ஆம் கட்டை,
…லி மேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அணித் தெரிவு பக்கச்சார்பு அற்றதாம்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பக்கச்சார்பு அற்ற முறையில் செயற்படுவதாகவும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அணித் தெரிவின் மூலம் தாமும் அணியில் இடம்பெற முடியும் என்ற நம்பிக்கை இளம் வீரர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதாகவும் புகழ்ந்து தள்ளியுள்ளார் அந்த அணியின் இயக்குநரான ரவிசாஸ்திரி. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட யுவராஜ் மீண்டும் இடம் பெற்றார். இதன்மூலம் யுவராஜ், டோனி இருவரும் பகை பாராட்டுகின்றனர் என்று வெளியாகியிருந்த தகவல்கள் வதந்திகள் என்ற விதத்தில் முடிவுக்கு வந்தன. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ரெய்னா அணியில் இருந்து தூக்கப்பட்டார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் சிறப்பாகச் செயல்படாததாலேயே ரெய்னா அணியில் இருந்து நீக்கப்



பட்டதாக தெரிவுக்குழு அறிவித்துள்ளது. இதன் மூலம் ரெய்னா, டோனியின் அரவணைப்பில் அணியில் உள்ளார் என்ற செய்திகளும் பொய்யாகின. அது மட்டுமல்லாது விவசாயி ஒருவரின் மகனும் இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார். இதனையடுத்தே இந்திய அணியின் இயக்குநரான ரவிசாஸ்திரி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பக்கச்சார்பு அற்றமுறையில் செயற்படுவதாக கருத்துத் தெரிவித்துள்ளதாக அறிய வருகிறது. (ம)

## இலங்கை நியூசிலாந்து ஒருநாள் ஆட்டம் இன்று

இலங்கை -நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிவரும் இலங்கை அணி முடிவடைந்த இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் பறிகொடுத்தது. இந்த நிலையில் 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது. கிறைஸ்ட் சேர்ச் மைதானத்தில் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணியளவில் ஆட்டம் ஆரம்பமாகும். (ம)



## ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் தொடருக்கான நீர் விளையாட்டுக்களின் கட்டுமானத்தில் தாமதம்

அடுத்த வருடம் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான நீர் விளையாட்டுக்களின் கட்டுமானங்கள், குறிப்பாக நீச்சல் தடாகங்களின் கட்டுமானங்கள் இன்னமும் முழுமையடையாமையால் பிரேசில் ஒலிம்பிக் சம்மேளனத்தின் மீது சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அதிருப்தி தெரிவித்துள்ளதுடன் கட்டுமானங்களை துரிதப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடருக்கான கட்டுமானப் பணிகளை கடந்த வருடம் ஆரம்பித்திருந்தது பிரேசில் ஒலிம்பிக் சம்மேளனம். நீச்சல் தடாகங்கள் மற்றும் படகோட்டப் போட்டிகள் நடைபெறும் நீர்நிலைகள் ஆகியவற்றில் கூடுதல் கவனம் எடுக்கப்பட்டு அதிநவீனத்துவம் வாய்ந்த கமராக்கள் பொருத்தப்பட்டு பலகோணங்களில் இருந்தும் போட்டிகள் காட்சிப்படுத்தப்படும் எனவும், அனைவரும் வியக்கும்படி இந்த ஒழுங்கமைப்பு செய்யப்படும் என்றும் பிரேசில் ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவித்திருந்தது. அதற்கேற்ப தொழில்நுட்பங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டதாலோ என்னமோ, திட்டமிடப்பட்ட திகதியில் நீர் விளையாட்டுக்களின் கட்டுமானங்களை பிரேசில் ஒலிம்பிக் சம்மேளனத்தால் முடிக்க முடியவில்லை. 90 சதவீதமான கட்டுமானங்கள் முடிவடைந்துவிட்டன. ஏனையவற்றை ஜனவரியின் முதலிரு வாரங்களில் முடிக்க வேண்டும் என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் உத்தரவிட்டுள்ளது.

நீச்சல் தடாகங்களின் கட்டுமானங்கள் ஒருபுறம் இருக்க படகோட்டப் போட்டிகள் நடைபெறும் மரினா டி குளோரியா நீர்நிலையில் தொற்று நோய்களை ஏற்படுத்தக் கூடிய கிருமிகள் உள்ளன என்பது பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தப் பகுதியில் நீரின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக உலக படகோட்ட நிகழ்வுகளின் தலைவர் அலிஸ்டெர் பொக்ஸ் தெரிவிக்கையில் - ஒலிம்பிக்கின் தராதரத்துக்கும், அதன் மகிமைத்துவத்துக்கும் சிறிதும் பாதிப்பு ஏற்படாமல் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில் படகோட்டப் போட்டிகள் நடைபெறும் மரினா டி குளோரியா நீர்நிலை திருப்திதரும் வகையில் இல்லை. இங்கு தொற்று நோய்களை ஏற்படுத்தக் கூடிய கிருமிகள் உள்ளன. அவை சுகாதாரத்துக்கு ஏற்ப துரித கதியில் சீர்செய்யப்பட வேண்டும்- என்றார். (ம)

## சிமித்துக்கு பொண்டிங் வாழ்த்து

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் நடப்பு வருடத்துக்கான சிறந்த வீரர் மற்றும் சிறந்த டெஸ்ட் வீரர் விருதுகளை வென்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் சிமித்துக்கு முன்னாள் தலைவர் பொண்டிங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சிமித் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பொண்டிங் - நடப்பு வருடத்தின் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமைக்கு சிமித்துக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறேன். அவர் ஓர் அற்புதமான வீரர். அடுத்த சில வருடங்களுக்கு ஆஸ்திரேலிய அணியை சிறப்பாக வழிநடத்துவார் என்று நம்புகிறேன். வளர்ந்து வரும் வீரருக்கான விருதை வென்ற கசில்வூட்டுக்கும் வாழ்த்துக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம).




## சாதனையை நோக்கி ஸ்ரெயின்; முதல் டெஸ்ட் இன்று ஆரம்பம்

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று தென்னாபிரிக்காவின் டேர்பன் மைதானத்தில் ஆரம்பமாகிறது.



டெஸ்ட்டில் 402 இலக்குகளை வீழ்த்தியுள்ள ஸ்ரெயின் இந்தத் தொடரின் 8 இன்னிங்ஸிலும் மொத்தமாக 20 இலக்குகளை வீழ்த்தினால், டெஸ்ட் ஆட்டங்களில் அதிக இலக்குகளை வீழ்த்திய தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையை நிலைநாட்டுவார்.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரான பொலக் கைப்பற்றிய 421 இலக்குகளே, தென்னாபிரிக்க வீரர் ஒருவர் டெஸ்ட் ஆட்டங்களில் எட்டிய உயரிய பெறுபேறாக உள்ளது. இதனால் இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் தொடரில் ஸ்ரெயின் மேலதிகமாக 20 இலக்குகளை வீழ்த்தினால் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையைப் பெறமுடியும். தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகத்துக்கும் ஒத்துழைக்கக் கூடியவை. இதனால் இந்தத் தொடரில் ஸ்ரெயின் இந்த மைல் கல்லை எட்டுவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. பொலக்கும் அவ்வாறே தெரிவித்துள்ளார். இங்கிலாந்து தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையே 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரும், 2 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரும் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## தீவுகளின் கிரிக்கெட் நிர்வாகத்தில் ஐ.சி.சி. வேண்டும் என்கிறார் கிளார்க்

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகத்தில் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (ஐ.சி.சி.) தலையிட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவராக கிளார்க்.



மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும் வீரர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பொலார்ட், சமி, பிராவோ, சந்தர்போல் போன்ற அனுபவ வீரர்களின் புறக்கணிப்பால் தீவுகளின் கிரிக்கெட் நிர்வாகத்தின் மீது பலரும் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவரான கிளார்க், தீவுகளின் கிரிக்கெட் நிர்வாகத்தில் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (ஐ.சி.சி.) தலையிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கிளார்க் - மேற்கிந்தியத் தீவுகளின் அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. உண்மையில் அந்த அணியைப் பார்க்கப் பரிதாபமாக உள்ளது. அனுபவ வீரர்கள் ஒருவர்கூட தீவுகளிடத்தில் இல்லை. இந்த அணியால் அப்படி என்ன சாதித்துவிட முடியும். பக்கச்சார்பற்ற அணித்தெரிவு இடம்பெற்று பொலார்ட், பிராவோ, சமி, சந்தர்போல், கெயில் என அத்தனை வீரர்களும் இடம்பெற்றிருந்தால் தீவுகளின் அணி மிரட்டும் வகையில் இருக்கும். எனவே மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகத்தில் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தலையிட்டு வீரர்களுக்கும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும் இடையிலான பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை அணிகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்டத் தொடர்

முல்லைத்தீவு, டிசெ. 26
முள்ளியவளை வித்தியா விளையாட்டுக் கழகத்தினர் தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தத் திட்டமிட்டுள்ள துடுப்பாட்டத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற் பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.
இறுதி யுத்தத்தில் சாவடைந்த தமது கழக வீரர்களின் ஞாபகார்த்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் வித்தியா வி.கழகம் வருடந் தோறும் பத்துப் பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரை நடத்தி வருகிறது. அடுத்த வருடத்துக்கான தொடர் ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் வித்தியா விளையாட் டுக்கழக நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை எதிர்வரும் மூன்றாம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-102)

# பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அரையிறுதியாட்டமும் இறுதியாட்டமும்

யாழ்;ப்பாணம், டிசெ. 26
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுத்துவரும் 5 வீரர்கள் பங்குபற்றும் கால் பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்களும், இறுதி ஆட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
மாலை 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் அணி மோதிக் கொள்ளும். தொடர்ந்து 3.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி அணி மோதிக் கொள்ளும். அரையிறுதி ஆட்டங்களில் தோல்வி அடையும் அணிகள் 4 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மோதவுள்ளன. அரையிறுதி ஆட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இறுதி ஆட்டத்தில் மோதவுள்ளன. (ம-23)

# செந்தமிழ் அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 26
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் செந்தமிழ் அணி வெற்றிபெற்றுள்ளது.
பருத்தித்துறை லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து செந்தமிழ் அணி மோதிக் கொண்டது. இதில் செந்தமிழ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)




# தேசியமட்ட கராத்தேத் தொடரில் சுண்டிக்குளி மாணவிக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 26
தேசியமட்ட கராத்தேத் தொடரில் 15வயதுப்பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி எஸ்.அபிரா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.
இலங்கை காரத்தேச் சம்மேளனம் நடத்திய நடப்பு வருடத்துக்கான தேசியமட்ட காரத்தே தொடர் கொழும்பு மகரகம இளைஞர் சேவைகள் மன்றத்தில் இடம்பெற்றது. இதில் 15வயதுப்பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி எஸ்.அபிராதங்கப்பதக்கத்தைக்கைப்பற்றினர். (ம-23)

# இலங்கையிலும் முதலிடுகிறார் நட்சத்திர வீரர் ஹர்பஜன் சிங்

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், இலங்கையிலும் முதலீடு செய்ய முடிவு செய் துள்ளார். ஹர்பஜன் சிங் ஏராளமான துறைகளில் முதலீடுகளைச் செய்துவருகிறார். இந்தியாவில் மட்டுமல்லாது, வேறு நாடுகளிலும் தனது இலாபத்தை பெருக்



கிக்கொள்ள முனைப்புக்காட்டும் அவர், தற்பொழுது இலங்கையையும் தெரிவுசெய்துள்ளார். அனேகமாக கிரிக்கெட் பயிற்சிக் கல்லூரிகளை அவர் இலங்கையில் ஆரம் பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் ஹர்பஜனின் முதலீடுகளில் பெரும்பாலானவை கிரிக்கெட் பயிற்சிக் கல்லூரிகளாகவே உள்ளன. (ம)



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 26
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்றுசனிக்கிழமைமாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து கிளிநொச்சி சென்.ஆன்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து தீவகத்தின் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதவுள்ளது. (ம-23)

# செஸ் விளையாடிய பின்னர் படித்தால் ஆழமாகப் பதியும் என்கிறார் ஆனந்த்

தினமும் ஒருமணி நேரம் செஸ் விளையாடிய பின்னர் படித்தால் பாடங்கள் மனதில் ஆழமாகப் பதியும் என சர்வதேச கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்துள்ளார். மதுரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆனந்த் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் - படிக்கும் பருவத்தில் கல்வியுடன் ஏதாவது ஒரு விளையாட்டில் மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். அது மூளைக்கும், உடல்ஆரோக்கியத்துக்கும் மிகவும் நல்லது. தினமும் ஒரு மணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் வரை செஸ் விளையாடினால் மனதுக்கு புத்துணர்வு கிடைக்கும். செஸ் விளையாடிய பின்னர் படித்தால், படிக்கும் பாடங்கள் மனதில் ஆழமாகப் பதியும். மாணவர்கள் மத்தியில் இன்று செஸ் விளையாடும் ஆர்வம் அதிகரித்துள்ளது. விளையாட்டுத் துறையில் செஸ்போட்டிக்கு இன்று ஒரு நல்ல இடம் கிடைத்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது. செஸ் விளையாடுபவர்கள் தொடர்ந்து பயிற்சி எடுத்தால் மட்டுமே சாதிக்க முடியும். கடின உழைப்பு, பயிற்சி இந்த இரண்டுமே வெற்றிக்கு முக்கியம். என்னுடன் எதிர்முனையில் அமர்ந்து விளையாடும் எல்லோரையும் என்னுடைய சிறந்த போட்டியாளராகத் தான் நினைப்பேன். அப்படி நினைத்தால் மட்டுமே வெற்றி பெற முடியும்- என்றார். (ம)



*இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு இடையிலான தேசியமட்ட விளையாட்டு நிகழ்வுகள் கடந்த வாரம் கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க விளையாட டரங்கில் இடம்பெற்றன. இதில் நாடு முழுவதிலும் இருந்து 14 உயர் தொழில்நுட்ப வியல் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் கலந்து கொண்டிருந்தனர். ஒட்டுமொத்த பெறுபேறுகளின் அடிப்படையில் சிறந்த விளையாட்டு வீராங்கனை என்ற விருதை யாழின் மேரி பெனினா கைப்பற்றினார். (ம)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த வீரராக ஜோகோவிக்



சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் ஒவ்வொரு வருடமும் தனது சிறந்த வீரவீராங்கனைகளை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது. அந்த வகையில் நடப்பு வருடத்தின் சிறந்த வீரராக ஜோகோவிக் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
பெடரர், ஜோகோவிக் இருவரும் கிட்டத்தட்ட சம ஆதிக்கம் செலுத்தியமையால் இந்த விருதுக்கான தெரிவு எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று கடின மானதாக இருந்ததாகவும் இருப்பினும் விம்பிள்டன் உள்ளிட்ட சர்வதேச அந்தஸ்து பெற்ற கிண்ணங்களைக் கைப்பற்றியமையால் ஜோகோவிக் இதற்கு சாலப் பொருத்த முடையவர் என்றும் சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளது. (ம)



## கட்டாயத்தில் களமிறங்குகிறது தீவுகள் இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று மெல்பேர்ண் மைதானத்தில் ஆரம்பமாகிறது.
ஏற்கனவே முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்று 1:0 என்ற அடிப்படையில் தொடரில் முன்னிலை வகிக்கிறது. இதனால் இன்றைய ஆட்டத்திலும் வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்பு ஆஸிக்கு ஏற்பட்டுள்ளது. மாறாக ஆட்டத்தை சமநிலையில் முடித்தாலோ அல்லது வெற்றி பெற்றாலோதான் தீவுகள் தொடர்ந்தும் தமது இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். எனவே தோல்வியைத் தவிர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி களமிறங்குகிறது. (ம)

## அமீருக்கு வந்த சிக்கல்

பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக வலம் வந்த அமீர் கடந்த 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்து தொடரின்போது ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் ஐந் தாண்டு காலம் தடை விதிக்கப்பட்டார். அப்போது அவருக்கு 18 வயது என்பதால் தனது 23 வயதில் தற்போது சர்வதேச அணிக்கு திரும்ப முயற்சி செய்து வருகிறார். மீண்டும் பாகிஸ்தான் சர்வதேச அணிக்கு உள்வாங்குவதற்காக அவருக்குப் பல்வேறு பயிற்சி அளிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் முடிவு செய்தது. அதன்படி தற்போது நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாடும் வீரர்களை தெரிவு செய்வதற்கான 26 பேர் கொண்ட உத்தேச அணியில் அமீரின் பெயரும் இடம்பெற்றது.
இந்த வீரர்களுக்கான பயிற்சி முகாம் கடந்த 21ஆம் திகதியில் தொடங்கியது. உள்ளூர் ஆட்டங்களில் விளையாடிய பாகிஸ்தான் அணியின் ஒருநாள் தலைவர் அசார் அலி மற்றும் மூத்த வீரர் ஹபீஸ் ஆகியோர் முகாமில் கலந்துகொள்ளவில்லை. இதற்கு காரணம் அமீர் முகாமில் கலந்து கொண்டுள்ளதால் அவர்கள் இருவரும் முகாமில் கலந்து கொள்ளவில்லை என்று பாகிஸ்தான் அணியின் முகாமையாளர் அக்பர் தெரிவித்துள்ளார். (ம)

V2 TRAVELS & TOURS
FedEx aramex
0768226243

## ரெய்னாவை அணியிலிருந்து நீக்கியிருக்க வேண்டியதில்லை என்கிறார் லக்ஸ்மன்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து ரெய்னாவை நீக்கியதால் இந்தியாவுக்கு ஒரு துடுப்பாட்ட வீரருக்கான இடம் குறைவாக உள்ளது என்று தெரிவிக்கும் லக்ஸ்மன் ரெய்னாவை அணியில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அணித்தெரிவு தொடர்பாக கருத்துத் தெரிவித்த லக்ஸ்மன் மேலும் தெரிவிக்கையில் - இந்திய அணியில் ஒரு துடுப்பாட்ட வீரருக்கான இடம் குறைவாக உள்ளது என்றே கருதுகிறேன். ரெய்னா நீக்கப்பட்டது தவறு. உலகக் கிண்ணத் தொடரில் அவர் நன்றாகவே ஆடினார். மட்டுமல்லாது ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் ரெய்னா சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். ஒருநாள் அணியிலிருந்து நீக்கப்பட்டது நிச்சயம் அவரைக் காயப்படுத்தியிருக்கும், ஆனால் இதுவே மேலும் சிறப்பாக விளையாடும் உந்துதலையும் அளிக்கலாம். யுவராஜ், நெக்ரா இருவரையும் மீண்டும் இணைத்துக் கொண்டமையை வரவேற்கிறேன். ஒருநாள் ஆட்டங்களிலும் யுவராஜ் இடம் பெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.' என்றார். (ம)

PHYSICS GROUP CLASS
Thanchi Lane, Arasady Road.
A/L 2018
தமிழ் மொழி மூலம்
English Medium
ஆரம்பம் :
28.12.2015 (திங்கள்) 5.00 pm
By :- K.Selvan B.sc(Hons)

T.P : 076 6883 394 CBA,
கதிரேசன் வீதி.

SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L 2018
கணித விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம் - 27.12.2015
ஞாயிறு காலை 7.30 a.m

| | |
|---|---|
| Chemistry | திரு.சு.சுரேஸ்குமார்<br>திரு.த.லக்ஷன்<br>திரு.க.சுபீசன் |
| Biology | திரு.D.A.ஜக்ஷன்<br>திரு.த.கஜேந்திரன் |
| Physics | திரு.ம.ஸ்பெல்மன்<br>திரு.ரவீந்திரன்<br>திரு.கருணாநிதி |
| Com. Maths | திரு.பா. மயூரன்<br>திரு.ஜெயக்குமார் |

நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P No :- 077 6116 724

மாபிள்ஸ்
ரெறாசோ
(Terrazzo)
மாபிள் பதித்தல்,
கிறனைற் (Granite)
சமையலறைத்
தட்டு,
நில வேலைகள்
நவீன முறையில்
செய்து தரப்படும்.
Since 1952
தொல்புரம்.
தொடர்புக்கு :
021 225 0186,
077 355 3372,
077 630 6733

## மீள்பரிசீலனையை ஏற்கப்போவதில்லை மனோகர் திட்டவட்டமாக தெரிவிப்பு

மீள்பரிசீலனை முறையில் தவறுகள் அற்ற துல்லியத் தன்மை கிடைக்கும்வரை அதை ஏற்கப்போவதில்லை என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவரான மனோகர் தெரிவித்துள்ளார்.
நடுவர்களின் முடிவை மீள்பரிசிலனை செய்து பார்க்கும் முறைமையை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிமுகப்படுத்திய காலத்தில் இருந்தே இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. நவீன இயந்திரங்களையும் மனிதனே இயக்குகிறான் என்பதும் மீள் பரிசீலனைக்கான தீர்ப்பிலும் துல்லியத்தன்மை என்பது கிடைக்காது என்பதும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் வாதமாக உள்ளது. இதற்கு ஏற்றாற்போல் அண்மைக்காலமாக மூன்றாம் நடுவர்களும் தவறுகள் செய்து வருகின்றனர். இதனால் மீள்பரிசீலனை தொடர்பாக பல கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைகள் அதிருப்தி தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில் இனி வரும் காலங்களிலும் மீள்பரிசீலனை முறையை இந்தியாவின் ஆட்டங்களில் ஏற்கும் எண்ணம் இல்லை என்று தெரிவித்துள்ளார் மனோகர். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் - மறுபரிசீலனைத் திட்டம் தவறுகளற்று முழுமையடையும்வரை அதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. துல்லியத்தன்மை வரும்வரை, இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமேற்படாது. எனவே இந்தியாவின் ஆட்டங்களில் மீள் பரிசீலனை முறைமை பயன்படுத்தும் எண்ணம் இல்லை. அனைவருக்கும் பொதுவான உலகக்கிண்ணத் தொடர்களிலும் ஆசியக் கிண்ணத் தொடரிலும் இது விதிவிலக்கு - என்றார். (ம)



## அயர்லாந்துக்காக மீண்டும் ராங்கின்

அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அயர்லாந்து அணிக்காக வேகப்பந்துவீச்சாளர் பொயிட் ராங்கின் மீண்டும் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.
2012ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அயர்லாந்து அணிக்காக பங்கேற்ற ராங்கின் அதன் பின்னர் இங்கிலாந்து குடியுரிமையைப் பெற்று அந்த அணிக்காக 2013ஆம் ஆண்டுக்கும் 2014ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் 11 ஒருநாள் ஆட்டங்களிலும் 4 டெஸ்ட் ஆட்டங்களிலும் பங்கேற்றிருந்தார். அதன் பின்னர், இங்கிலாந்து அணியில் வாய்ப்புக்கள் கிடைக்காத நிலையில் கடந்த வருட இறுதியில் அயர்லாந்துக்கு திரும்பியிருந்தார். சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் விதிமுறைகளின் படி ராங்கின் எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதிக்குப் பின்னர் அயர்லாந்து அணிக்காக விளையாட முடியும் என்பதால் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் அவர் அயர்லாந்துக்காக விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.